# உதயன்

32 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 316 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 22, புதன் 08.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily




ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை மிரள வைத்த பெண்

பக்கம் 15



ஜனாதிபதியாகும் தகுதி எனக்குண்டு

பக்கம் 2



பிளவர், பிரையரைச் சாடும் பீற்றர்சன்

பக்கம் 18

உயர் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான பயிலுநர் நியமனம் பெறுவோரது விவரம் 7ஆம் பக்கத்தில்.

## காலநிலை

மேகமூட்டம்/ மழை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அத்துடன் புத்தளம் முதல் காங்கேசன்துறை வரையான கடல்பிரதேசம் மற்றும் காலி முதல் பொத்துவில் வரையான கடல் பிரதேசங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை வீசக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல்சார்ந்த பிரதேசங்கள் இருள் சூழ்ந்து காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# பொறுப்புக் கூறுவதில் இலங்கை பின்னடிப்பு

## மனித உரிமைகள் குழுவின் கூட்டத்தில் நேற்று சுட்டிக் காட்டப்பட்டது

நியூயோர்க், ஒக்.8

இலங்கையில் பொறுப்புக் கூறுவது தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் ஆராய்வுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், சனல் - 4 மற்றும் இலங்கை குறித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கரிசனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில், பூகோள நிலை மதிப்பீட்டில் இலங்கை அரசு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்து சர்வதேச பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றதா என்பது குறித்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு ஜெனிவாவில் நேற்று ஆராய ஆரம்பித்துள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஐ.நா. குழுவின் உறுப்பினர், யூஜி இவோசா, "இலங்கை அரசு கூறுவதற்கு மாறாக விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுகின்றனர்; அச்சுறுத்தப்படுகின்றனர்"- என்று கூறினார். மற்றொரு

22 ஆம் பக்கம் பார்க்க

## போலியான வாக்குறுதிகளை நிறுத்த வேண்டும் இலங்கை

### சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு, ஒக்.8

போரின் பின்னர் பெரியளவிலான மனித உரிமை மீறல்கள் இலங்கையில் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், சர்வதேச சமூகத்துக்கும் - இலங்கை மக்களுக்கும் போலியான வாக்குறுதிகளை வழங்குவதை இலங்கை அரசு கைவிட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை காட்டமாகத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில், பூகோள நிலை மதிப்பீட்டில் இலங்கை தொடர்பிலான நிலைவரம் ஆராயப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே, சர்வதேச மன்னிப்புச் சபை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

"இலங்கை தொடர்பிலான மீளாய்வு கடந்த 2002 ஆம் ஆண்டு இறுதியாக இடம்பெற்றது. இதன்போது சுட்டிக் காட்டப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவை குறித்து தீர்வு காணப்படும் என்று வழங்கிய வாக்குறுதிகளை அரசு மீறியுள்ளது. இலங்கை மாற்றுக் கருத்தையும், உடன்பட மறுத்தலையும் கட்டுப்படுத்த மிகமோசமான சட்டங்களை பயன்படுத்துகிறது. சித்திரவதையும், பலவந்தமாக காணாமற் செய்யப்படுதலும் தொடர்கின்றன. இதேவேளை- கருத்துச் சுதந்திரமும் ஒன்றுகூடுவதற்கான உரிமையும் மீறப்படுகின்றது. சிறுபான்மை மதங்களுக்கு எதிராக இலங்கையில் தொடர்ந்தும் அதிகரித்துவரும் தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும்.

இலங்கை அதிகாரிகள் பல தடவை முக்கியமான மனித உரிமை விவகாரங்களுக்கு தீர்வு காண்பதாக உறுதியளித்துள்ளனர். ஆனாலும் அவர்கள் நடவடிக்கைகள் எதனையும் எடுத்ததில்லை. ஐ.நா. மனித உரிமைக் குழுவின் ஆய்வு, இதனை சுட்டிக்காட்டுவதற்கும், அரசு நேர்மையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அழுத்தம் கொடுப்பதற்குமான நல்ல சந்தர்ப்பமாகும்.

இலங்கை குறித்து 2002 ஆம் ஆண்டு இறுதியாக ஆய்வு செய்யப்பட்ட பின்னர், மனித உரிமை மீறல்களின்

22 ஆம் பக்கம் பார்க்க



பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுப் பக்திபூர்வமாக நடைபெற்றது. மு.ப.10 மணிக்கு தேரில் ஆரோகணித்து அருள்பாலித்த ஆழ்வார், மு.ப. 11 மணியளவில் இருப்பிடத்தை அடைந்தார்.
(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்) (ற-173)

## இந்திய மீனவர்கள் 4 பேர் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

நெடுந்தீவுக்கு அருகே நடுக்கடலில் தத்தளித்த இராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேரை இலங்கை கடற்படையினர் நேற்றுமுன்தினம் இரவு மீட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரத்தில் இருந்து நேற்றுமுன்தினம் மீன்பிடிக்க சென்ற மீனவர்களின் படகில் ஒரு படகு பழுதாகிய நிலையில் நெடுந்தீவு அருகே தத்தளித்துக்கொண்டிருந்த சமயம் அங்கு சென்ற இலங்கை கடற்படையினர் அவர்களை மீட்டனர் என்றும், படகும் நெடுந்தீவுக்கு கொண்டு வரப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ஜெயலலிதாவுக்கு பிணை மறுப்பு

### கர்நாடக - தமிழக எல்லையில் பதற்றம்



சென்னை, ஒக்.8

சொத்துக்குவிப்பு வழக்கில், தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிணை மனுவை கர்நாடக உயர் நீதிமன்றம் நிராகரித்தது. அவருடன் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கும் பிணை வழங்க நீதிமன்றம் நேற்று மறுத்துவிட்டது.

அத்துடன் ஜெயலலிதாவின் தண்டனையை ரத்துச்செய்யக் கோரும் மனு

22 ஆம் பக்கம் பார்க்க

## 'பட்ஜெட்டுக்கு' அனுமதி கோரி வடக்கு அமைச்சரவை கடிதம்

### ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.8

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான அனுமதியைக் கோரி வடக்கு மாகாண ஆளுநருக்கு, வடக்கு மாகாண அமைச்சரவை நேற்று கடிதம் அனுப்பியுள்ளது. அத்துடன் வடக்கு மாகாண வரவு - செலவுத் திட்டத்தை அடுத்த மாத இறுதியில் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதன்போதே மேற்படி முடிவுகள் எட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணசபைக்கு

22 ஆம் பக்கம் பார்க்க

## அறிவிப்பின் பின்னர் பேச்சுக்கு தயார்

கொழும்பு, ஒக்.8

ஜனாதிபதி பொது வேட்பாளர் யார் என்பது தொடர்பில் உறுதியாக அறிவிக்கும் பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்துரையாட தயார் என பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க



## உள்ளக விசாரணைக்குழுவின் இடைக்கால அறிக்கை டிசெம்பரில்

### நவம்பர் 2, 3, 4, 5ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் அமர்வுகள்

கொழும்பு, ஒக்.8

காணாமற்போனோர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் உள்ளக விசாரணையை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழு, தனது இடைக்கால விசாரணை அறிக்கையை எதிர்வரும் டிசெம்பரில் வெளியிடவுள்ளது.

அடுத்த மாதம் 2, 3, 4, 5 ஆகிய திகதிகளில் முல்லைத்தீவில் நடைபெறும் உள்ளக விசாரணை முடிவடைந்த பின்னர் அறிக்கை இறுதிப்படுத்தல் செய்யப்படும் என்று குறித்த ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

விசாரணையின் முன்னேற்றம், அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? இந்த விடயத்தில் அரசின் வகிபாகம் என்ன? என்பவை உட்பட மேலும் சில அம்சங்கள் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

காணாமற்போனோர் தொடர்

22 ஆம் பக்கம் பார்க்க

# இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒழிக்க இந்து அமைப்புக்களோடு பேச்சுகள்

## பொதுபல சேனா அமைப்பு கூறுகின்றது

கொழும்பு, ஒக்.8
இஸ்லாமிய தீவிரவாதம் பிராந்தியத்தில் பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவில் உள்ள இந்து தேசியவாத அமைப்புகளுடன் கூட்டணி ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது. அது குறித்த பேச்சு நடைபெற்று வருகின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளது பௌத்த கடும் போக்கு அமைப்பான பொதுபலசேனா.
இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அந்த அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர்,
"இந்தியாவில் உள்ள ஆர்.எஸ்.எஸ். என்னும் அமைப்புடனே இந்தப் பேச்சு நடைபெற்று வருகின்றன. அந்த அமைப்பின் உயர் மட்டத் தலைவர்கள் பலர் பேச்சில் கலந்துகொண்டுள்ளனர். இதன்மூலம் இந்தப் பிராந்தியத்தில் பௌத்த - இந்து சமாதான வலயத்தை உருவாக்க முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



## ஐக்கிய அரபு ராச்சியத்தின் விஸா நிலையம் திறப்பு

கொழும்பு, ஒக்.8
ஐக்கிய அரபு ராச்சியம் தமது நாடுகளின் எல்லைக்கு வெளியில் முதலாவது நுழைவிசைவு அனுமதி மத்திய நிலையத்தை கொழும்பில் திறந்துள்ளது. உதவி தூதுவர் பிரிவும், நுழைவிசைவு அனுமதிமையமும் இந்தக் காரியாலயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய அரபு ராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சு பதில் செயலாளர் மொஹம்மட் மிர் அல் ரய்சி இந்த நிலையத்தை திறந்து வைத்துள்ளார். குறித்த நிகழ்வில் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் கலந்துகொண்டார்.
இலங்கைக்கும் ஐக்கிய அரபு ராச்சியத்துக்கும் இடையில் தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் காரியாலயம் திறக்கப்பட்டது என்று ஐக்கிய அரபு ராச்சிய வெளிவிவகார அமைச்சு பதில் செயலாளர் தெரிவித்தார்.
இருதரப்பு தகவல் பறிமாற்றல், வாடிக்கையாளர் சேவை மேம்படுத்தல், பணியாளர்களின் வசதிகளை மேம்படுத்தல் போன்ற விடயங்களை கையாள்வதற்கு இந்த காரியாலயம் உதவியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# வரையறுக்கப்பட்ட கட்சியாக செயற்படாது சுதந்திரக் கட்சி

## இப்படிக் கூறுகின்றார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக்.8
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு இனத்தவருக்கோ அல்லது மதத்தினருக்கோ மாத்திரம் வரையறுக்கப்பட்ட கட்சியாக செயற்படவில்லை என்று அதன் தேசிய அமைப்பாளரும், அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொழும்பு கிழக்குக்கான காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



"2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட தருணத்தில் இருந்து கிரமமான மேம்பாடுகள் காணப்பட்டுள்ளன. சபாநாயகர் பதவி முதல் அமைச்சுப் பதவிவரை கிடைக்காத நிலையில் இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை காலப்போக்கில் பெற்றுக்கொண்டது.
உள்ளூராட்சி மன்றங்களிலும் எந்தவொரு கட்சியும் பெற முடியாத அளவில் பெரும்பான்மை பலத்தை எமது கட்சி பெற்றுக்கொண்டது"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

# ஜனாதிபதி பதவி வகிப்பதற்கான தகுதி இருக்கின்றது

## அமைச்சர் மேர்வின் சில்வா கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.8
நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்குரிய தகுதிகள் தமக்குண்டு என்று தெரிவித்துள்ளார் பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடாவிட்டால் அந்தப் பதவிக்காக போட்டியிடக் கூடிய தகுதி தமக்கு காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"கட்சிக்குள் எனக்கு இருந்த பலம் குறைந்து விட்டது. சில புதியவர்கள் தம்மை வெட்டப் பார்ப்பதாகவும், தம்மை ஓரம் கட்டும் முயற்சியில் தீவிரம் காட்டி வருகின்றனர். பண்டாரநாயக்கா குடும்பத்தினரும், ராஜபக்ஷ குடும்பத்தினரும் எம்மை நேசிக்கின்றனர். ராஜப்க்ஷ குடும்பத்தினர் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடாத சந்தர்ப்பத்தில் அதற்கான சிறந்த தகுதிகளை உடைய ஒரே ஒருவர் நானே. என்னை ஓரம் கட்ட நினைப்பவர்கள் முயற்சிப்பவர்கள் பற்றி இப்போது அம்பலப்படுத்த முடியாதுள்ளது. நேரம் வரும்போது அவர்கள் பற்றிய விவரங்களை வெளியிட உள்ளேன். கட்சிக்குள் என்னை ஒதுக்க நினைப்பவர்கள் பற்றி கருத்து வெளியிட்டால் அது தமது அரசியல் வாழ்க்கைக்கு பாதக நிலைமைகளை ஏற்படுத்தக் கூடும்"- என்று தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## விபத்துக்கள்

கோண்டாவில்

### வீதி விபத்தில் இருவர் காயம்

பொலிஸ் மோட்டார் சைக்கிளும் குடும்பஸ்தரது மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இருவரும் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டள்ளனர். கோண்டாவில் டிப்போவை அண்மித்து நேற்று முற்பகல் இந்த விபத்து நடந்துள்ளது. தெல்லிப்பழை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுஜீவன் என்ற பொலிஸ் உத்தியோகத்தரும், அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த க.பதிவர்ணன் (வயது-51) ஆகியோரே விபத்தில் படுகாயமடைந்தனர். (ற-4)

கோண்டாவில்

### மாட்டு வண்டியுடன் மோதி ஒருவர் காயம்

இரவுநேரம் வீதியில் சென்றுகொண்டிருந்த மாட்டு வண்டியின் பின்புறத்தில் மோதி, ஒருவர் தொடை எலும்பு முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வல்லைப்பலை வீதியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்றவரே பின்புறமாக மாட்டு வண்டியுடன் மோதியுள்ளார். (ற-4,ரி)

### நீரில் மூழ்கி சிறுவன் சாவு

அட்டாளைச்சேனை, கோணாவத்தை முகத்துவாரம் பகுதியில் சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். மற்றுமொரு சிறுவன் மீட்கப்பட்டு வைத்தியசால்லயில் சேர்க்கப்பட்டுள்ளான் என்று- பொலிஸார் தெரிவித்தனர்.
அட்டாளைச்சேனை, 7ஆம் பிரிவைச் சேர்ந்த எம்.எச்.அஸ்மிர் என்ற 17 வயதுச் சிறுவனே உயிரிழந்துள்ளான். முகத் துவாரம் பகுதிக்கு தனது நண்பர்களுடன் குளிக்கச் சென்ற மேற்படி இருவரும் நீரில் மூழ்கியுள்ளனர் என்றும்- ஒருவரை மீனவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர் என்றும்- தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்த சிறுவனின் சடலம் அட்டாளைச்சேனை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ற)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர சக்கரத்தாழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்று முடிந்தது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அதில் கலந்துகொண்டு ஆழ்வார் அருள் பெற்றனர்.











Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 22 புதன் (08.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 316

# மஹிந்தவை பார்க்க வராவிடின் சமுர்த்தி முத்திரை நிறுத்தப்படும்

## பயனாளிகளுக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 8

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும்போது, அவரது கூட்டத்தில் பங்கெடுப்பதற்காக சமுர்த்திப் பயனாளிகளை வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் பங்கெடுக்காவிட்டால் எதிர்காலத்தில் அவர்களது சமுர்த்தி முத்திரை நிறுத்தப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.**

இதன்போது துரையப்பா விளையாட்டரங்கில் அவர் உரையாற்றவுள்ளார். அத்துடன் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பங்கெடுக்கவுள்ளார். மேலும் பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான யாழ்.தேவி ரயில் சேவையையும் ஆரம்பித்து வைப்பார்.

இந்த நிகழ்வுகளில் பொது மக்களைக் கட்டாயப்படுத்திக் கலந்து கொள்வதற்குக் கொழும்பு அரசின் அமைச்சர் ஒருவர் யாழ்.மாவட்டத்தில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சாவகச்சேரி ரயில் நிலையத் திறப்பு மற்றும் யாழ்ப்பாண ரயில் நிலையத் திறப்பு என்பவற்றுக்கு மக்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக வடக்கு மாகாண அபிவிருத்திக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கெடுப்பதற்காக வீரசிங்கம் மண்டபத்துக்கு வருகை தரும்போது, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இடம்பெற்ற பகுதியில் மக்களை ஒன்று திரட்டி ஜனாதிபதிக்கு ஆதரவாகக் கோஷம் எழுப்பவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக 70 பஸ்களில் பொதுமக்கள் ஏற்றி வரப்படவுள்ளனர். பெரும்பாலானவர்கள் சமுர்த்திப் பயனாளிகள் என்றும், அவர்களை மிரட்டியே அழைத்து வருவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## கிழக்கில் ஆட்சியைக் கவிழ்க்க மு.கா. - கூட்டமைப்பு கூட்டு சதி

### சாடுகிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, ஒக்.8

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசின் ஆளுகைக்குட்பட்ட கிழக்கு மாகாணசபையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் முயற்சிக்கின்றன என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையி லேயே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அத்துடன், ஐந்தாம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி விவகாரம் குறித்தும் இதன்போது அவர் கருத்து வெளியிட்டார்.

அதாவது, புலமைப்பரிசில் பரீட்சையில் 22 மாவட்டங்களில் தமிழ்மொழி மூல மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். ஆனால், 4 மாவட்டங்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்காக மட்டும் கூடும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

### வடக்கில் இரு வருடங்களாக நடக்கவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.8

வடக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாகப் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் கூட்டப்படாத நிலையிலும், மன்னார் மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒரு மாத காலமாக நடத்தப்படாத நிலையிலுமே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. வடக்கிலுள்ள பிரதேச செயலகங்களில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இணைத் தலைமையின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய பின்னர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## புதிதாக உள்ளூர் பொதிகள் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.8

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதம தபாலகம் புதிதாக உள்ளூர் பொதிகள் விநியோக சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

நாளை வியாழக்கிழமை யாழ்.வருகை தரும் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க பிரதம தபாலகத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்த உள்ளூர் பொதிகள் விநியோக சேவையை ஆரம்பித்து வைப்பார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு இழுத்தடிப்பின் பின்னர் நியமனம்

### அமைச்சர் ஒருவரின் தலையீட்டால்

யாழ்ப்பாணம், ஒக்.8

உயர் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கான பயிலுநர் நியமனம் வழங்குவதற்கு ஒரு வார காலத்துக்கு முன்னர் அனுமதி கிடைத்திருந்தும், கொழும்பு அரசின் அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நியமனம் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்துக்கான நேர்முகத் தேர்வுக்கு உயர் தொழில்நுட்ப பட்டதாரிகளும் தோற்றியிருந்தனர். இருப்பினும் நியமனம் வழங்கப்படும்பொழுது அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். வடக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அவர்களுக்கான நியமனங்கள் 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்தது.

இதனை எதிர்த்து வடக்குப் பட்டதாரிகள் நீதிமன்றத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஊடாக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதனால், உயர் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு வடக்கில் நியமனம் வழங்கக் கொழும்பு அரசு இணங்கியிருந்தது. கடந்த வாரம் இதற்கான அனுமதி யாழ்.மாவட்ட செயலகத்துக்குக் கிடைத்திருந்தும் கொழும்பு அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் அது பிற்போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் உயர் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு இன்று மாலை 3 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

(22ஆம் பக்கம் பார்க்க)

## பழுதான மீன்கள் நேற்று சின்னக்கடையில் சிக்கின



யாழ்ப்பாணம், ஒக்.8

சின்னக்கடை மீன் சந்தையில் விற்பனை செய்வதற்கு வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி பழுதடைந்த மீன்கள் யாழ்.மாநகர சபைச் சுகாதாரப் பகுதியிடம் சிக்கிக் கொண்டன.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை ஒரு தொகுதி பழுதடைந்த ஒட்டி மீன்களை வியாபாரி ஒருவர் சந்தைக்கு எடுத்து வந்து விற்பனை செய்ய முற்பட்டார்.

இவ்வேளை சந்தையில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட மாநகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா குறித்த பழுதடைந்த மீன்களைக் கைப்பற்றினார்.

மக்கள் பாவனைக்கு உதவாத இந்த மீன்கள் உடனடியாகக் காக்கைதீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் இந்த பழுதடைந்த மீன்களை விற்பனை செய்ய

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். – கொழும்பு வழித் தட அனுமதி இன்னுமில்லை தனியார் பஸ்களுக்கு

### 40 நாள்களுக்கு மேலாக அவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். - கொழும்பு பணியில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான வழித்தட அனுமதிப் பத்திரம் செப்ரம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னரே வழங்கப்பட்டுவிடும் என்று அமைச்சர்களான குமார வெல்கம, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கடந்த மாதம் கூறியிருந்தபோதும் இதுவரை அது வழங்கப்படவில்லை.

தம்மைச் சமாளிப்பதற்காகச் சாட்டுப் போக்குக் கூறிக் காலத்தை இழுத்தடித்து வருகிறார்கள் என்று பாதிக்கப்பட்டுள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள பஸ் உரிமையாளர்கள், மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள பஸ் உரிமையாளர்கள் கொழும்புக்குச் சென்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் கலந்துரையாடியி ருந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள பஸ் உரிமையாளர்கள் அமைச்சர் டக்ளஸை யாழ்ப்பாணத்திலும் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்பட்டது.

கொழும்பில் கடந்த மாதம் அமைச்சர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் அந்த மாதம் முடிவடைவதற்கு முன்னரே பஸ் போக்குவரத்துக்கான வழி அனுமதியைப் பெற்று வழங்குவதாகக் கூறப்பட்டது.

கேள்விகோரல் மூலமாகவே அதனை வழங்க முடியும் என்று கூறியதனால் பலரும் அதற்கு விண்ணப்பித்தனர். விரைவில் போக்குவரத்து அனுமதி வழங்கப்படும் என்று அமைச்சர்கள் மாத்திரமன்றித் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினரும் கூறியிருந்தனர்.

ஆனால் இதுவரை அவர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த கடலட்டைகள், கடற்குதிரை மீட்பு

சென்னை, ஒக். 8

இராமநாதபுரத்திலிருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான கடல் அட்டைகள், கடல் குதிரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி கடற்கரைப் பகுதியில் கடல் அட்டைகள், கடல் குதிரைகள் கடத்த இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்ததையடுத்து நேற்று அதிகாலையில் வனத்துறையினர் தொண்டி கடற்கரைப் பகுதியில் கண்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கூட்டமைப்பு - புலம்பெயர் தமிழர் நெருங்கிச் செயற்படவேண்டும்

லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் முன்னணி புலம்பெயர் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவை முதல் தடவையாக ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

கடந்த காலங்களில் - 2009 யுத்தத்தின் பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டுப் பிரிவினையை நிராகரித்து ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காண்பதற்கான அவசியத்தை வலியுறுத்தியது. தனது கோரிக்கைகளை முன்வைத்து அஹிம்சை வழியிலான சாத்வீகப் போராட்டங்களை நடத்தப்போவதாக அறிவிப்பு விடுத்தது. ஆனால் யுத்தத்தின் பின்னரான புலம்பெயர் அமைப்புகளின் சிந்தனைகள், நோக்கங்கள் சற்று வேறுபட்டுக் காணப்பட்டன. அதனால் கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் ஒன்றிணைந்து செயற்பட முடியாத நிலைமை உருவாகியது. இப்படியான நிலையில் நீதி, மீளிணக்கம், பேச்சுகள் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியிருப்பது ஒரு முக்கிய திருப்பமாகும். ஒரே நோக்கத்துடன் புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளரும் தந்திரோபாய செயற்பாடுகளுக்கான பணிப்பாளருமான சுரேன் சுரேந்திரன் சென்னைக்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டிருந்த சமயம் டெக்கான் குரொனிக்கல் பத்திரிகைக்குத் தெரிவிக்கையிலேயே ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வுகாண்பதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டபோது - தமிழ் மக்கள் அரசியல் ரீதியில் பலவீனப்படுத்தப்பட்டபோது அவர்களுக்குப் பலமாக எஞ்சியிருந்தவை புலம் பெயர் தமிழர் அமைப்புகள்தான். தாம் இயங்கும் நாடுகளில் இந்த அமைப்புகள் பெரும் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்தன. கனடா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான போக்கைக் கடைப்பிடிப்பதற்கு புலம்பெயர் தமிழர் அமைப்புகளே பிரதான காரணம். ஜனாதிபதி பிரிட்டனுக்குச் சென்று நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ள முடியாத நிலைமை இன்னும் இருந்து வருவதை நாம் மறுக்க முடியாது. ஒரு கட்டத்தில் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் பேச்சுகளை நடத்தி அவற்றின் எதிர்ப்பைக் கைவிடச் செய்யும் முயற்சியிலும் இலங்கை அரசு கவனம் செலுத்தியது. இந்த முயற்சிகள் பயனற்றுப் போயின. இதன் பின்புதான் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்குத் தடைவிதிக்கப்பட்டது. அமெரிக்கா, கனடா, பிரிட்டன், நோர்வே, இத்தாலி, சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் செயற்படும் 16 தமிழர் அமைப்புகளை வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புகளாக இலங்கை அரசு பிரகடனம் செய்தது. அத்துடன் இலங்கையிலிருந்து இந்த அமைப்புகளுடன் தொடர்பு வைத்துக்கொள்பவர்களும் அவற்றின் நிதியுதவிகளைப் பெறுவோரும் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் இலங்கை அரசு அறிவித்தது. இப்படியான நெருக்கடிகள் உள்ளபோதிலும் புலம் பெயர் தமிழர் அமைப்புகள் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு என்பது அவற்றின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றமாகும். யுத்தம் முடிவுடைந்து ஐந்து வருடங்கள் கழிந்தும் இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. அரசியல் பேச்சுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தால் அபகரிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் குடிப்பரம்பலைப் பாதிக்கச்செய்யும் நோக்கத்துடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. இராணுவத்தின் நெருக்குவாரங்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்கிறார்கள். இவை உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினைகள். இவற்றுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. ஆகவே இத்தகைய நெருக்கடியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்த வேண்டியது புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் முக்கிய கடமையாகும்.

# மென்மைப்போக்கா?

## இலங்கையிடம் அமெரிக்காவுக்கா...? அப்படி ஒன்றும் இல்லையே!

- நட்புறவான உரையாடல் தவறுதலாக அர்த்தம் கொள்ளப்பட்டது.
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் பிரதமர் மோடி கூறியது என்ன?
- அதிலும் அரசின் அறிக்கையில் மாறுபாடு.



சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து கோகுலன்

நியூயோர்க்கிலிருந்து நாடு திரும்பிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை தமது யு.பி.எப்.ஏ. முன்னணித் தலைவர்களுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கக் காணப்பட்டார். அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோன்கெரியுடன் தாம் நடத்தியிருந்த பேச்சுக்கள் குறித்து விசேஷமாக அவர்களிடம் எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார். அமெரிக்கா இப்போது இலங்கையின் நிலைப்பாடு குறித்து உயர்வாக எண்ணத் தொடங்கியிருக் கிறது. மற்றும் அதன் போக்கில் ஒரு மென்மை காணப் படுவதாக இருக்கிறது என்றும் கூறினார். இந்தக் கருத்துக் களினால் சில அமைச்சர்கள் குதூகலமுற்று இருந்தார்கள். ஆனால் அந்த உற்சாகமும் குதூகலமும் அதிக நேரம் நீடிக்க வில்லை.

ஆம் இலங்கை தொடர்பாக அமெரிக்கா ஒரு மென்மையான நிலையைக் கடைப்பிடிப்பதாக கூறிக் கொண்ட அரசு தரப்பினரின் கூற்று முழுக்கவும் தவறானது என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது. ராஜபக்ஷவுடனான பேச்சுக்களை நிறைவான சுமுக நிலையில் அமெரிக்க அமைச்சர் நடத்தியிருந் ததை அவர்களின் மென்மையான போக்கு என்பதாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை வொஷிங்டனிலுள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் ஜென் பிசாக்கி, ஊடகவியலாளர்களுடன் நடத்திய உரையாடலின் போது இது பற்றி பின்வருமாறான கேள்வியொன்று கேட்கப்பட்டது. இலங்கை விடயத்தில் அமெரிக்கா ஒரு மென்மைத் தன்மையைப் பின்பற்றுவதாக அமைச்சர் கெரி தெரிவித்திருந்தாரா? அங்குள்ள மனித உரிமை பிரச்சினையின் பாரதூரத் தன்மையைக் குறைத்து மதிப்பிடுவதற்கான அடையாளம் எதையும் வெளிப்படுத்தினாரா? என்பதாக.

பேச்சாளர் பிசாக்கி அளித்த பதில், முற்று முழுதாக அப்படி கிடையாது. அப்படியான செய்தியை நானும் பார்த்தேன். ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தின் புறநிலையில் இலங்கை ஜனாதிபதியுடன் அமைச்சர் பேசினார் என்பது உண்மைதான். அதன் நோக்கம் என்னவாக இருந்தது என்றால் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகளை மாற்றமடையவில்லை மற்றும் நிச்சயமாக அது மென்மைப் படுத்தப்படவில்லை என்பதை தெரிவிப்பதாகும்.

உண்மையில் இலங்கையுடனான எமது நட்புறவு அதன் முழு பரிமாணத்தையும் அடைவதாக இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால் இலங்கை அரசானது அங்குள்ள பல்வேறு இனங்கள் மற்றும் சமயம் சார்ந்த சமூகங்கள் நிலையான அமைதி மற்றும் செழிப்பான வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளைக் கட்டியொழுப்புவதன் மூலமே அது சாத்தியமாகும். அதைத்தான் எமது ராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி இலங்கை ஜனாதிபதிக்கு ஆணித்தரமான முறையில் தெளிவாக எடுத்துக் கூறினார். தொடர்ந்தும் போரில் ஈடுபட்டிருக்கும் நாடுபோல் அல்லாமல் சகல குடிமக்களையும் உள்ளடக்கிய எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்று சுட்டிக்காட்டினர். ஆக இதில் முழுக்கவும் எதிர்நிலையான நோக்கமே இருந்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி அமெரிக்க ராஜாங்க அமைச்சரோடு மட்டுமே ஐ.நா.பொதுசபை மாநாட்டின் புறநிலையில் கலந்துரையாடியுள்ளார் என்பதில்லை. அதைவிட மிக முக்கியமான ஓர் உரையாடல் இந்திய பிரதம மந்திரி நரேந்திர மோடியுடன் 25 நிமிட நேரம் நடைபெற்றுள்ளது.

இலங்கை அதிபருடன் இந்திய பிரதமர் கூறிய மிக முக்கியமான விடயம் யாதெனில் ராஜபக்ஷ அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த வேண்டும் என்தாகும் என்கிறார்கள் புதுடில்லியிலுள்ள விடயம் அறிந்தவர்கள். இலங்கை தரப்பிலான ஓர் அறிக்கையின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று பிரதமர் மோடி கூறியதாக இருந்த போதிலும் இந்தப் புதுடில்லி வட்டாரங்களைப் பொறுத்த வரை இந்தியாவின் நிலைப்பாடு திட்ட வட்டமாக அப்படி இருக்கவில்லை என்பதாகும். கடந்த ஒகஸ்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமர் மோடியைச் சந்தித்த போது அரசுடன் அவர்களை நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துமாறு மோடி கூறியிருந்தார் என்கிறார்கள் அவர்கள்.



இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் பாதுகாப்பு ஒத்துழைப்புகுறித்து இந்தியாவின் ஆழமான பாதுகாப்புக் கவலைகள் தோன்றியிருப்பதாகவும் நரேந்திர மோடி இலங்கை அதிபரிடம் குறிப்பிட்டதாகத் தெரிகின்றது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதியிலிருந்து 13ஆம் திகதிவரை சீன போர்க் கப்பல் 861 மற்றும் நீர்மூழ்கி 329 ஆகியவை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றமையை அவர் சுட்டிக் காட்டியதாகவும் தெரிகின்றது. சீன உதவியில் கட்டப்பட்டுள்ள கொழும்புத் துறைமுகத்தின் சர்வதேச கொள்கல முனையில் அவை நங்கூரமிட்டிருந்துள்ளன.

குறித்த கடற்படைக் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்துக்கு வந்து சென்றுள்ளமை 1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறும் செயலாகவிருக் கின்றது என இந்தியப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த இலங்கை இந்திய உடன்படிக்கையின் சில பகுதிகள் இரு நாட்டு தலைவர்களுக்குமிடையில் பகிர்ந்துகொள்ளப்பட்ட கடிதங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் திருகோணமலைத் துறைமுகம் உட்பட துறைமுகங்கள் எதுவும் இராணுவ பாவனைக்கு - இந்தியாவின் நலன்களைப் பாதிக்குமெனக் கருதப்படின் அனுமதிக்கப்படலாகாது.

அந்த இரு சீனக் கடற்படை கப்பல்களும் மரியாதையின் நிமித்தம் வந்து சென்றதாக ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார்.

இலங்கைக்கு இந்தியா வழங்கிவரும் உதவித் திட்டங்கள் குறித்தும் நியூயோர்க் கலந்துரையாடல்களில் இடம்பெற்றிருந்ததாக இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் சையத் அக்பருதீன் தெரிவித்திருந்தார். இந்திய மீனவர்கள் 76 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடயம் ஒரு மனிதத்துவ பிரச்சினையென்றும் அதனை உணர்வு பூர்வமாக அணுக வேண்டியது அவசியம் என்றும் மோடி தெரிவித்ததாகத் தெரிகின்றது.

சிறையிலுள்ள இந்திய மீனவர்கள் அனைவரையும் விடுவிக்கும்படி உத்தரவிடப் போவதாக ஜனாதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை அரசின் பங்காளிக் கட்சித் தலைவர்களிடம் கூறியிருந்தார்.

நியூயோர்க்கில் நிகழ்ந்துவிட்ட சம்பவம் ஒன்று ஜனாதிபதி ராஜபக்ஷவுக்குப் பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது. அது முதலில் சில மணி நேரம் இரகசியமாக இருந்த போதிலும் பின்னர் பகிரங்கமாகியது. சமூக ஊடகங்களில் பெரும் பரபரப்புடன் பேசப்பட்டு பரகசியமாகியது.

அதுதான் இங்கிலாந்திலுள்ள இலங்கைத் தூதுவர் கிறிஸ் றோனிஸ், வெளியுறவு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸினால் கன்னத்தில் அறையப்பட்ட சம்பவம்.

# இளமையில் கையாளும் வாசிப்பு பழக்கமே

## ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளமாகும்



சி.நற்குணலிங்கம்

எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் ஒருவருக்குள்ள இயலுமையைக் குறிப்பதாக எழுத்தறிவு என்பதுள்ளது. எழுத்தறிவு என்பது அத்தியாவசிய திறனாகவும் கொள்ளப்படுகின்றது. அத்துடன் மனித வாழ்வியலுக்கும் அடிப்படையானதாகும். உலகில் ஐந்து பேருக்கு ஒருவர் எழுத்தறிவற்றவராக உள்ளனர். இதில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களாக உள்ளனர். இலங்கையானது வளர்முக நாடுகளில் சிறந்த எழுத்தறிவைக் கொண்ட நாடாகவுள்ளது. இலங்கையின் எழுத்தறிவு வீதாசாரம் 96 ஆகவுள்ளது. இதனைத் தக்க வைக்க சிறார்களின் பங்கு முக்கியமானதாகும். ஏனெனில் இன்றைய சிறார்களில் வாசிக்கும் பழக்கம் அருகியே வருகின்றது.

மாற்றங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் 21ஆம் நூற்றாண்டுக்கு முகம்கொடுக்கக் கூடிய இன்றைய காலத்தின் தேவைகளை ஒட்டியதான உயர்ந்த விழுமியங்களையும் சிறந்த நியமங்களையும் விருத்தி செய்யக் கூடியதான நூல்களை வாசிப்பதன் மூலம் ஒருவன் முழுமனிதனாகின்றான். நன்றாக வாசிப்பவன் நடமாடும் நூலகமாவான். எனவே வாசிப்புக்கு நேரத்தை ஒதுக்குங்கள். இது சிறுபராயம் முதல் ஆரம்பிக்கப்படுவதே சிறப்பானதாகும் என்பதைப் பெற்றோர்கள் முதலில் உணரவேண்டும்.

தனி மனித வலுவூட்டலுக்கும் சமூக விருத்திக்கும், தரமான கல்வியைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்காலக் கல்விக்கான வழித் தடமாகவும், பொருளாதார அபிவிருத்திக்கும் தொடர்பாடற் திறன் விருத்திக்கும், அறிவு விருத்திக்கும், மொழி விருத்திக்கும், மொழிப் பற்றுக்கும், சமூகத்துடனான ஆரோக்கிய பங்குபற்றலுக்கும், வேலையினை மேற்கொள்வதற்கான திறனாகவும், வன்முறைகள் குறைவதற்கும், அறிவுப் பரிமாற்றத்துக்கும் வாசிப்பு உதவுவதாக அமைந்துள்ளது. ஒரு நாட்டின் முதுகெலும்பு இன்றைய சிறுவர்களே. இறுதியில் நாட்டை ஆளுபவர்களும் அவர்களே. எனவே இவர்கள்மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்து இவர்களை ஆளுமை மிக்கவர்களாக மாற்ற வேண்டும். இது ஒளிமயமான எதிர்காலத்துக்கு எம்மை இட்டுச் செல்லும்.

அமெரிக்காவிலுள்ள மனோதத்துவ சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆயுள்மூலம், தொடர்ச்சியான முறையில் இசையைக் கற்றுவருவதன் மூலம் வாசிப்பு ஆற்றல் உட்பட மொழி விருத்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் மூளையில் மாற்றம் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ஆய்வுக்காகப் பாடசாலை மாணவர்களே பயன்படுத்தப்பட்டுள்ளனர். எனவே இசையும் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்த உதவுகின்றது.

பலதுறைகளைச் சார்ந்த நூல்களை, சஞ்சிகைகளை, பத்திரிகைகளை தீர்க்கமாக, பொருள் உணர்ந்து, பரந்துபட்டு வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிப்பதன் மூலம் பண்பட்ட மனிதனாக மிளிர, திறன்களை மனப்பாங்குகளை விருத்தி செய்ய, ஓய்வுநேரம் பயனுள்ளதாக அமைய, உளநலம் ஏற்பட, சமூகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட புதிய தேடலுக்குப் புதிய சிந்தனைக்கு.பகுத்துணரும் பண்பைப் பெற்றுக்கொள்ள பலதுறைசார் அறிவினைப் பெற அறிவுத்திறன்மிக்க சமுதாயம் கட்டியெழுப்பப்பட, கிரகித்தல் திறன் சிந்தனையாற்றல் வளர்ச்சியடைய, நமது வாழ்க்கைப் போக்கில் சாதகமான மாறுதல்களைப் புகுத்திக் கொள்ள, மாற்றங்களுக்கு எம்மைத் தயார் செய்துகொள்ள முடியும். இந்த அனுகூலங்கள் யாவையும் பெற பாடசாலைக் காலமே அடித்தளக்காலமாகும். எனவே இளமையில் கையாளும் வாசிப்பு பழக்கமே மனிதனது பூரண வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றதை உணர்ந்து செயற்படல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவனுக்கும் வாசிப்பானது முக்கியமானதொன்றாகும். வாழ்நாளில் வாசிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளாத மாணவன் அறியாமையினால் உழல்வான். எல்லா மாணவர்களும் வாசிப்புக்கு உகந்த கௌரவத்தை வழங்க வேண்டும். மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை கைக்கொண்டால் அவர்கள் எல்லையற்ற அறிவுக் கடலில் நீந்தலாம். வாசிக்கும் திறனும் கற்றலின் ஒரு பகுதி என்பதை மாணவர்கள் புரிந்து செயற்படவேண்டும். மேமேலாட்டமாக வாசிப்பது மூளையில் நீண்ட நாள்களுக்கு நிற்காது. இதயத்தில் பதித்துக் கொள்ளும் வகையில் ஆழமாகவும் நிதானமாகவும் வாசிக்கும் பழக்கத்தை மாணவர்கள் கொண்டிருக்க வேண்டும்.

வாசித்தல் தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படும் காரியமாக ஆகிவிடுவது சமூகத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துவிடும். வாசிப்பு மூலம் அறிவு சார் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் ஆரோக்கியமான சமூகம் தோன்றவும் வழிசமைக்கின்றது. அனுபவமே வாழ்க்கையின் ஆசான் எனவும் குறிப்பிடலாம். மனிதனை இந்த வாழ்க்கையின் அனுபவங்களே செம்மைப்படுத்துகின்றன. எல்லா மனிதர்களுக்கும் வாழ்வு பற்றிய வாழ்வுக்கு அவசியமான அனுபவங்கள் கிடைப்பதில்லை. கிடைக்கவும் முடியாது. ஆனால் நூல்களினூடாக அனுபவப் பகிர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை நோக்குதல் வேண்டும். இத்தகைய அனுபவப் பேறுகளின் நுழைவாயில்களாகவும் நூல்கள் அமைந்துள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது.

பலர் வாசிப்பு அனுபவம் என்கிற சுகங்களை இன்றும்தான் அறியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும். கல்வியில் ஈடுபடும் இளைய தலைமுறையினர் வாசிப்பில் ஈடுபடுவதை விட தொலைக் காட்சியால் வளர்வதைக் கூட விரும்புகின்றனர். இத்தகைய வாசிப்பும் நிறுத்த முடியா ஈடுபாடும் நன்மை எதனையும் தரமாட்டாது. அதிகமாகத் தொலைக்காட்சி பார்ப்பவர்கள் விரைவாகவே இறந்து விடுவார்கள். வாழ்வில் உற்சாகம் தரும் ஒவ்வொரு பொருளும் எமதுஉடல் நிலையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதற்கு தொலைக்காட்சி மட்டும் விதிவிலக்கல்ல. இதயநோய், நீரிழிவுநோய், சில வகைப் புற்றுநோய் உள்ளிட்ட பாதிப்புக் களை ஏற்படுத்துகின்றது. இதன் விளைவாக இளம் வயதில் மரணமும் ஏற்படுகிறது எனவும் "தொலைக்காட்சி உடல் நிலையை எந்தளவுக்கு பாதிக்கும்" என்பது குறித்து நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனித வாழ்வின் பல நுணுக்கமான விடயங் களை இரசனையுடன் நூல்களே வழங்கு கின்றன.

எமது வாழ்வை இனிமை செய்யவல்ல நூல்களைத் தேடி வாசியுங்கள். நூலகங்களை நாடுங்கள். ஏனெனில் அறிதல் சிறப்புற அமைவதற்கு சுய கற்றல் சூழலை உருவாக்கும் தளமாக நூலகங்களே விளங்குகின்றன. வாசிப்பு பழக்கத்தை இளமையிலேயே கையாளுங்கள். இளமையில் கையாளும் வாசிப்பு பழக்கமே கல்விக்கு அடித்தளமாகும்.

---

# வருகிறார் ஜனாதிபதி வடதாரகையும் வந்தது சேவை தொடருமா....?

வந்தியத் தேவர்

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதுபோல் இப்போது நெடுந்தீவுச் சேவைக்கெனத் தருவிக்கப்பட்டு வேறு ஒரு பகுதிக்கான சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் வடதாரகை II மோட்டார் படகு சுமார் ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் குறிகாட்டுவானுக்கு வந்துள்ளது. பின்னாடி வர இருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்.

வடதாரகை நெடுந்தீவுத் துறைமுகத்துக்கு செல்லமுடியாதெனக் கூறி வெளியே நிறுத்தப்பட்ட படகு எனினும் வெளிக் கடலில் நின்று சில நாள்கள் பயணிகள் சேவை [illegible]ட்டது. எனினும் அது யில் ஈடு[illegible]மை குறிப்பிட்டவாறு மு[illegible]யான சேவையை சமயத்தில் அவர்களுக்கான சேவையை வழங்கும் படகாகவே செயற்பட்டுவந்துள்ளது. கடந்த முறை இடம்பெற்ற கச்சதீவு உற்சவத்தின் பின்னர் வடதாரகை II முற்றாகத் தனது சேவையை நிறுத்திக் கொண்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தனக்கு பெருமளவு பணத்தைச் செலுத்த வேண்டும் எனக்கூறி குறிப்பிட்ட படகை கடற்படையினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்க மறுத்துள்ளனர். இந்தக் கணக்குகள் விவகாரத்தால் இரு சாராருக்கும் இழு பறிப்பட வடதாரகை காங்கேசன் துறையில் நிம்மதியாக நங்கூரமிடப்பட்டுக் கிடந்தது.

சுமார் ஒருவருடம் நிம்மதியாகக் கிடந்த இந்தப் படகுக்கு ஜனா[illegible]தி வருகை ஒரு தலையிடியாக அமைந்து[illegible]விட்டது போலும். கட்டிக்கிடந்த படகை இப்போது கடற்படையினர் அவிழ்த்தெடுத்து குறிகாட்டுவானுக்குக் கொண்டுவந்துள்ளனர். வடதாரகை இதுவரை தலைமறைவாகிவிட்டு இப் போது ஜனாதிபதி வருகிறார் என்றவுடன் அவசர அவசரமாக குறிகாட்டுவானுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒரு வருடமாக பழுதடைந்து கிடந்த படகு திருத்தப்பட்டு மீண்டும் மக்கள் சேவைக்கு வந்துள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் வர்ண குலசூரிய தெரிவித்ததாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. குறித்த வடதாரகை படகு திருத்த வேலைகளுக் காகக் கொண்டு செல்லப்பட்டி ருந்ததாகவும் தற்போது பொது மக்களுக்கு இலவச பயண சேவையை வழங்குவதற்காக வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ள[illegible]. ஆனால் உண்மையில் வடதாரகை இது[illegible]வரை மக்கள் சேவையில் ஈடபடாததற்கு எண்ணெய்க் கட்டணமே காரணம். அது ஏற்கெனவே திருத்தத்துக்கெனக் கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னரேயே கச்சதீவுக்குச் சென்று திரும்பியது. ஜனாதிபதி வரவுள்ளதால் நெடுந்தீவு மக்கள் இது தொடர்பாக ஜனாதிபதியிடம் முறையீடு செய்யலாம் என்பதாலேயே கடன் காசு பற்றிச் சிந்திக்காமல் இப்போது படகு எடுத்துவரப்பட்டுள்ளது. இதுவே உண்மையும் கூட.

வடதாரகை துறைமுகத் தின் உள்ளே வரக் கூடியதாக இல்லை எனின் பிரமுகர்களை ஏற்றி வரும்போது மட்டும் அது எவ்வாறு துறைமுகத்தின் உள்ளே வருகின்றது. யோசிக்க வேண்டிய ஒன்று. இந்தப் படகைத் தாங்கள் செலுத்த முடியாது என்றோ, படகைத்துறைமுகத்துள் கொண்டு செல்ல மு[illegible]ன்றோ இதுவரை முடியாது எ[illegible]டகில் நெடுந்தீவுக்கான அரச [illegible] பணியாற்றிய ஊழியர்கள் மறுத்ததாகவோ தெரிவித்ததாகவோ இல்லை. துறைமுகத்துள் வராது என்ற மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு நெடுந்தீவு மக்களுக்கான ஒருபடகைக் கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்து தமது இஷ்டம் போல் செயற்படுத்துவது ஏற்புடையதல்ல. மஹிந்த சிந்தனையின் இலவச பயணம் என்ற கோட்பாடு இதனால் தடைப்படுத்தப்படுகிறது.

இன்று நெடுந்தீவு மக்கள் கடற் போக்குவரத்தில் படும் துன்பங்களையும் கடலில் ஏற்படும் அவலங்களையும் கடற்படையினர் அறியாமலில்லை. இந்தச் சூழலில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ஒரு படகைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து மக்களுக்கான ஒரு சேவைக்கு இடையூறுகள் ஏற்படுத்த முனைவது போன்ற ஒரு நடவடிக்கையாகவே பொது மக்கள் இதனைப் பார்க்கிறார்கள்.

பொதுமக்கள் இலவச சேவை தான் வேண்டும் என எந்தச் சந்தர்ப்பத்திலும் கோரியது கிடையாது. ஜனாதிபதி அவர்களின் விருப்பின்பேரில் இந்த இலவச சேவை கிடைத்தது. அதை மக்கள் வரவேற்றனர். அந்த வரவேற்பு நீடித்திருக்கக் கூடியதாக அதிகாரிகளின் செயற்பாடு அமைந்திருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் ஏனோதானோ என்றிருப்பின் ஜனாதிபதியின் சிந்தனை மக்களுக்குப் பயனற்றதாகவே இருக்கும் என்பது நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவை மூலம் அறிய முடியும்.

ஜனாதிபதி வருகிறார் என்பதற்காக அந்த ஒரு சில நாள்கள் மட்டும் வடதாரகையை பயணிகள் சேவைக்குப் பயன்படுத்தி விட்டு மீண்டும் பழையபடி கொண்டு சென்று நங்கூரமிட்டு ஒளித்துவிட்டால் சரி என்ற நோக்குடன் இருத்தல் தவறானதாகும். இப்போது கூட வடதாரகை குறிகாட்டுவானுக்குக் கொண்டு வரப்பட்ட காரணம் பாதுகாப்பு நடவடிக்கைக்காக படையினரைக் கொண்டு வரும் பொருட்டே என்பதும் ஜனாதிபதி வந்து திரும்பும் வரை இடைக்கால நடவடிக்கையாகப் பயணிகள் ஏற்றி இறக்கப்படலாம் என்பதும் பொதுவான கருத்தாகக் காணப்படுகின்றது. வருகிறார் ஜனாதிபதி, வந்தது வடதாரகை என்ற நிலையுடன் நின்று விடாது தொடர்ச்சியாக வட தாரகை II படகுச் சேவை இடம்பெறக் கூடியதாக தற்சமயம் அதனை உரிய திணைக்களத்திடம் கையளிக்கவும் படையினர் முன்வரவேண்டும்.

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய
பரிபாலன சபையின் போசகர் நா.சுந்தரம் அவர்களது அன்புச் சகோதரி

**செல்வி செல்லம்மா நாகமுத்து**

அவர்கள் கடந்த 02.10.2014காலமானதையிட்டு மனம் வருந்துவதுடன், அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் ஓடையம்பதி, கற்பக விநாயகர்
ஆலய பரிபாலன சபையினர்.

(S16805)
(12.3.6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

**நடராசா தங்கமுத்து**



கடந்த 17.09.2014 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி நடராசா தங்கமுத்து அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.10.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஆ. மகாலிங்கம்,
72/12, பேச்சியம்மன் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(52983)(45.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசம்மா இராமநாதக்குருக்கள்**

தோற்றம் 24.10.1916

மறைவு : 18.09.2013


இணுவை கந்தசுவாமி கோயில் பரம்பரைக்குரு சிவஸ்ரீ கு.இராமநாதக்குருக்கள் அவர்களின் பாரியார் அமரர் திருமதி இராசம்மா இராமநாதக்குருக்கள் அமரத்துவம் அடைந்து ஓராண்டு நிறைவையொட்டி நாளை (09.10.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

கந்தசுவாமி கோயிலடி,
இணுவில். (52976)(5.6.3)

குடும்பத்தினர்.
076 640 2443

## ஆண்டு ஒன்பதில் ஆறுமோ எம்மனம்?

**09ஆம் ஆண்டு நினைவில்**



**பாலசுப்பிரமணியம் அர்ச்சனா**

திதி: பௌர்ணமி (08.10.2014)

மலர்வு 10.04.1986 உதிர்வு 17.10.2005

**கண் இமைக்கும் நேரத்தில் ஏன் பறந்தாய்?**

வெண்ணிலவு தாலாட்டும் நேரம் - எம்
எண்ணமெல்லாம் உன் நினைவை மீட்டும்
கள்ளமில்லா உன் சிரிப்பின் தோற்றம் - எங்கள்
உள்ளமதின் துன்பமதைப் போக்கும்.

எத்தனை நாள் உன் நினைவைத் துறப்போம்? நெஞ்ச
பித்தனைப்போல் எங்கள் நிலை மறப்போம்
வண்ணமயில் போலவே நீ வளர்ந்தாய் - எங்கள்
கண் இமைக்கும் நேரத்தில் ஏன் பறந்தாய்

என்றும் உன் நினைவில்

**குடும்பத்தினர்.**

விளையாட்டரங்கு வீதி,
கட்டப்பிராய்.

(52936)(45.3.6)

## ஆண்டு நிறைவு நிகழ்வு

தென்மராட்சி,ஒக்.8

சாவகச்சேரி மழலைகளுக்கான இறை தரிசன அமைப்பின் முதலாவது ஆண்டு நிறைவு விழா இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ வீ.பாலகுமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக மருத்துவர் ச.அம்பிகைபாகனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) திருமதி சி.சிவநாதன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கலாநிதி சிவஸ்ரீ கு.து.ஜெகதீஸ்வரக்குருக்கள், மிருசுவில் பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஜே.அன்ரனி ஜெயராஜன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

## தமிழ்த் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.8

செங்குந்த இந்துக் கல்லூரியின் தமிழ்த்தின விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

செல்வி சூ.சகானா தலை மையில் நடைபெறும் நிகழ் வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர்(தமிழ்) திருமதி மீரா அருள்நேசன் கலந்து கொள்வார். (வ)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.8

கொக்குவில், தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு கற்றல் சாதன கண்காட்சி நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பப்பிரிவுபாடசாலையின் மண்டபத்தில் அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி.தர்மலிங்கமும் வலிகாமம் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் உ.ரூபாவும் கலந்து கொள்வர். (வ)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய
பரிபாலன சபை உறுப்பினரான
பொ.கருணாகரன் அவர்களது அன்பு மாமி

**திருமதி சொர்ணலட்சுமி தாமோதரம்பிள்ளை**

அவர்கள் கடந்த 05.10.2014 காலமானதையிட்டு மனம் வருந்துவதுடன் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் ஓடையம்பதி,
கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினர்.

(S16804)
(12.3.6)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்பாள்
ஆலய பரிபாலனசபை உறுப்பினர்
பொன்னுத்துரை கருணாகரன்
அவர்களது அன்பு மாமியார்

**திருமதி சொர்ணலட்சுமி தாமோதரம்பிள்ளை**

அவர்களது மறைவு குறித்து மனம் வருந்துவதுடன், அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா அம்பாளின் பாதாரவிந்தங்களில் இன்புற்றமைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(52987)
(12.3.6)

பரிபாலன சபை,
பர்வதவர்த்தனி அம்பாள் ஆலயம், உரும்பிராய்.

## நெஞ்சம் நீங்கா நினைவலைகள்

10ஆம் ஆண்டு



அமரர் தில்லையம்பலம் உமாகாந்தன்

28.08.2004 உதிர்வு

47ஆம் ஆண்டு



செல்வி உஷா தில்லையம்பலம்

16.06.1956 மலர்வு 30.06.1965

28.08.2004 உதிர்வு 15.08.1967

திதி: 08.10.2014

உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் பசுமையாகவிருக்கும்

கதிர்காமகோவிலடி,
வதிரி, கரவெட்டி.

பாசமிகு
குடும்பத்தினர்.

(16502)(12.3.6)

## 31ஆம் நாள் நினைவலைகள்

**திருமதி கனகமணி வேலுப்பிள்ளை**



தோற்றம் 05.08.1930

மறைவு 05.09.2014

திதி : துவாதசி

உயிர் தந்த தாயே! -உங்கள்
உறவை நாம் ஏன் இழந்தோம்?
உயிரோடு உயிராய்
இருந்த அம்மாவே!
உங்கள் அழகு வதனம்
இனி எங்கு காண்போம்?
உயிரிருந்தும் மரணத்தின்
வலியை உணர்கிறோம்
உயிர் நீங்கிப் போன
உங்களை நினைத்தே!
உங்கள் மடியில் கண்ணுறங்கும்
பிள்ளைகள் யாம்- இவ்வுலகில்
நீங்கள் மட்டும் தனியாக
உறங்கிச் சென்றதெங்கே? அம்மா!

எமது குடும்ப விளக்கு அமரர் திருமதி கனகமணி வேலுப்பிள்ளை அவர்களின் மறைவுத் து[illegible]ால இன்று வரை பங்கு கொண்டு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (08.10.2014) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

40/1, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(53014)(5.6.3)

# வெளிநாட்டுப் பணத்தில் பலர் சொகுசு வாழ்க்கை

## முதியோர் தின நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக். 8

என்ஜினியர் வேலை செய்கின்றேன் என்று கூறி வெளிநாடுகளில் கழியல் அறைகளைச் சுத்தப்படுத்தி வரும் பணத்தில் பெரும் பகுதியை இங்கு தமது உற்றார்களுக்கு அனுப்பும் இளைஞர்களை நான் வெளிநாடுகளில் சந்தித்துப் பேசியுள்ளேன். கழியல் அறை எந்திரிகள் என்று தான் அவர்களை அங்கு கூப்பிடுவார்கள். ஆகவே தாம் எந்திரியர்கள் என்று கூறியதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு இரண்டு மூன்று வேலைகள் செய்து பணத்தை உழைத்தே ஊருக்கு அனுப்புகின்றார்கள் என்பது இங்கு நன்மை பெறும் நம்மவர்களுள் பலருக்குச் சில சமயங்களில் புரிவதில்லை. சும்மா கிடைக்கும் பணத்தில் இங்கு சொகுசு வாழ்க்கை வாழத் தலைப்படுகின்றார்கள். உழைத்து வாழ்ந்து பெருமையுற்ற எம் மக்கள் இன்று உள்ளூருக்கு வரும் வெளிநாட்டுப் பணங்களில் சொகுசு வாழ்க்கை வாழத் தலைப்படுவது எம்மை எமது உயர்ந்த நாகரிக நிலையில் இருந்து விழுத்தி விடக் கூடுமோ என்று அச்சம் கொள்ள'வைக்கின்றது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

கைதடி முதியோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நீங்கள் எவரும் மற்றையவர்களின் உதவி எம்மை அடைய வேண்டும். நாம் வலுவற்றவர்கள். முதியவர்கள் என்று நினைத்துக் கிடக்காமல் சுற்றியுள்ள உலகத்துக்கு என்ன விதத்தில் நாம் நன்மை புரியலாம் என்று எம்மை நாமே கேட்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (த)




பெற்றோரை பிள்ளைகளே பராமரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கைதடி முதியோர் இல்லத்தினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் பேரணியில் சிறுவர்கள், பெண்கள், பெரியோர்கள் என நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றனர். (த-17)

# உயர் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான பயிலுநர் நியமனம் பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 8

உயர் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான பயிலுநர் நியமனம், யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்து இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளது. இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியல் வருமாறு:-

இராஜேந்திரன் கௌரீஸ்வரி 825211691V, சிவகுகன் கஜாசனா 818232519V, மகிந்தன் இராமநாதன் 791243319V, பசுபதி சுரேஸ்குமார் 801611362V, உகன் துஷியந்தி 825462465V குமாரவேலு லோகபிரசன்னா 802170491V, குணரட்ணம் கமலினி 838284841V, சரவணபவன் சுதர்ஷினி 846483128V, யோகீவஸ்வரன் தனேஸ் 831720956V, லோகநாதன் வைதேகி 847352353V, சிவசுப்பிரமணியம் கிருபாலினி 828624148V, தனபாலசிங்கம் லோகேஸ்வரன் 850294267V, அறுசீலன் நாகலோஜினி 857914872V, லோகநாதன் காயத்திரி 857022246V, மதியாபரணம் சுபாகினி 857122780V, சிவம் அனிதா 837852161V, வரதராசா வனஜா 818461950V, நற்குணம் தமிழினி 818582471V, மதியாபரணம் மோகனரூபன் 803621810V, சிவசண்முகநாதன் மயூரன் 850864497V, தங்கவேல் சுஜேஸ்மன் 861552764V, சண்முகவேல் உதயணன் 820904923V, தெய்வேந்திரம் நிரூபன் 871943079V, பார்த்தீபன் கிருஷ்ணரஜனி 796531584V, கிஷோர் (சண்முகரட்ணம்) மயூரபிரியா 827051977V, மயூரதன் பிரமிளா 828160869V, சந்திரசேகரம் அமுதினி 825332782V, பாலசுந்தரம் ஞானசெல்வம் 800944317V, செல்லையா ஜீவமலர் 815784065V, ஆறுமுகநாதன் தர்சீகரன் 800771722V, இராஜா பிரதீபா 836243277V, பெனடிக்ற் அல்வின் வரபிரகாஸ் 821034248V, செபஸ்ரியாம்பிள்ளை மரீனா பவானி 866934100V, இராசமணி பிருந்தா 856802620V, கனகரட்ணம் மயூரதன் 823595093V, சசிகரன் சுகந்தினி 808382385V, தர்மகுலசிங்கம் குருபரன் 810853573V, தேவராஜா விஜயசந்திரா 782660519V, தியாகராஜா விநோதா 845201552V, சரச்சந்திரன் லலினி 836322126V, கனகசபை மைதிலி 868333758V, சொர்ணலிங்கம் ஜனந்தினி 876941546V, கதிர்காமசிங்கம் நிரோஷினி 867272437V, கனகசபை கிரிகரன் 813153459V, கணேசமூர்த்தி செல்வநந்தினி 837452210V, தவராசா சுதாகர் 821824281V, அம்பலவாணர் பிரதீபன் 811632848V, இராமச்சந்திரன் காண்டீபன் 831932899V, சிவகுரு இரஜீபன் 831170280V, சிதம்பரநாதன் கஜமாமுகன் 801731589V, சண்முகநாதன் சபேசன் 790883624V, சரவணலிங்கம் சிவரூபன் 823141017V, இராஜதுரை வாமணன் 792563228V, கேதீஸ்வரன் மயூரதி 817293263V, ஆனந்தம் தர்மினி 807302957V, குணரட்ணம் யசோதா 798001914V, ஜெயராஜா ராஜி 847072954V, அன்னலிங்கம் ஜெயவதனன் 841313623V, சோமசுந்தரம் தயாபரன் 800462150V, யோசப் எமிலியா கொன்சிலா 778291860V, சந்திரசேகரம் மைதிலி 855372487V, நடராசா கமல்ராஜ் 840883655V, திருலோகசிங்கம் வானதி 856753425V, சிவராசா நித்தியா 838383165V, கனகலிங்கம் பிரதீபா 856072215V, இரஜீபன் துஜந்தி 857172060V, சுப்ரமணியம் மனோதீபன் 833030663V, இரட்ணவேல் பிரசாந்தி 825743383V, சுப்ரமணியம் காண்டீபன் 791653266V, கோபாலன் கோகுலன் 850283214V, கந்தசாமி பிரதீபன் 801864341V, தேவதாசன் மேரி பிரியதர்சினி 848411370V, அற்புதானந்தராஜா கஜகோபன் 843073018V, கந்தப்பசேகரம் பாலரமேஸ் 821963745V, அம்பலவாணர் வாமலோஜினி 857892240V, பத்மநாதன் கணநாத் 820812760V, குணசிங்கம் நவநீதன் 802343671V, நல்லையா யசீகரன் 800150132V, துஷாந்தன் அசும்தா 818380534V, நேசதுரை நிலேஸ்கா 865723350V, சிவலிங்கம் ஆனந்தரூபி 836072960V, நாகராஜா பிரதாப் 800913012V, இராஜதுரை தர்சன் 840924262V, மயில்வாகனம் ஜெயகாந்தன் 821861586V, முருகையா சுபாஜினி 846773509V, சோதிலிங்கம் பாரதி 838100317V, மகாதேவன் இரவிசங்கர் 800372372V, எழிலழகன் பிரியதர்ஷினி 857912713V, சோமசுந்தரஐயர் பவித்ரா 865932561V, ஏகாம்பரநாதன் சதீஸ்குமார் 801262961V, தியாகராஜா மோகன்ராஜா 793461461V, கந்தையா சசிகலா 815673107V, இரவீந்திரன் பிரசாந் 861474020V, வடிவேல் தனேஸ் 801533191V, கணேசபிள்ளை முகுந்தன் 811670863V, அமிர்தலிங்கம் சுபாஜினி 875043269V, ஸ்ரீசுரேந்திரன் ஜெயச்சந்திரன் 781130370V, புகழேந்தி சுபாசினி 846724257V, தங்கராஜா கமலரூபன் 832454940V, மங்களேஸ்வரன் சுபாசினி 807872370V, லெட்சுமணன் சாந்தினி 817111688V, உதயராஜ் வாசுகி 835622649V, செல்வேந்திரன் பிரதீபா 835973670V, மகாதேவன் மதுரசன் 832243930V, குலசிங்கம் திலீபன் 811123579V, கனகசபாபதி கவிதா 856292517V, அன்ரனி சில்வெஸ்ரர் வினர்ஜிதா 865211341V, கனகசபாபதி மேகலா 857572335V, இன்பராஜன் சிந்துஜா 817753035V, ஸ்ரீதரன் வசிகரன் 860502461V, இரட்ணசிங்கம் பிரேமகுமார் 821681448V, கந்தசாமி வசந்தகோகுலன் 830524339V, சுப்ரமணியம் முகுந்தன் 821782953V, சுவாமிநாதன் விஸ்வபாரதி 842581290V, சொர்ணலிங்கம் சுஜீபன் 783405563V, முருகையா தயாரூபன் 800993792V, தெய்வேந்திரம் பிரபாலினி 808261782V, பிரதீஸ் விநோதிகா 827271853V, குணநாயகம் ரவிசங்கர்; 801203442V, கந்தையா ஹேமமாலினி 866501386V வல்லிபுரம் கஜந்தினி 837373948V, சதீஸ்குமார் சுபாநந்தி 827093076V, கஜபதி அசிதா 825343121V, கிருஷ்ணகுமார் புஸ்பலதா 816632765V, பிரதீபன் கிருபாநந்தி 805724161V, ஆனந்தநடராஜா ஜீவகன் 793572182V, கதிரவேலு மதுசாந்தன் 831684119V, கிரிசாந்தன் மேரி ஆன் சைலா 847002603V, வாகீசன் பிரசாந்தி 857273397V, மகாதேவா இளங்குமரன் 822541054V, சண்முகநாதன் அமுதரஞ்சினி 838364985V, சொர்ணலிங்கம் யோகீஸ்குமார் 780493364V, விஸ்வநாதன் செந்தூரன் 823262914V, சதாசிவம் சாருகாசினி 835963926V, குகதீபன் மயூரா 825402705V, சிவலோகநான் சோபிதா 856382400V, கனகலிங்கம் குகப்பிரியா 766804400V, திருக்குமரன் கவிதா 817874410V, லோகேஸ்வரன் வாணி 867862129V, கிருஷ்ணானந்தன் சிவசேகரன் 801880843V, கிருபாகன் வினோஜினி 836052854V, அம்பிகாபதி ஜயதா 827682292V, மரியான் கப் இராகன் இராஜினி 826741929V, சோதீஸ்வரன் சுதர்சினி 835250547V, கிருஷ்ணமூர்த்தி ஜீவராணி 865023650V, கனகரட்ணம் நிலானி 856812103V, சபாநாயகம் காஞ்சனா 866713553V, தீபன் வக்சலா 856884066V, இராசலிங்கம் வசந்தரூபன் 842062055V செல்வராஜா சேந்தன் 851922849V, துரைராஜா சுரேந்திரன் 831434015V, சின்னத்துரை குகதர்சினி 826901969V தனபாலசிங்கம் கிருஷ்ணபிரியா 825614770V செல்வராஜா பிரேமினி 866392927V சிவபாதசுந்தரம் மரியவேர்ஜின் 835893847V லோகநாதன் கௌசி 875300563V, சின்னத்தம்பி ஜெயெந்திரா 833433075V குணபாலசிங்கம் கலைமகள் 857421779V, பஞ்சாட்சரம் தயாளினி 866972010V, துரைசிங்கம் டசிதா 866392560V, விஜயரட்ணம் பாலசுப்ரமணியம் 842920582V, பாலசுப்ரமணியம் பார்த்தீபன் 812563424V, புலேந்திரராஜா நிசந்திகா 868002980V, ஸ்ரீரவீந்திரன் பிரசன்னா 873302038V, இராசரட்ணம் நிரஞ்சன் 832632767V, சகிந்தரன் ஜெயாநந்தரூபி 835192989V, துரைசிங்கம் சுகுணாவதி 786224373V, விநாயகரட்ணம் லிங்கரூபன் 823620373V, பரந்தாமன் சபீஸ்குமார் 852143088V, சுதாகர் நளினா 807842412V, மகாதேவன் பிரதீபா 807623478V, விநாயகமூர்த்தி அருந்தவகுமார் 780801468V, சுப்ரமணியம் ஜனார்தனன் 843633250V, லோகேஸ்வரன் லாவண்யன் 870091443V, தேவதாஸ் அனிதா 827631990V, சண்முகலிங்கம் சிவரஜனி 857031709V, கிட்டினர் லீலாம்பிகை 847691522V, தவரூபன் சுதர்ஜினி 826983515V, ஞானச்சந்திரன் சுகந்தினி 867212825V, கந்தஞானி சர்மினி 867891269V, சிவராசா தனுசியா 858491967V, வெலிச்சோர் அருமைநாயகம் லிகிர்தம் 832703133V, பாக்கியதாசன் மனோராஜ் 831411317V, பாலகிருஷ்ணன் அஜந்தன் 833552864V, கேசவன் இராஜ்குமாரி 817933653V, பாலசுப்ரமணியம் பார்த்தீபன் 842362857V, தில்லைதாண்டவர் சிற்சபேசன் 851463534V, பாரதிதாசன் திருவருட்செல்வி 817501346V, துரைசிங்கம் ஜெயகௌரி 845703647V, யோசேப் நவரட்ணசிங்கம் நிசான் டண்சன் 831370220V, முரளிதரன் ஜெயகிருஸ்ணா 837214327V, தர்மலிங்கம் ஜெயமாலினி 856172481V, முத்துலிங்கம் மகிம்சன் 831951036V, இராஜரட்ணம் இராஜநந்தினி 818251203V, தேவசுந்தரலிங்கம் சிவநாதன் 803480451V, ஸ்ரனிஸ்லாஸ் செல்வநாயகம் ஆன். நிலுஜா 866282986V, முருகையா சயந்தன் 780973579V, ஐயாதுரை ஜெயச்சந்திரன் 832422177V, இராமச்சந்திரன் விஜயரூபன் 822271359V, இரட்ணம் மயூரன் 810243686V, டொன் பிராங்கிளின் அலென்டீனா 848421561V, நவரட்ணம் அனுசா 876772060V, பாலேந்திரன் தேனுகா 866271356V, விஜயமோகன் விஜயரமணி 846063242V, கிருபாகரன் மகேந்திரன் 92411258V, இராஜதுரை சிறிராசா 853512176V, தர்மலிங்கம் யோகநாத் 810613831V, விமல்ராஜ் சிவபுரத்தரசி 855833573V, தியாகராஜா சந்திரிக்கா 825290311V, நமசிவாயம் ஜெனார்த்தனன் 801824340V, அனுஜன் சர்மிலா 837671485V, ரெமில்சன் அபிராமி 825612809V, நடராஜா மோகனதாஸன் 781930440V, சுவாமிநாதன் சஞ்யுதா 836372352V, சுப்பிரமணியம் நவீனா 837843618V, செல்வரட்ணம் பிரதீப் 841603990V, திருநாவுக்கரசு முருகதாஸ் 822881351V, இராசையா இளங்கீரன் 803591822V, அமிர்தலிங்கம் சுதர்சனா 847482656V, முத்தையா முருகமூர்த்தி 793452888V, நடராசா தவரூபன் 863162475V, சசிதரன் சுஜானி 825672621V, நாகேந்திரன் இராகினி 825463615V, இராஜரட்ணம் தவானி 826241730V, அப்புத்துரை ரஞ்ஜனதாஸ் 812551132V, பெரியண்ணன் பிரியதர்சினி 867232648V, ஜெகநாத ஐயர் கௌதமி 866843511V, அருளானந்ததேவன் கலைச்செல்வி 826642580V, காந்தரூபன் கிருஸ்ண வேணி: 807371231V, பசுபதி துஸிதரன் 810043903V, சத்தியானந்தன் சாந்தினி 827471569V, குணரட்ணம் ஜீவிகா 856312860V, ஜெயகுமார் செல்வமலர் 825564756V, ஜேசுதாஸன் ஜெயக்குமார் 802693567V, அமிர்தலிங்கம் அமிர்தராஜ் 820881982V, சோம்சுந்தரம் மதனரூபன் 813330172V, தேவராசா சுதர்சினி 848122840V, தில்லைநடராஜா சரளா 868641290V, செல்வமாணிக்கம் பாலேந்திரன் 853212148V, சிவானந்தன் திலீபன் 870060483V, பத்மதாசன் நித்தியா 837041449V, சின்னப்பு நேசமலர் 826871733V, பரமானந்தம் அமிர்தா 815352033V, பாலகிருஸ்ணன் ரஞ்சித் 830160221V, சின்னராசா கஜீபன்; 810204397V, சிவசுப்பிரமணியம் அபிராமி 815691261V, சபாரட்ணம் சுபாசினி 776592382V, மரியராசா இமெல்ராஜ் 803093946V, சந்திரதாஸ் நிரஞ்சன் 841064526V, சிவசுப்பிரமணியசர்மா திரிலோகநாயகி 867352066V, தர்மகுலசிங்கம் சுதாகர் 853290564V, கதிரவேலு யதீஸன் 861463656V, ஜெயநாயகம் சபேசன் 842573661V, முருகப்பெருமாள் மயூரதன் 861414140V, கனகசபை சுதாதேவி 855644398V, கணேஸ் பிரதீபா 856063755V, இராஜகுலேந்திரன் அபிராமி 848431737V, ருவீனஸ் காமெலிற்றா சுகந்தினி 798652672V, இரட்ணசபாபதி கேதீஸ்வரி 847092980V, யோகேஸ்வரன் கேமா 856442152V, குணசேகரம் கிரிஸாந்தன் 851400192V, நாகராஜா சுஜீவரூபன் 793541058V, பொன்னப்பு நிரஞ்சன் 853541710V, கணேசலிங்கம் நிசாந் 843183743V, சிவலோகநாதன் ஜனகன் 812793276V, பாலச்சந்திரன் கஜேந்தினி 885081657V, இராஜ்குமார் தர்சினி 805051582V, கேசவானந்தன் கோகுலநந்தன் 820653602V, நாதமணி சண்முகப்பிரியா 817142370V, கணபதிப்பிள்ளை சிவகரன் 791433169V, புண்ணியமூர்த்தி பாமா 815963512V, மயில்வாகனம் நவநீதன் 802594887V, இரட்ணசப்பாபதி லக்சிகா 865151551V, நடராசலிங்கம் கணேசதாஸ் 842792860V, நல்லசிவம்பிள்ளை தயாநிதி 856913791V, தவராஜா கௌசிகன் 841803205V, கிருஸ்ணமேனன் டட்ஸா 815622553V, ஆறுமுகம் கல்யாணி 836612922V, கதிரேசு வேணி 855563908V, வீரசிங்கம் ஜெகன் 821891221V, குகநாதன் நிஸானா 846682198V, பொன்னையா சகிர்தினி 855132222V, சத்தியதாஸன் நிதர்ஸா 836824040V, சத்தியமூர்த்தி கவிதா 817831311V, சிறிகாந்தன் பிருந்தன் 810052864V, கதிரவேலு தாட்சாயினி 837774047V, பேரம்பலம் பேரின்பமதன் 84103009 5V, கிருஸ்ணமூர்த்தி ஜெயராணி 835970442V, குணரட்ணம் ரகுநாதன் 841763181V, செல்வராசா சியாமளன் 812352636V, செல்லத்துரை தயாதரன் 841572394V, வீரசிங்கம் தயாளன் 793154682V, செல்வரட்ணம் ஜெயரூபன் 820213300V, அமிர்தானந்தராஜா ஜீவந்தினி 837113938V, தர்மலிங்கம் செயந்தினி 827480851V, தங்கவேலு நிபோசிகா 817731171V, குணநேசன் கோசலா 885052207V, கருணாகரன் வைதேகி 877960714V, அருட்குமரன் பவதாரணி 816981638V, துரைராஜா கோபிநாத் 831380314V, மயில்வாகனம் செந்தூரன் 811803928ஏ திருக்கமலன் சுபாஜினி 847151560V, அந்தோனி யோகராஜ் செல்வகுமார் 790864204V, அமிர்தநாதன் சுகந்தன் 833293338V, சதீஸ் கனிதா 857691482V, கணபதிப்பிள்ளை கவாஸ்கர் 801520847V, பாலசிங்கம் காண்டீபன் 803310688V, நடராஜா சதீஸ்குமார் 792385052V, குமாரசாமி சர்மினி 845933022V, சிவபாதம் தாரணி 856572331V, குணசீலன் தர்சன் 852462183V, சிதம்பரநாதன் அகிலா 865204388V, சிவநேசன் திருவானந்தன் 791822246V, செல்லத்துரை நிர்மலன் 842002079V, சக்திவேல் வாரணி 858581605V, ஸ்ரீகுமார் ஸ்ரீபிரியா 836192400V, நடராஜா சுதர்சன் 803253889V, ஸ்ரீபதி ரேகா 856373770V, சிறிதரன் சோபிகா 856242803V, குணரட்ணம் ஜனனி 856761096V, சச்சிதானந்தன் தமிழன்பன் 842173493V, பயஸ் ஜெறோபா ஜயசாந்தி டொறினா 807531433V, தில்லைநடராஜா பிரியதர்சினி 806264113V, கணேசன் தர்மிலா 857342224V, வீரசிங்கம் சரன்குமார் 83103 2235V, கணேசன் சுகன்யா 865082045V, பேனாட் மிறிற்றா றொசானி 856372162V, பரராஜசிங்கம் உதயசங்கர் 803643261V, நல்லநாதன் கரிதரன் 50082170V, குணராசா கோகுலதாஸ் 802944594V, மில்பர் ராஜா மடோனா கோபிகிருஸ்ணா 848491179V, ஜேசுதாசன் சுலோஜனா 827014451V, விஜயராகவன் நிகிலா 798581511V, முத்துராஜா மைவிழி 805611901V, சிவபாதம் சுரேந்திரா 821383854V, சண்;முகநாதன் லோக நந்தன் 850293309V, பதிமனோகரன் விஜயராஜ் 812574477V, செல்வரட்ணம் மயூரன் 852033010V, நரசிங்கப்பெருமாள் ரமணபிரகாஷ் 851471995V, பரமநாதன் நிரஞ்சன் 863490855V, கந்தசாமி தனஞ்ஜெயன் 842744237V, கணபதிபிள்ளை கணேசரூபன் 800182557V, மகேந்திரநாதன் வீறஜா 855022397V, தங்கவேலாயுதம் அகிலன் 802883668V, ராஜா தினேஸ்குமார் 821234743V, சிவமூர்த்தி சிந்துஜா 855132494V, மாரிமுத்து நல்லைமாமணி 836663454V, முத்துலிங்கம் கஜந்திரராஜா 801845150V, திருக்கேதீஸ்வரன் நீரஜா 828501313V, நாராயணசாமி மனோகரி 817421733V, தயாபரன் ரதீசன் 840520838V, சிறிஸ்கந்தராஜா சிவரஞ்சனி 846412255V, ஜெயரட்ணம் இந்துஜா 846072470V, மையவன் சுயானி 846842020V, பாலசுப்பிரமணியம் பிரேமினி 796803517V, கனகசபாபதி பாலசபேஷ் 822874789V, ஆறுமுகம் ஜீவாயினி 807331612V, இராஜரட்ணம் ஜோய் ஜெயரஞ்சன் 810894580V, சுரேசானந்தன் ஜொயாலினி 855900726V, அன்ரனி அன்ஜெலா 828342363V, செல்வராஜா பிரபாகரன் 811612308V, உதயசேகரன் ரேணுமதி 806482013V, அம்பிகைபாலன் கலைமகள் 806574422V, கணபதிப்பிள்ளை சிறிதவயோகராஜா 853170186V, ஆறுமுகம் பிரியங்கன் 843151213V, நடராஜா ஜனதா 797891231V, ஜேசுதாசன் கொண்கிளேடியஸ் 782442392V, சுப்பிரமணியம் காயத்திரி 827301051V, புண்ணியமணியம் மாலினி 857022106V, குணரட்ணம் ஜெயந்தினி 856313689V, கதிரவேலு புஸ்பாகரன் 822084192V, லக்மிஸ்ரீதாசன் கஜானன் 832751308V, லீனஸ் ரஞ்சன் மரியதாசன் 863072484V, நித்தியகுமார் பிரியதர்சினி 877412598V, விமலன் வேலலழகன் 822602142V, தங்கவேல் கரிகாலன் 850022992V, ஜெயவிக்ரமன் ஜெயரட்ணம் 851034145V சிவலிங்கம் அம்சுமால் 853492809ஏ கந்தசாமி குகநேசன் 842092019V இராசையா சுகந்தன் 802312377V குமாரசாமி சுஜீவன் 871553076V ஸ்ரீபன் ஜெறின் 808632268V பக்கீணைரதன் சோபனாம்பிகா 858291119ஏ பாலசுந்தரம் பொன்னபெருமாள் 840222110V தேவராஜலிங்கம் ஜீவகி 827982148V சிவராசா சிவரதி 855191881V, கௌசிகன் வானதி 795652280V' மாசிலாமணி ரூபாஜினி 818285795V தியாகராஜா கபீதா 867052070V சின்னத்துரை றஜீதா 841632001V இராமச்சந்திரன் சந்திரபாலா 802593376V வசீகரன் தாழினி 835853470V சிவஞானம் சஜீபா 876413655V விஜேந்தன் தயாளினி 80622 3093 V நவநீதன் கஜேந்தினி 795990488V தனலிங்கம் கௌசலா 797711225 V செல்வராஜா செல்வகிரீசன் 790873378 V கணபதிப்பிள்ளை சிவகங்கா' 806061832 V கனகலிங்கம் சஜீபன் 821891914 V, பரமேஸ்வரன் சாந்தி 836463889 V, மதிபாலசிங்கம் நிரஞ்சன் 78 134 4818 V, ஏரம்;பு சிவகணேசன் 781982377 V, சிவசுப்பிரமணியம் சஜந்தன் 80 0911311 V, கணபதிப்பிள்ளை வவேந்திரன் 803012750 V, பஞ்சாட்சரம் பிரதீபா 81772 1508 V, தர்மபாலன் மதுமதி 817701698V, ரூபஜெகன் லஜேந்தினி 817071520V, ஆனந்தராஜா யசோதினி 816943574V, அன்பழகன் சாந்தகுமாரி 79 504 2687V, சின்னத்தம்பி வனஜா 82726580V, சிறினிவாசன் சிவாகினி 805013290V, பிரான்சிஸ் கிறிஷ்பெல்லா நிஷாந்தினி; 817692478V, ஜெகன் காந்திமதி 825180389 V, தியாகராஜா பிரதீபா 81 718 2810 V, சிவகுமார் ராதிகா 805491329V, மகேந்திரன் தனுஷியா 805492406V, இராஜரட்ணம் றொபின் ஜெயரூபன் 800334128 V, சீவரட்ணம் சிவதாஸன் 78207 4601 V, சண்முகநாதன் குமுதன் 792342205V, மகேஸ்வரன் பிரபாகரன் 771180396V, கிருஸ்ணசாமி கிருபாலினி 796403101V, முத்துசாமிசர்மா ரகுநாதன் 80 312 2849 V, இலங்கநாதன் பிரதீஸ் 79 1202582V..



எந்தவொரு உதவிகளும் கிட்டியிராத கொக்கிளாய் அரச வைத்தியசாலைக்குக் கனடாவின் அன்புக் கரங்கள், கனடா தமிழர் இணையத்தக்க வைத்திய சாலை நிர்வாகத்தின் கோரிக்கையின் பேரில் மருந்துகளை வைத்துப் பாதுகாக்கக் குளிரூட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. வலி.வடக்குப் பிரதேச சபை உப தலைவர் ச.சஜீவன் குளிரூட்டியை வைத்தியசாலை மருத்துவர் பிரசாந்தனிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினரான ரவிகரனும் பிரசன்னமாகியிருந்தார். (த)

# 165 ஏக்கர் படைகளுக்காக முல்லைத்தீவில் சுவீகரிப்பு

## முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக்.8

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பொதுமக்களின் 165 ஏக்கர் வரையான காணிகள் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் ஆக்கிரமிக்கப்பட்டுச் சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்ட பொது மக்களின் 165 ஏக்கர் காணிகள் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதில் அரச காணிகளும் அடங்குகின்றன.

அத்துடன் அந்தக் காணிகளை இராணுவத் தேவைக்குச் சுவீகரிப்பதற்காக காணி அனுமதி கோரி விண்ணப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை இயங்கிய தனியார் காணி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குரிய காணி மற்றும் பொது மக்களுக்குச் சொந்தமான 49 காணித் துண்டுகள், அவற்றுள் அடங்குகின்ற வீடுகள் ஆகியவற்றை இராணுவத்தினர் இன்றுவரை உரியவரிடம் கையளிக்காமல் வைத்திருப்பதுடன் அவற்றை தமக்கு வழங்குமாறு கோரியிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

அத்துடன் புதுக்குடியிருப்பு ஏ-35 வீதியை அண்டிய கைவேலிப் பகுதியில் 1972 ஆம் ஆண்டு மரமுந்திரிகைச் செய்கைக்கென 5 ஏக்கர் வீதம் 250 ஏக்கர் 50 பேருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் மேற்படி காணி உரிமையாளர்களில் 21 பேர் தமது காணிகளைப் பெற்றுத் தருமாறு உரிய திணைக்களங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

குறிப்பிட்ட காணிகளில் 10 ஏக்கர் பொலிஸ் நிலையத்துக்கும், 30 ஏக்கர் சிவில் பாதுகாப்புப் பண்ணைக்குமென ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏ-35 வீதியின் வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தி நிறுவனம் அமைந்திருந்த காணி, கட்டடங்கள் உட்பட 85 ஏக்கர் வரையான அரச காணியை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

இவ்வாறு பொதுமக்களின் சுமார் 165 ஏக்கர் காணிகள் உட்பட அரச காணிகளில் ஒரு பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை இராணுவத் தேவைக்கு சுவீகரிப்பதற்குரிய இரகசிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவருகின்றது. (த-55)

# இடர் முகாமைத்துவப் பிரிவின் வேலைத்திட்டம் வவுனியாவில்

வவுனியா, ஒக்.8

வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரால் மழைகாலத்தை முன்னிட்டு இடர் வரைபடம் தயாரித்தல் மற்றும் இடரின்போது மக்களைப் பாதுகாத்தல் இடப்பெயர்வுக்குள்ளாகும் மக்களைப் பராமரித்தல் உட்பட பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நொச்சிமோட்டை, சேமமடு, வவுனியா வடக்குப் பிரதேசம், செட்டிகுளம் பிரதேசம் ஆகியவற்றில் இடர் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படும் குளங்கள் மற்றும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படும் இடங்கள் தொடர்பான வரைபடங்களை அந்தந்தக் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களைத் திரட்டி அங்குள்ள கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் கிராம சேவகர்களை இணைத்துத் தயாரித்து வருகின்றனர்.



இதேவேளை, மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் பாடசாலைகளிலும் ஏற்கனவே அமைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுக்களுக்கும், வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் ஊடகவியலாளர்களுக்கும் இடர் காலத்தில் தம்மைப் பாதுகாத்தல், மற்றவருக்கு உதவுதல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகமைத்துவ பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார். (த-402)

# வருமான நிலுவைகள் வவுனியாவில் வசூலிப்பு

வவுனியா, ஒக்.8

வவுனியா நகர சபை இந்த ஆண்டின் வருமானம் சேகரிக்கும் மாதத்தைப் பிரகடனப்படுத்தியதுடன் தனது எல்லைக்குட்ட மக்களிடம் வருமான நிலுவைகளை அறவீடு செய்து வருவதுடன் நகர சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கியவர்களுக்கு விருதுவழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

வவுனியா நகரசபை கடந்த செப்ரம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் இம்மாதம் 22 ஆம் திகதி வரையான காலத்தை வருமான வரி நிலுவைகளை அறவிடும் மாதமாக பிரகடனப்படுத்தி நகர சபை யில் உள்ள சகல வட்டாரங்களிலும் வீடு வீடாகச் சென்று வரி நிலுவைகளை அறவிடுதல், 2014 ஆண்டுவரை நிலுவையின்றி வரி செலுத்தியவர்களை கௌரவித்தல் மற்றும் நகர சபையின் சேவைகள் தொடர்பான மக்கள் விழிப்புணர்வூட்டும்நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. (த-402)

# தாய், தந்தையர்களை இழந்த 48 சிறார்கள் துணுக்காயில்

முல்லைத்தீவு, ஒக்.8

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் போரினால் சுமார் 48 சிறார்கள் தமது தாய், தந்தையர்களை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தாய், தந்தையர்களை இழந்த சுமார் ஆயிரக்கணக்கான சிறார்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அதனடிப்படையில் முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர்பிரிவில் சுமார் 27 ஆண்களும், 21 பெண்களுமாக சுமார் 48 சிறார்கள் தாய், தந்தை இருவரையும் இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதனைவிடத் தாய் அல்லது தந்தையை இழந்த நிலையில் 323 சிறார்கள் வாழ்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகப் புள்ளி விபரத்தில் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-55)

# கிளிநொச்சியில் 2,924 புசல் நெல் விவசாயிகளுக்கு

கிளிநொச்சி, ஒக்.8

கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 924 புசல் விதை நெல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் பருவ மழை இன்மையால் நெற்செய்கை அழிவடைந்திருந்தது. இந்த நிலைமையால் தற்போது மாவட்ட விவசாயிகள் விதை நெல்லைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே விவசாயிகளின் இந்த நிலைமையைக் கருத்தில் எடுத்து தற்போது விதை நெல் வழங்கப்பட்டு வருகிறது.

அண்மையில் ஆயிரத்து 462 ஏக்கர் நிலப்பரப்புக்கான 2 ஆயிரத்து 924 புசல் விதை நெல் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது. கிளி நொச்சி, அக்கராயன், உருத்திரபுரம், புளியம்பொக்கணை, முழங்காவில் கமநலசேவை நிலையங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கே விதை நெல் வழங்கப்பட்டுள்ளது. (த-55)

# சௌத்பார் தெற்குக் கடற்கரையின் ஆற்றுவாய் மூடப்பட்டதால் பாதிப்பு

மன்னார், ஒக்.8

மன்னார் சௌத்பார் தெற்குப் பகுதி கடற்கரையின் ஆற்றுவாய் மூடப்பட்டுள்ளமையினால் மன்னார் நகர்ப் புற மீனவர்கள் கடந்த சில வாரங்களாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் தீவையும் பெருநிலப் பரப்பையும் இணைக்கும் ரயில் பாலம் குறித்த கடற் பகுதியூடாகவே தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. வருடக்கணக்கில் குறித்த ரயில் பாலம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றபோதும் இதுவரை குறித்த பணிகள் பூர்த்தியாகவில்லை.

இந்த நிலையில் குறித்த பாலம் அமைக்கும் பகுதியில் உள்ள ஆற்றுவாய் பகுதி மூடப்பட்டுள்ளது. இதனால் தற்போது மீனவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.



ஆற்றுவாய் பகுதி மூடப்பட்டுள்ளமையினால் கடற் கரையில் இருந்து சுமார் 75 மீற்றர் தூரத்துக்கு படகைப் பலர் சேர்ந்து இழுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

படகை கடலுக்குள் தொழிலுக்குக் கொண்டு செல்வதிலும், பின்னர் படகைக் கரைக்குக் கொண்டு வந்து உரிய இடத்தில் தரித்து நிறுத்துவதிலும் மீனவர்கள் நாளாந்தம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அப்பகுதியில் உள்ள கடற்படையினர் குறித்த பகுதியை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக் கியுள்ளதால் கடற்கரையோடு படகை நிறுத்தக் கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

குறித்த ரயில் பாலம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றமையினால் இரண்டு கண் பாலம் முற்றாக அடைக்கப்பட்டுள்ளதோடு மூன்று கண் பாலம் 10 அடி இடைவெளி மாத்திரம் விடப்பட்டு ஏனைய பகுதி முழுமையாக அடைக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆற்றுவாய் பகுதியில் நீரில்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் படகை இழுத்துச் செல்லமுடியாத நிலை தற்போது தொடர்ந்து கொண்டு செல்கின்றது. குறித்த சௌத்பார் தெற்குக் கடல் பகுதியில் மன்னார் நகர் பகுதியைச் சேர்ந்த பனங்கட்டுக் கொட்டு, பள்ளிமுனை, பெரிய கடை, சாந்திபுரம், உப்புக் குளம், ஸ்ரேசன், எழுத்தூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் குறித்த பகுதியூடாக நாளந்தம் மீன் பிடிக்கச் சென்று வருகின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த ஆற்றுவாயை ஆழப்படுத்தி மீனவர்கள் எவ்வித பாதிப்புக்களும் இன்றிச் சிறந்த முறையில் தொழிலை மேற்கொள்ளக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், அரச அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறித்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வி.எஸ். மெராண்டாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் மீனவர்கள் எங்களிடம் முறையிட்டுள்ளனர். ஆனால் இதற்கான தீர்வை எம்மால் பெற்றுக்கொடுக்க முடியாது. மன்னார் நகர சபையும், மன்னார் பிரதேச செயலாளருமே குறித்த பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும்-என்றார். (த-56)

## குட்டி ஈன்றது மூக்குக் கொம்பன்

கொழும்பு, ஒக்.8
தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் இருக்கும் அரிய வகையான விலங்கு இனங்களில் ஒன்றான கறுப்பு நிற மூக்குக் கொம்பன் (காண்டா மிருகம்) நேற்றுக் காலை குட்டியொன்றை ஈன்றுள்ளது.
தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு 2007ஆம் ஆண்டு பரிசாக வழங்கப்பட்ட மூக்குக் கொம்பன் (காண்டாமிருகம்) ஜோடிக்கே இந்தக் குட்டி கிடைத்துள்ளது என்று மிருகக் காட்சிசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## இரண்டாவது ஈழத்தை உருவாக்க முயற்சிக்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

### தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.8
முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாவது ஈழத்தை உருவாக்கும் முகமாக செயற்படுகின்றது என்று தேசிய சுதந்திர முன்னணி பேச்சாளர் மொஹமட் முசாம்பில் கூறியுள்ளார்.
முதல் கட்டமாக கிழக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கைப்பற்றிய பின் ஐக்கிய நாடுகளின் சபையின் அனுமதியுடன் தமிழீழத்தை உருவாக்கும் முயற்சியில் முஸ்லிம் காங்கிரஸ் இறங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
"மேற்குலக நாடுகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்ற செயற்திட்டத்தின் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கின்றது. இதன் ஒரு கட்டமாக சிங்கள முஸ்லிம் மக்களிடையே மேலும் மேலும் பேதங்களை உருவாக்கிவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன் கிழக்கு மாகாணத்தை கைப்பற்றி ஈழத்தை உருவாக்குவதே திட்டம்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

**ஐக்கிய நாடு களின் சபையின் அனுமதியு டன் தமிழீழத்தை உருவாக்கும் முயற்சியில் முஸ்லிம் காங்கிரஸ் இறங்கியுள்ளது.**

## சிறை காவலர் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, ஒக்.8
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு, மகஸின் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளின் சிறை காவலர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



ஊவா மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி 13 உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். இந்த வைபவம் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நடைபெற்றது.

## தாமதமின்றித் தமிழருக்கு நீதி வழங்கப்பட வேண்டும்

### வலியுறுத்துகிறார் விக்கிரமபாகு



கொழும்பு, ஒக்.8
போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நவ சமசமாஜக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
"போர் வெற்றி மூலம் இந்த நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை. தமிழ் மக்கள் மாத்திரமன்றி சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சுமார் 33 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் இடம்பெயர்ந்திருந்தார்கள். இந்த நிலையில் போர் வெற்றியின் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வும் உருவாகவில்லை.
தமிழ் மக்களுக்கும் எதிர்பார்த்த உரிமைகள் கிட்டவில்லை. இதன் காரணமாகவே இன்று சர்வதேச அழுத்தங்கள் இலங்கை மீது ஏற்பட்டுள்ளன. எனவே, இன்னொரு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இந்நாட்டில் அனைத்து இனங்களும் சரிசமமாக வாழும் உரிமைநிலைநாட்டப்பட வேண்டும். அதற்கான முதல்கட்டமாக இனியும் தாமதிக்காது தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட்டு, நியாயம் கிட்ட வழியேற்படுத்த வேண்டும்"- என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## வரவு-செலவு திட்டம் 24ஆம் திகதி



கொழும்பு, ஒக்.8
2015ஆம்ஆண்டுக்கானவரவு-செலவுத்திட்டம் இந்த மாதம் 24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட உள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.
வரவு-செலவுத்திட்டம் தொடர்பிலான மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
பொதுவாக வரவு-செலவுத்திட்டம் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டு டிசெம்பர் மாதத்தில் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும். ஜனாதிபதி தேர்தலை அவசர அவசரமாக நடத்தும் நோக்கில் இவ்வாறு வரவு-செலவுத் திட்டம் முன் கூட்டி நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)


## மஹிந்தவை சவாலாக ஐ.தே.க. கருதவில்லை

### அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். ஹாலீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.8
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சவாலாக கருதவில்லை என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். ஹாலீம்.
"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்று நாம் கூறினால் ஜனாதிபதி மீது அச்சம் கொண்டு தான் இவ்வாறு கூறுவதாக ஆளும் கட்சி குற்றம் சுமத்தும். நாம் யாருக்கும் அஞ்சப் போவதில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எங்களுக்கு சவால் கிடையாது."- என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
"ஊவா மாகாணசபைத் தேர்தலின்போது நாம் பெரும் வெற்றியை ஈட்டினோம். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்குள் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எங்களால் வெற்றியீட்ட முடியும் என கட்சி உறுப்பினர்கள் நம்புகின்றார்கள். திட்டமிட்ட முறையில் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி தேர்தல் அல்லது வேறும் தேர்தல்களை வெற்றியீட்ட முடியும்.
பொது வேட்பாளர் குறித்த நிலைப்பாடு மாறியுள்ளது. தற்போது எங்களது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார். சோபித தேரர் போட்டியிடவில்லை எனக் குறிப்பிடுகின்றார். சோபித தேரருக்கு சிறுபான்மை கட்சிகளின் ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகமே? சோபித தேரர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை மக்கள் நிராகரித்துள்ளனர். ஊவா மாகாணசபைத் தேர்தலில் இந்த விடயம் வெளிச்சமாகியுள்ளது."- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## சிங்களக் கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது

### ஞானசார தேரர் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.8
தமிழ் கூட்டமைப்பு, முஸ்லிம் கூட்டமைப்பு போன்ற அரசியல் கட்சிகள் நாட்டில் இருக்கின்ற நிலையில், சிங்கள கூட்டமைப்பு என்ற பெயரிலான அரசியல் கட்சியொன்றை பொதுபல சேனா அமைப்பு ஆரம்பிக்கவுள்ளது என்று அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
மக்களை ஏமாற்றும் அரசியல் தலைவர்கள், இந்த நாட்டின் தலைவர்களாக மாற, பொதுபல சேனா ஒருபோதும் இடமளிக்காது என்றும் இந்த நாட்டின் தலைவர்களை, பொதுபல சேனாவே உருவாக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்த தேரர்," இந்த நாட்டின் தலைவர்கள் திருந்துவதற்காக இந்தக் காலப் பகுதியை வழங்குகின்றேன். அவர்கள் திருந்தவில்லையாயின், அதற்குரிய நடவடிக்கையை நான் எடுப்பேன்"- என்றும் குறிப்பிட்டார். (ற)

## ஆண்கள் விடுதியிலிருந்து மாணவிகள் வெளியேறும்வரை பல்கலை திறக்காது

### சப்ரகமுவ பல்கலைக்கழக உப துணைவேந்தர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.8
சிங்கராஜ ஆண்கள் விடுதியில் இருந்து மாணவிகள் வெளியேறும் வரை சபரகமுவ பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பது தொடர்பாக தீர்மானிக்கப் போவதில்லை என உபவேந்தர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.
மறுஅறிவித்தல் விடுக்கும் வரை மூடப்பட்டுள்ள பல்கலைக் கழகத்தின் ஆண்கள் விடுதிகளில் தங்கியிருந்த பல மாணவிகள் தற்போது வெளியேறியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.
எவ்வாறாயினும், பல்கலைக் கழக விடுதிகளில் இருந்து அனைத்து மாணவிகளும் வெளியேறியுள்ளனர் என்று சபரகமுவ மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதி ரசிந்து ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.
இதேவேளை- தடைசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் மகா சங்கத்தை மீண்டும் செயற்படுத்த அனுமதியளிக்குமாறு கோரியும், வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ள 8 மாணவர்களை மீண்டும்இணைத்துக்கொள்ளுமாறு கோரியும்-சபரகமுவ பல்கலைக்கழக மாணவர்களால் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்படுகிறது. கடந்த 36 நாள்களாக கொழும்பு பதுளை பிரதான வீதியின் பம்பஹிந்த சந்தியில் சபரகமுவ மாணவர் ஒன்றியத்தால் தொடர்ச்சியான சந்தியாக்கிரகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
எவ்வாறாயினும், சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர் தலைமைத்துவத்தை ஏற்றுள்ள மாணவர்களை முற்போக்கு சோஷலிஸக் கட்சியைய கப்படுத்தியுள்ளது என்றும் உயர் கல்வி பிரதியமைச்சர் நந்திமித்திர ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார். (ற)



# முகமிழந்த பெண்

ஆஸ்திரேலியாவில் முகமிழந்த பெண் ஒருவர் கடந்த இரண்டு வருடங்களாக தாம் அணிந்திருந்த முகமூடியை கழற்றிவிட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.



ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டானா வுலின் (வயது-28). கடந்த 2011 ஆம் ஆண்டு புதுவருட திருவிழாவில் டிமிட் ரோஸ்கா என்ற பெண்ணையும் அவரது கணவரையும் டானா வுலின் சந்தித்துள்ளார். அப்போது டானாவின் அழகைக் கண்டு கடும் ஆத்திரம் அடைந்த டிமிட்ரோஸ்கா இவர் மீது அல்கஹோலை ஊற்றித் தீ வைத்துள்ளார்.

இதையடுத்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்ட அவருக்கு மூன்றாம் நிலை தீக்காயம் ஏற்பட்டிருந்ததால் முகச்சீரமைப்பு சிகிச்சை செய்துள்ளனர். மேலும், தற்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள டானா முகத்தில் இதுவரை 30 சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அவர் கடந்த 2 வருடங்களாக முகத்தில் முகமூடி அணிந்துள்ளார். இந்த நிலையில், இரண்டு வருடங்களாக அணிந்திருந்த முகமூடியைக் கழற்றிவிட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கப் போவதாக தெரிவித்துள்ளார். மேலும் இவரை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய டிமிட்ரோஸ்காவிற்கு 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் ராஜபார்ட் ரங்கதுரை




நடிகர் சிவாஜி கணேசன் நடித்த கர்ணன், வசந்த மாளிகை, திருவிளையாடல் போன்ற படங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு மீண்டும் வெளியிடப் பட்டது.

அந்த வரிசையில் 1973 ஆம் ஆண்டு வெளிவந்த ராஜபார்ட் ரங்கதுரை படமும் டிஜிட்டல் மயப் படுத்தப்பட்டு வருகிறது. வி.சி.குகநாதன் தயாரித்த இந்தப் படத்தை பி.மாதவன் இயக்கி இருந்தார். சிவாஜியுடன் உஷா நந்தினி, நம்பியார், வி.கே.ராமசாமி, மனோரமா, டி.கே.பகவதி நடித்திருந்தனர். எம்.எஸ்.விஸ்வநாதன் இசை அமைத்திருந்தார்.

இந்தப் படம் அப்போது பெரும் வெற்றி பெற்ற துடன் பாடல்கள் பெரிய அளவில் ஹிட்டானது. சிவாஜி கோமாளி வேஷமிட்டு பாடி ஆடும் 'ஜிங்கினிக்கா சின்ன கிளி சிரிக்கும் பச்சைக்கிளி ஓடிவந்தா மேடையிலே ஆட்டமாட...' பாடலை இப்போது கேட்டாலும், காட்சியைப் பார்த்தாலும் கண்ணீர் வரும்.

ராஜபார்ட் ரங்கதுரையை அபி சினி ஆர்ட்ஸ் என்ற நிறுவனத்தார் டிஜிட்டலில் மெருகூட்டி வருகிறார்கள். நவம்பர் மாதம் படம் திரைக்கு வரவுள்ளது.

## நச்சின்னு கடி


கஜா: என்னப்பா! வியாபாரமெல்லாம் எப்படி நடக்குது ?
ஜான்: எல்லாமே தலைகீழா நடக்குது.



கஜா: என்னாச்சு?
ஜான்: முன்னாலே வைர வியாபாரம் செய்தேன்.. இப்போது 'ரவை' வியாபாரம் செய்கின்றேன்.

நோயாளி: தெரியாமல் நாணயக் குற்றியை விழுங்கிவிட்டேன்!
வைத்தியர்: ஒரு ரூபா குற்றியா, இரண்டு ரூபா குற்றியா?
நோயாளி: அதான் தெரியாமல் விழுங்கி விட்டேன் என்று சொல்றன்...'

## ரிலாக்ஸா வாசியுங்க



ஒரு நாள் அலுவலகத்தில் வேலை செய்யும் பணியாளர்கள் அனைவரும் வேலைக்கு சரியான நேரத்தில் வந்து சேர்ந்த னர். அலுவலக அறிவிப்பு பலகையில் ஏதோ எழுதி இருக் கிறதே என்று அனைவரும் பார்க்கச் சென்றனர்.

அதில் "உங்கள் வளர்ச்சிக்கும் எமது நிறுவனத்தின் வளச் சிக்கும் இடையூறாக இருந்த நபர் நேற்றுக் காலமானார். அடுத்த கட்டடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனை வரும் தவறாமல் கலந்து கொள்ளவும்" என்று எழுதி இருந்தது.

இதைப் படித்தவுடன் அவர்கள் எல்லோருக்கும் நம்முடன் வேலை செய்த ஒருவர் இறந்து விட்டாரே என்ற வருத்தம் இருந்தது. பின்னர் எமது வளர்ச்சிக்குத் தடையாக இருந்த அந்த நபர் யாராக இருக்கும் என்று அறிய அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அனைவரும் அடுத்த கட்டடத்துக்குச் சென்றனர். சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராகச் செல்ல ஆரம்பித்தனர். சவப்பெட்டியை நெருங்க நெருங்க எமது வளர்ச்சிக்கு தடையாக இருந்தவன் யாராக இருக்கும், நல்ல வேளை அவன் இறந்துவிட்டான் என்று நினைத்தபடியே முன்னோக்கிச் சென்றனர்.

சவப்பெட்டியினுள் எட்டிப் பார்த்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது. சவப்பெட்டிக்குள் யார் ஏல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது.

கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதி இருந்தது."உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம். நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது. உங்கள் வளர்ச்சியை உங்களைத் தவிர வேறு யாராலும் தடுத்து நிறுத்த முடியாது" என்றிருந்தது.

உங்கள் வாழ்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது. உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது. நீங்கள் நினைத்தால் மட்டுமே உங்கள் வாழ்வை மாற்ற முடியும்.

ஒவ்வொருவர் முன்னேற்றத்துக்கும் அவர்கள் தன்னம்பிக்கையே காரணம்... உங்களைத் தவிர உங்களது முன்னேற்றத்தைத் தடுக்க யாராலும் முடியாது...

# கடலுக்கு அடியில் பாடமெடுக்கும் பேராசிரியர்கள்

அமெரிக்காவை சேர்ந்த 2 பேராசிரியர்கள் கடலுக்கு அடியில் 73 நாள்கள் தங்கியிருந்து, மாணவர்களுக்கு இணையத்தளம் மூலம் பாடம் நடத்தவுள்ளனர். அவர்கள் புளோரிடாவில் கடலுக்கு அடியில் உள்ள ஆய்வு மையத்தில் இருந்தபடி பாடம் நடத்த உள்ளனர்.

அமெரிக்காவின் தென்கிழக்கே புளோரிடா மாநிலத்தில் உள்ள டென்னசி நகரில் உள்ள ரோனே மாநில சமுதாய கல்லூரி மிகவும் பிரபல மானது. இங்கு புரூஸ் கான்ட்ரல் (வயது-63) மற்றும் ஜெசிக்கா பைன் (வயது-25) ஆகிய 2 பேராசிரியர்கள் பணியாற்றுகின்றனர். காரே லார்கோ பகுதியில் உள்ள கடலுக்கு அடியில் ஜுலிஸ் கடல் ஆய்வு மையத்தில் இவர்கள் இருவரும் கடல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். கடல் பாதுகாப்பு மற்றும் ஆய்வு தொடர்பான யூரியூப் இணையத்தளம் மூலம் ஆராய்ச்சி மாணவர்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் 25 ஆம் திகதி வரை வீடியோ மூலம் பாடம் நடத்துகின்றனர்.

அத்துடன், நிலவில் நடந்த விண்வெளி வீரர் பஸ் அல்டிரைன் உள்ளிட்ட பலவேறு கடல் ஆய்வு நிபுணர்களிடம் தங்களது ஆய்வுப் பணிகள் குறித்து விளக்கமளிக்கின்றனர்.

இதற்கு முன் கே லார்கோ கடற்பகுதியில் கடந்த 1992 ஆம் ஆண்டு, ஜுலை மாதம் ரிச்சாட் பிரஸ்லே கடலுக்கு அடியில் 69 நாள்கள் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண் டமை கின்னஸ் சாதனையாக கருதப்பட்டது.

தற்போது கான்டரலும் ஜெசிக்காவும் கடலுக்கு அடியில் 73 நாள்கள் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்வது, ரிச்சார்ட்டின் சாத னையை முறியடித்து, கின்னஸ் சாதனையில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தீபாவளிக்கு என்ன படங்கள்?

தீபாவளிப் பண்டிகைக்கு என்ன படங்கள் வெளியாகும் என்று பரபரப்பான செய்திகள் ஒளிபரப்பாகிவரும் நிலையில் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பாகும் சிறப்புத் திரைப்படங்கள் பற்றி இப்போதே முன்னோட்டம் போட ஆரம்பித்துவிட்டனர். ரசிகர்களுக்காக இல்லை என்றாலும் விளம்பரதாரர்களை அதிக அளவில் தங்களின் பக்கம் ஈர்க்க புத்தம் புதிய திரைப்படங்களை ஒளிபரப்புகின்றன தொலைக்காட்சி அலைவரிசைகள்.

சன் தொலைக் காட்சியில் விஜய், காஜல் அகர்வால் நடித்த ஜில்லா படம் ஒளிபரப்பாக உள்ளது. இந்தத் திரைப்படம் ஏற்கனவே திருவோணம் தினத்தன்று சூர்யா தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிவிட்டது. எனினும் சன் தொலைக்காட்சியில் மீண்டும் ஒளிபரப்ப உள்ளனர்.

அதேபோல விஜயதசமிக்கு என்று சொல்லப்பட்ட சூர்யாவின், அஞ்சான், திரைப்படமும் சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

விமல், லட்சுமி மேனன் நடித்த மஞ்சப்பை திரைப்படம் ஜீ தமிழ் தொலைக்காட்சியில் தீபாவளி சிறப்புத் திரைப்படமாக ஒளிபரப்பாக உள்ளது. சிவகார்த்திகேயன், ஹன்சிகா நடித்த மான் கராத்தே திரைப்படம் விஜய் தொலைக்காட்சியில் தீபாவளி சிறப்புத் திரைப்படமாக ஒளிபரப்பாக உள்ளது. அல்லு




அர்ஜுனுடன் ஸ்ருதிஹாசன் ஜோடியாக நடித்துள்ள ரேஸ் குர்ரம் திரைப்படம் தீபாவளி சிறப்புத் திரைப்படமாக ஜெமினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக உள்ளது.







நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தின் நவராத்திரிவிழா நிலையத்தின் செயலாளர் நடேச பிள்ளை கஜேந்திரகுமார் தலைமையில் நிலையத்தில் இடம் பெற்றது. இதன் போது சிறுவர்களின் நடனம் பேச்சு, கவிதை நிகழ்வுகள் இடம் பெற்றன. இசையமைப்பாளர் ஸ்ரீகுகனின் சப்தஸ்வரம் இசைக் கல்லூரி மாணவர்களின் கீ போர்ட் இசை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-5)





பொலிகண்டி மக்கள் படிப்பக முன்பள்ளியின் வாணி விழாவும், சிறுவர் தின நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களையும் சிறுவர் ஒருவருக்கு ஏடு தொடக்கப்படுவதையும், காணலாம். (வ-105)



சர்வதேச சிறுவர், ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை மல்லாகம் கிராம அபிவிருத்தி முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து முன் பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளி சிறார்களைக் கௌரவித்துள்ளார்கள். நேற்றுக் காலையில் மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து முன்பள்ளியில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோரால் தேநீர் விருந்துபசாரமும் நடத்தப்பட்டது. (வ-86)







ராஜரட்ட பல்கலைக்கழக சூழலில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் பல்கலைக்கழக தமிழ் மொழி பேசும் மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு. மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் இவ் வருட நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் அனைத்து பீடங்களைச் சேர்ந்த பல்இன மத மொழி பேசும் மாணவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப் பிடத்தக்க அம்சமாகும். (வ-5)





பரந்தன் திருச்சபை முன்பள்ளி பாலர் பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது சிறுவர்கள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (வ-421)



# வவுனியாவில் பிரமா...

# உதயன் வ...

வன்னிப் பிராந்திய மக்களுக்கான சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் வவுனியா நகரில் எமது கிளை அலுவலகத்தைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்வடைகின்றோம், திறப்பு விழாவிற்கு வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

**காலம்: 08.10.2014 புதன்கிழமை நேரம்: பி.ப. 3.00 மணி**

இல. 6...

★★★★★★★★★★★★★★★★★★★★★★ வாழ்த்துப...


## CARVALHO OPTICALS

*For you Perfect Vision*

உங்கள் தெளிவான பார்வைக்கு

இல.67, பஸ்நிலையம் கட்டடத்தொகுதி,
(முதலாம் மாடி) வவுனியா

தொடர்பு: 077 774 4522





## EYE CARE OPTICAL

ஐ கெயார் ஒப்டிக்கல்

கணினி மூலம் கண் பரிசோதிக்கப்பட்டு
கண்ணாடி வழங்கப்படும்.

**Computer Eye Testing**

**#55, Bus Stand Kandy Road, Vavuniya.**
**#49, Bus Stand Complex, Vavuniya.**

Prop: T.Janahan (Opticion) 077 571 7676

Tel: 024 490 5334 (45.6.3)

## T Mobile Tech

No.109,Kandy Road, Vavuniya. Tel : 024 222 2897

*Authorised Dealers in :*

SAMSUNG Mobile Hero

**No. 184-1, Kandy Road, Vavuniya.**
**S&H : 0777 402 777, Tel: 024 791 0905**
**email: hero109vavuniya@gmail.com**

## Lanka Sat Systems

The Dish Doctors

OVER 20 YEARS EXPERIENCE
IN SATELLITE FIELD

**64, New Bus Stand Complex, Vavuniya, Sri Lanka.**

- சகல விதமான டிஸ் அன்ரனாக்களும் திருத்திக் கொடுக்கப்படுவதுடன் . சேவிசும் செய்து கொடுக்கப்படும்.
- TV அன்ரனா மற்றும் உதிரிப் பாகங்களும் கேபிள் TV உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.




**தொடர்பு: 024 222 7499 / 077 320 1764**
Email : newlankasat@yahoo.com

## HONDA AHUJA

PUBLIC ADDRESS SYSTEM

அங்கீகரிக்கப்பட்ட முகவர்:

## N.S.RATNAM & BRO'S

இல. 6, முதலாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

| | |
|---|---|
| வவுனியா | : 024 222 1237 |
| மன்னார் | : 024 324 8889 |
| முல்லைத்தீவு | : 024 324 8886 |

Email : nsratnambros@yahoo.com

## நிரந்தர தொழில் வாய்ப்பு

கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான ஜாம்/ ரொபி/சொக்லேட்/பால்மா/கிளவுஸ்/நூடில்ஸ்/காமென்ட் போன்றவற்றிற்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல் களஞ்சிய பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்-பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் 18000/=, 38000/= வரை. தங்குமிடம், உணவு குறைந்த

**தொடர்பு:077 111 6770/077 683 8231**

## இலவச கருத்தரங்குகள்

**Capital Market Trading**

வீட்டிலிருந்து இணையத்தினூடாக குறைந்தது ஒரு நாளைக்கு 20$-30$ வரை வருமானம் ஈட்டுதல் தொடர்பான இலவச கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் செயலமர்வுகள் நடைபெற இருப்பதனால் பங்குகொள்ள இருப்பவர்கள் ஆசன முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு:077 226 5154/077 552 7397




# ...ண்டமான ஆரம்பம்

## ...வவுனியா கிளை அலுவலகம்

இல. 60, பஸ்நிலைய மேல்மாடி, வவுனியா.
தொ.பே. : 024 222 1639
தொ.நகல் : 024 222 6803

ஒருங்கிணைந்த சேவையாக சுடர் ஒளி, ஒளிஅரசி, ...மலைச்சுடர் ஆகியவற்றை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

...துபவர்கள் ★★★★★★★★★★★★★★★★★★★★★★

**பிறின்ஸ் ஹோட்டல்**
சைவ உணவகம்
திருமணம் மற்றும் வைபவ நிகழ்வுக்கு சகலவிதமான சைவ உணவுகளும் ஓடர்களுக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
சுகாதார முறைப்படி தயாரித்த தரமான சைவ உணவுகள்
TP: 077 600 0800
11, கண்டி வீதி, வவுனியா.
(12.3.6)

**சிம்பொன் பேக்கறி**
சகலவிதமான பேக்கரி வகை உணவுகளும் பெற்றுக்கொள்ளலாம்
வைற்ஸ்ரோன் றெஸ்ரூரண்ட் அன்ட் பேக்கறி பிறை.லிமிட்ட்
(நிகழ்வுகளுக்கு மண்டப வசதிகள் எம்மால் வழங்கப்படும்)
வவுனியா - 024 222 6262
16, கண்டி வீதி, வவுனியா

**டிலக்னா ஸ்ரூடியோ & வீடியோ**
இல. 81, புதிய பஸ்நிலைய மேல்மாடி, வவுனியா.
டிஜிற்றல் வீடியோ அன் போட்டோ, வீடியோ மிக்சிங் மற்றும் கலர் புகைப்படங்களை 5 நிமிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P.: 024 222 4737 | 077 625 2560

**திலினா லேர்ணஸ்**
D.S. 593
"A" தர சாரதிப் பாடசாலை

இல.62, பஸ்நிலைய கட்டடத்தொகுதி, வவுனியா.
தொ.பே: 024 222 5629 / 077 633 9375

**காஞ்சனா ஜுவல்லறி**

மங்கையரின் தங்க நகைக்கான தெரிவு
இல.148, பசார் வீதி, வவுனியா. தொ.பே.: 024 222 2148

**தொழில் வாய்ப்புடன் கூடிய கற்கைகள்**
ஆரம்பம்: 12.10.2014 வவுனியாவில்
- Mass Media Course T.V/Radio
  அறிவிப்பாளர் கற்கை
- Mobile Phone Repairing – 4 Days
  கையடக்கத் தொலைபேசி திருத்துதல் பயிற்சி
- MAYA / Video Editing
- Graphic Designing
- Welding Works - 01 Month
- Foreign Language Courses
- Sinhala Course – For Staff



**SUN BRITISH**
No – 26, Station Rd, Vavuniya.
024 – 2226649 / 077 - 9713221

**பிருந்தா ஜுவல்லரி**

கண்கவர் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
28, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
024 222 1372


வண்ண வண்ண டிசைன்களில் நகைகளைப் பெற்றிட நாடவேண்டிய இடம்
**நாகா ஜுவல்லறி**
82, தர்மலிங்கம் வீதி, வவுனியா. தொ.பே.: 024 222 0599

# எல்லையில் மோதல் 5 இந்தியர்கள் சாவு



ஜம்மு, ஒக்.8

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் எல்லையோர கிராமங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். 26 பேர் படுகாயமடைந்தனர்.

2003 ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் இடையே எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தநிலையில் ஞாயிற்றுக்கிழமை பின்னிரவில் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். அர்னியா பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 13 வயது சிறுமி உட்பட 5 பேர் கொல்லப்பட்டதாக எல்லைப் பாதுகாப்புப்படை உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அர்னியா, ஆர்.எஸ்.புரா பகுதிகளில் தொடர்ந்து தாக்குதல் நடைபெற்று வருகிறது. இந்திய இராணுவமும் தகுந்த பதிலடி கொடுத்து வருகிறது என்றார்.

காயமடைந்தவர்கள் அனைவரும் ஜம்மு அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். தவிர, அவசர நிலை கருதி மருத்துவ உதவிக் குழுவும் அந்தப் பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், அண்மையில் நடந்த தாக்குதலில் இது மிகவும் மோசமான தாக்குதல் என்று கூறியுள்ளார்.

ஒக்ரோபர் மாதம் ஆரம்பித்த முதலே பாகிஸ்தான் இராணுவத்தில் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த 3 நாளில் 3 ஆவது முறையாக தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதற்கிடையில், நேற்று அதிகாலை தாங்தார் பகுதியில் இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற 3 தீவிரவாதிகளை இந்திய வீரர்கள் சுட்டுக் கொன்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (வ)

## தொழில்நுட்பக் கோளாறால் ரொக்கெட் ஏவுவதில் தாமதம்

### இஸ்ரோ அறிவிப்பு

ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.1சி செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்படும் திகதி தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.



இதுகுறித்து இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், வரும் 10 ஆம் திகதி, பி.எஸ்.எல்.வி. சி26 றொக்கெட் மூலம் ஏவப்பட இருந்த ஐ.ஆர்.என். எஸ்.எஸ். 1 சி செயற்கைக் கோள் ஏவும் செயற்பாடு ஒருவார காலத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட சோதனையின் போது, செயற்கைக் கோளில் உள்ள ஒரு கருவி செயற்படாமல் இருந்தமை தெரிய வந்துள்ளதாகவும், அந்தக் கருவி தற்போது மாற்றப்பட்டாலும், அது சரியாக செயற்படுகிறதா என்பதை அறிய ஒரு சில தினங்கள் பிடிக்கும் என்பதால், விண்ணில் ஏவப்படும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது. புவி இருப்பிட அமைப்பை அறிந்து கொள்வதற்காக ஏற்கனவே இரண்டு ஐ.ஆர்.என். எஸ்.எஸ். வகையிலான செயற்கைக் கோள்கள் இஸ்ரோ மூலம் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஏவப்பட இருந்த செயற்கைக் கோள் ஏவப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வ)

## இந்தியாவில் முடிவுக்கு வரும் உள்நாட்டு ஸ்கைப் அழைப்பு

'ஸ்கைப்' இணையத்தள வசதி மூலம் உள்ளூர் செல்போன், தொலைபேசி அழைப்புகளுக்கான சேவை நவம்பர் 10 ஆம் திகதியுடன் இந்தியாவில் நிறுத்தப்படும் என்று மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது. 'ஸ்கைப்' என்ற வசதி மூலம் இணையத்தின் வழியாக உள்ளூர், வெளிநாடுகளில் உள்ள செல்போன்கள், தொலை பேசிகளுக்கு வாடிக்கையாளர்கள் இலவசமாகத் தொடர்பு கொண்டு பேச முடியும்.

'ஸ்கைப்' சேவையினால் தங்களது வருவாய் பெருமளவு பாதிக்கப்படுவதாக இந்தியத் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாகக் குற்றஞ் சாட்டின. இந்த நிலையில், 'ஸ்கைப்'பின் தாய் நிறுவனமான மைக்ரோசொப்ட் நேற்று முன்தினம் மேற் குறிப்பிட்ட முடிவை அறிவித்துள்ளது. (வ)

**அரியாலை முதியோர் இல்லம்**

272, AV றோட், அரியாலை, யாழ்ப்பாணம்

60 வயது பூர்த்தியான முதியோர்களை எமது இல்லத்தில் சேர்ப்பதற்கு

* அனுமதி கோரலாம் * ஆண்கள் மட்டும்
* முற்றிலும் இலவசம்

தொடர்பு:077 257 1253 / 077 614 3231 · 075 503 2515

(52981) (4.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




செல்வி யோண்சன் சுரேஸ் ஜஸ்மின் மீரா

2014 ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை மாணவி செல்வி யோண்சன் சுரேஸ் ஜஸ்மின் மீரா அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன், மேன்மேலும் பரீட்சைகளில் சித்தி பெறவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பம்மா, றமேஸ் பெரியப்பா (லண்டன்), றெஜி சித்தப்பா (லண்டன்) மற்றும் குட்டிப் பெரியப்பா, டயஸ் சித்தப்பா.

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்**



வருகின்ற தீபாவளியை முன்னிட்டு ஜெயசாயி இல் கொள்வனவு செய்யப்படும் அனைத்து விதமான ஆடைகள், பான்சிப் பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையில் இருந்து அரைவாசி விலைக்கு பெற்றுக்கொள்வதுடன் 2000/= ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களும் பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393

**எழுப்புதல் பெருவிழா**



உன் ஆவிக்குரிய வாழ்விலும்
உன் தனிப்பட்ட வாழ்விலும்
உன் ஊழிய வாழ்விலும்
எழுப்புதல் வேண்டுமா?
எழுப்புதலைப் பெற்றுக்கொள்ள
விரைந்து வாருங்கள்.

தேவசெய்தி: போதகர் Dr.Rev.டானியல்
திகதி: 09.10.2014, 10.10.2014
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: Church of Chirist
418, நாவலர் வீதி, அரியாலை, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 072 753 7547

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுமதி இலவசம்.

(52972)(3.6.4)

**கார் விற்பனைக்கு**

சொந்தப் பாவனையில் உள்ள 10 ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் 2 மணிக்குப்பின்

தொடர்பு:021 320 3379 (52982) (4.6.3)

**கடை/காட்சியறை**

யாழ்.கஸ்தூரியார் வீதியில் ஸ்ரான்லி வீதி சந்தி ராஜா தியேட்டரை அண்மித்து கட்டடம் வாடகைக்கு.

(53021) (12.3.6) தொடர்பு: 077 368 6142

**கடை வாடகைக்கு**

இல.228, சேர் பொன் இராமநாதன் வீதியில் அமையப் பெற்றுள்ள கடைத்தொகுதியில் அமைந்துள்ள 228/C இலக்கக்கடை வாடகைக்குப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். இக்கட்டடம் தற்போதைய நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மின்சாரவசதி, நீர் வசதி, மலசல கூட வசதிகளுடன் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமையப்பெற்றது.

தொடர்பு:077 783 3807 (52984) (4.6.3)

**கட்டடத் தேவைக்கான ஊசிக்கால் இரும்புக் கேடர் விற்பனைக்கு**

கேடர் 45 அடி நீளமான கொட்டகைக்கு பயன்படுத்தக் கூடியது. யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இல.228, சேர் பொன் இராமநாதன் வீதியில் உள்ளது.

தொடர்பு:077 783 3807 (52985) (4.6.3)

**தவறிவிட்டது**

கரடிபோக்குச் சந்தியில் இருந்து பன்னங்கண்டி செல்லும் வீதியில் Phone ஒன்று 05.10.2014 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (52979) (45.6.3)

தொடர்பு: 077 117 8059,077 684 8346

**கடைக்கட்டடம் விற்பனைக்கு**

புத்தூர் நவக்கிரி பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய தொடராகவுள்ள மூன்று கடைக்கட்டடம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 183 4908 (சி.10803) (45.6.3)

**யாழில்** - நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில்
டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

**அருள் ஒளி தர்சன மாலையும்
ஐப்பசி மாத விசேட பூஜையும்**







பூத்தவளே, புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?

டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள்ஒளி தர்சன மாலையும் ஐப்பசி மாதத்திற்குரிய விசேட பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விளங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்எண்ணமும், உள்ளத்தில் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.
அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

இடம்
நல்லூர் இளம் கலைஞர்மண்டபம்
காலம் : 12.10.2014
ஞாயிற்றுக்கிழமை
பகல் 10.30 மணி

திருவருள் நிகழ்வுகள்:

* மங்கள வாத்தியக் கச்சேரிகள்
* தெய்வீக பஜனை நிகழ்வுகள்
* அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
* அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
* அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
* காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
* அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திருப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட பாகதீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு:
Tel: 0045 97180192, 0045 40413431
Fax: 0045 97184192

யாழ் தொடர்புக்கு:
077 982 5004

www.abiramiamman.dk

www.nisart.com

இடம் : நல்லூர் இளம் கலைஞர்மண்டபம். காலம் : 12.10.2014 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30

## மிகப்பெரிய தொலைநோக்கி தயாரிப்பில் 5 நாடுகள்

டுபாய், ஒக்.8
இந்தியா உள்ளிட்ட 5 நாடுகள் இணைந்து உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியைத் தயாரிப்பதில் களம் இறங்கியுள்ளன.

இந்தியா அண்மையில் வெற்றிகரமாக செவ்வாயில் மங்கள்யாணை நிறுவி உலக அரங்கில் சாதனை படைத்தது. தற்போது மற்றுமொரு சாதனை முயற்சியாக உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி தயாரிப்பில் இணைந்துள்ளது.



இந்தியா, அமெரிக்கா, கனடா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியில் அமெரிக்காவில் 30 மீற்றர் விண்வெளி தொலைநோக்கி அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. இது உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியாக அமையும்.

மொத்தம் சுமார் ரூ.9,000 கோடி செலவில் அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள மௌனா கியா என்ற இடத்தில் பிரம்மாண்டமான அந்தத் தொலைநோக்கி நிறுவப்படுகிறது. 2022 மார்ச் மாதம் இந்தப்பணியை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

5 நாடுகளின் 100 விஞ்ஞானிகள், அதிகாரிகளின் முயற்சியில் பணியாற்றி 4012 மீற்றர் உயரத்தில் அமைய உள்ள இந்தத் தொலைநோக்கியை அமைப்பதற்கான செலவை 5 நாடுகளும் ஏற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# பஸ் கவிழ்ந்து 29 பேர் சாவு

காத்மாண்டு, ஒக்.8
நேபாளத்தில் சாலையோரப் பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 29 பேர் உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



நேபாளத்தில் டோட்டி மாவட்டத்திலிருந்து சுமார் 100 பயணிகளுடன் பஸ் ஒன்று, தண்கடீ பகுதியை நோக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்று கொண்டிருந்தது.

டோட்டி அருகே சாத்திவான் கிராமத்தின் மலைப் பாதையில் சென்றபோது, திடீரென பஸ் கட்டுப்பாட்டை இழந்து அங்குள்ள 300 மீற்றர் பள்ளத்தில் கவிழ்ந்தது. இதுகுறித்து தகவலறிந்த அந்தப்பகுதி மக்களும், ராணுவத்தினரும் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதில் 29 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மேலும் சிலரது உடல்கள் தேடப்பட்டு வருகின்றன. 40 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 25 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (வ)

## ஜப்பானில் புயல் 600 விமான சேவை ரத்து

டோக்கியோ, ஒக்.8
ஜப்பானில் நேற்று முன்தினம் வீசிய திடீர்ப் புயலால், டோக்கியோ நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது; 600 விமானங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

ஜப்பானின் டோக்கியோ நகரை நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு திடீரென புயல் தாக்கியது. இதனால், ஏராளமானோர் பீதி அடைந்தனர். மணிக்கு, 180 கி.மீ. வேகத்தில் பலமான காற்று வீசியதால், ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்தன. இந்தப் புயல் பாதிப்புகளை படம்பிடிக்க முயன்ற, அமெரிக்க இராணுவ வீரர்கள், மூன்று பேர், கடலில் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (வ)

## போர் நிறுத்தத்தை மீறிய தாக்குதல் 80 பேர் சாவு

உக்ரைனில் போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஒருமாத காலமாகியும் அங்கு அமைதி ஏற்படவில்லை. போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்த பிறகு நடைபெற்ற தாக்குதல்களில் இதுவரை 80 பேர் உயிரிழந்துள்ளனர். டொனட்ஸ்க் உள்ளிட்ட நகரங்களில் தொடர் தாக்குதல் இடம்பெற்று வருகின்றன. டொனட்ஸ்க் விமான நிலையம் தொடர்ந்து தாக்குதல் களமாகவே காட்சி அளிப்பதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனின் கிழக்கு நகரங்களில் கடந்த சில மாதங்களாக ரஷ்ய ஆதரவு கிளர்ச்சி நடைபெற்றது. அதனை அடுத்து கடந்த மாதம் 5 ஆம் திகதி, ரஷ்யா முன்னிலையில் உக்ரைன் அரசு மற்றும் கிளர்ச்சியாளர்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். (வ)



## மாயமான மலேசிய கப்பல் பணியாளர்களின் கதி என்ன?

கோலாலம்பூர், ஒக்.8
மாயமான மலேசிய விமானத்தை தொடர்ந்து தற்போது மலேசிய போர்க்கப்பல் ஒன்று காணாமல் போயுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மார்ச் 8 ஆம் திகதி எம்.எச். 370 மலேசிய விமானம் நடுவானில் மாயமானதைப் போல் தற்போது அந்த நாட்டு கடற்படைக்கு சொந்தமான போர்க்கப்பல் ஒன்று 7 பணியாளர்களுடன் மாயமாகியுள்ளது.

சி.பி.90.ஹெச் என்ற போர்க்கப்பல் ஞாயிற்றுக்கிழமை புலாவ் லயாங் லயாங் பவளத் தீவு நோக்கி வழக்கமான ரோந்துப் பணிக்கு சென்றபோது திடீரென ரேடாரில் இருந்து காணாமல் போனது.

மோசமான வானிலை நிலவுவதால் ரோந்துப் பணியிலிருந்து திரும்ப அனுமதிக்குமாறு கடைசி அழைப்பு வந்த நிலையில், அந்த கப்பல் காணாமல் போயுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது அந்தப் போர்க் கப்பலை தேடும் பணியில் விமானப்படை விமானங்கள் உட்பட 3 போர்க் கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அந்தநாட்டு அரசு தெரிவித்துள்ளது. (வ)




ஸ்பெயினில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 25 ஆவது மனித கோபுரம் போட்டியின்போது போட்டியில் கலந்துகொண்டோரில் ஒரு தொகுதியினரால் ஒன்றிணைந்து அமைக்கப்பட்ட மனித கோபுரம்.

## பிரேசில் ஜனாதிபதித் தேர்தலில் இழுபறி

### ஒக். 26 இல் மறு தேர்தல்

ரியோடி ஜெனீரோ, ஒக்.8
பிரேசில் ஜனாதிபதித் தேர்தல் முடிவில் இழுபறி நீடித்து வருவதால் வரும் 26 ஆம் திகதியன்று மறு தேர்தல் நடக்கவுள்ளது.



தென்அமெரிக்கா கண்டத்தில் உள்ள பிரேசில் நாட்டின் புதிய அதிபருக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், ஆளும் இடதுசாரி இயக்கமான தொழிலாளர் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி டில்மா ரூசோப் மீண்டும் போட்டியிட்டார்.

அவரைஎதிர்த்துமத்தியஉரிமை கட்சி சார்பில் ஏசியோ நெவெஸ் மற்றும் சோசலிஸ்ட் கட்சி சார்பில் மரினா சில்வா ஆகியோரும் போட்டியிட்டனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்குப்பதிவில், 14 கோடியே 20 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்தனர். அதன் பின்னர் வாக்கு எண்ணிக்கை நேற்றுத் தொடங்கியது.

94 சதவீத வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் அதிபர் டில்மா ரூசோப் 42 சத வீதம் வாக்குகள் பெற்றிருந் தார். அவருக்கு அடுத்தபடி யாக நெவெஸ் 34 சதவீத வாக்குகள் பெற்றிருந்தார்.

அவர்களுக்கு அடுத்தபடியாக சோசலிஸ்ட் கட்சி வேட்பாளரும் சுற்றுப்புற சூழல் ஆர்வலருமான மரினா சில்வாவுக்கு 21 சதவீத வாக்குகளே கிடைத்தன. இந்த தேர்தலில் வெற்றிக்கு தேவையான 50 சதவீத வாக்குகள் எவருக்கும் கிடைக்காததால் இழுபறி நீடிக்கிறது. (வ)

## ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை மிரள வைத்த பெண் போராளியின் தாக்குதல்

### 33 தீவிரவாதிகள் சாவு



ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிராக பெண் போராளி ஒருவர் நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 33 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தனி இஸ்லாமிய தேசத்தை பிரகடனம் செய்து தொடர்ந்து அட்டூழியங்களை நிகழ்த்தி வருகிறது. குறிப்பாக மேற்கு சிரியாவில் வசிக்கும் குர்திஷ் இன மக்கள், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் அவர்களை ஒழிக்கும் நோக்கில் அங்கு உள்ள 350 கிராமங்களைக் குர்திஷ் படையினர் தங்கள் வசம் வைத்துள்ளனர்.

இந்த நிலையில் மேற்கு சிரியாவில் உள்ள கோபேன் நகரத்தில் நேற்றுமுன்தினம் தீவிரவாதிகளுக்கு எதிராக குர்திஷ் படையினர் தாக்குதலை நடத்தியபோது, அரின் மிர்கின் என்ற பெண் போராளியை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் சுற்றிவளைக்க முயன்றுள்ளனர்.

அப்போது திடீரென அந்தப் பெண் மனித வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார். இதில் 33 ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்தனர். அந்தப்பெண்ணின் செயல் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் கடந்த சில தினங்களுக்கு முன்பு 19 வயது குர்திஷ் இனப் பெண் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தன்னை சுற்றி வளைத்ததை அடுத்து தன்னைத் தானே சுட்டு உயிர்துறந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# எகிப்தில் உளவாளிகள் மூவர் தலைகள் துண்டித்து கொலை

### பயங்கரவாதிகள் கொடூரம்

கெய்ரோ, ஒக்.8
இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாகக் கூறி, எகிப்தின் சினாய் மாகாணத்தில் இயங்கிவரும் அன்ஸார் அல்-மக்தஸ் (ஏ.பி.எம்.) என்ற பயங்கரவாத அமைப்பு 3 நபர்களது தலையைத் துண்டித்துக் கொலை செய்தது.

மேலும், எகிப்து ராணுவத்துக்காகப் பணியாற்றியதாகக் கூறி மற்றொருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதுடன், அந்தப் படுகொலைக் காட்சிகளின் காணொலியை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டது.

அந்தக் காணொலியில், தலை துண்டித்துக் கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக அந்த மூவரும் தாங்கள் இஸ்ரேலுக்காக உளவு பார்த்ததாகவும், சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னதாக அந்த நபர், தாம் எகிப்து ராணுவத்துக்காகப் பணியாற்றியதா வும் ஒப்புக் கொள்வதைப் போன்ற காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

ஏற்கெனவே, தங்களுக்கு எதிராக உளவு பார்த்ததாகக் கூறி 4 பேர் தலையைத் துண்டித்துக் கொலை செய்த காணொலிக் காட்சியை ஏ.பி.எம். அமைப்பு கடந்த ஒகஸ்ட் மாதம் வெளியிட்டது.

முன்னதாக, எகிப்தில் நடைபெற்ற பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஏ.பி. எம். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதியான ஜனாதிபதி முகமது மோர்ஸி, 2013 ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டதிலிருந்து, அந்த அமைப்பு தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அந்தநாட்டின் தெற்குப் பகுதியிலுள்ள் ஓர் இராணுவச் சாவடியில் ஏ.பி.எம். பயங்கரவாதிகள் கடந்த ஜூலை மாதம் நிகழ்த்திய தாக்குதலில் 21 எல்லைக் காவல் படை வீரர்கள் உயிரிழந்தனர். (வ)

# காசு கொடுத்து அடிவாங்கும் மக்கள்



ரஷ்யாவில் மருத்துவக் குழு ஒன்று கெட்ட பழக்கத்துக்கு அடிமையாகி உள்ளவர்களைக் குணப்படுத்தும் விதமாக குச்சியால் பிட்டத்தில் 60 அடிகள் கொடுக்கும் விநோதமான சிகிச்சையை மேற்கொள்கின்றது.

ரஷ்யாவில் மது, புகை மற்றும் வெவ்வேறு பழக்கங்களில் அடிமையாகி உள்ள மக்களை குணப்படுத்தவே இந்த நடைமுறை கைக்கொள்ளப்படுகிறது.

நோயாளிகளைக் குணப்படுத்த பிட்டத்தில் இவ்வாறு குச்சியால் 60 அடிகள் கொடுப்பதால் மன உளைச்சல், மனக் கோளாறு போன்ற நோய்கள் தீருவதாக சிபேரியாவில் நடந்த ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

30 நபர்களை வைத்து நடத்திய ஆராய்ச்சியில் மூன்று பங்கு மக்களில் முன்னேற்றம் காண்பித்ததாக கூறப்படும் இந்த சிகிச்சை முறை தற்போது ஏராளமான மக்களைக் கவர்ந்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

50 பவுண்டுகள் வசூலிக்கப்படும் இந்த சிகிச்சையை நோயாளிகள் திருப்திகரமாக உணர்வதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சிகிச்சை பெறும் நபர்களில் 17 வயது முதல் 70 வயதான முதியவர்கள் உள்ளனர் என்றும் தற்போ்து உலகின் ஏனைய நாட்டு மக்களும் இவ்வகை சிகிச்சை பெற ரஷ்யாவில் குவிகின்றனர் என்றும் தெரிய வந்துள்ளது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | | 6 | 9 | | 1 |
| 9 | | 8 | | | | | | 6 |
| 6 | | | | 9 | 8 | 2 | 5 | |
| | | | | 2 | | | 4 | 5 |
| 5 | | 1 | | 6 | | 7 | | 8 |
| 2 | 8 | | | 4 | | | | |
| | 9 | 6 | 7 | 3 | | | | 2 |
| 1 | | | | | | 3 | | 4 |
| 7 | | 4 | 2 | | | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 7 | 6 | 2 | 9 | 4 | 8 | 5 |
| 6 | 2 | 8 | 4 | 5 | 1 | 7 | 9 | 3 |
| 5 | 9 | 4 | 8 | 3 | 7 | 2 | 1 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 5 | 4 | 1 |
| 9 | 5 | 3 | 2 | 1 | 4 | 6 | 7 | 8 |
| 4 | 7 | 1 | 5 | 6 | 8 | 3 | 2 | 9 |
| 1 | 3 | 6 | 7 | 9 | 2 | 8 | 5 | 4 |
| 7 | 4 | 9 | 3 | 8 | 5 | 1 | 6 | 2 |
| 2 | 8 | 5 | 1 | 4 | 6 | 9 | 3 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உண்மையான சீர்திருத்தவாதி

நீங்கள் உண்மையான சீர்திருத்தவாதியாக இருக்க விரும்பினால் மூன்று அம்சங்கள் இன்றியமையாதவை. முதல் அம்சம் பரிவு. உறவினர்களிடமும் மற்றவர்களிடமும் ஏற்படுகின்ற இரக்கம் உலகில் இத்தனை துன்பங்களும் அறியாமையும் மூடநம்பிக்கையும் இருக்கின்றனவே என்று கவலைப்படுதல் இவையெல்லாம் முதல் அம்சமாகிய பரிவாகும். அடுத்ததாக பரிகாரம் என்ன என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். பழைய கருத்துக்கள் எல்லாம் மூடநம்பிக்கைகளாக இருக்கலாம். ஆனால் இந்த மூட நம்பிக்கைகளின் குவியலுக்குள்ளே உண்மை என்னும் தங்கக் கட்டிகள் உள்ளன. மாசுகளை வைத்துக்கொள்ளாமல் அந்த தங்கத்தை மட்டும் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி கண்டுபிடித்தால் அது இரண்டாவது அம்சம். உலகம் முழுவதும் உங்களை நசுக்க விரும்பினாலும் நீங்கள் உங்கள் குறிக்கோளை கைவிடாமல், பணத்துக்கோ புகழுக்கோ ஆசைப்படாமல், அதிகார வெறி இல்லாமல், நம்பிக்கையுடன் தொடர்ந்து வேலை செய்வது மூன்றாவது அம்சமாகும். உங்களுக்கு வேண்டியது என்னவென்று தெரிந்து உயிர் போகும்போதும் நீங்கள் அந்தக் கடமையை உறுதிப்பாட்டுடன் செய்வதேயாகும். அதாவது எங்கள் இதயத்தின் கடைசித் துடிப்பு உள்ளவரை உழைப்போம் என்ற நம்பிக்கை ஆகும். இவையெல்லாம் இருக்குமானால் நீங்கள் உண்மையான சீர்திருத்தவாதி. ஓர் ஆசான். ஒரு மகான். மனித இனத்துக்கே ஒரு வரப்பிரசாதம் ஆவீர்கள். ஆனால் மனிதன் சற்றும் பொறுமையற்றவன். மிகவும் குறுகிய நோக்கம் உடையவன். காத்திருக்கும் பொறுமை அவனுக்கு இல்லை. பார்க்கும் சக்தி அவனுக்கு இல்லை. அவன் ஆள விரும்புகிறான். மற்றவர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை, பலன்களை எதிர்பார்க்கிறான். பலன்கள் தாமாகவே வரட்டும் என்று பலன்களை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்வோம் என்று வாழ்பவனே உண்மையான சீர்திருத்தவாதியாவான்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: அவசரமாக எதையும் செய்யத் தோன்றும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எல்லா அனுகூலமும் கிடைக்கப் பெறும். ஆனால் வீண்வாக்குவாதத்தால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**இடபம்**: சாதுரியமாகப் பேச வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது.

**மிதுனம்**: வேலைகளில் நிதானம் தேவை. வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகம் தொடர்பாக அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்து தீர ஆலோசித்து எதிலும் ஈடுபடவும். மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது.

**கடகம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு பணவரத்து குறையலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும் கூடுதலாக பணிச் சுமையும் ஏற்படக்கூடும். குடும்பத் தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.

**சிங்கம்**: மனதுக்குப் பிடித்த விசேட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எல்லோரிடமும் அனுசரித்துச் செல்வது நல்லது. உயர் பதவிக்கான உதவிகள் கிடைக்கும். இட மாற்றம் உண்டாகலாம். திடீர் கோபம் வரும்.

**கன்னி**: எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். எனவே எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும்போது எச்சரிக்கை தேவை.

**துலாம்**: தீ, ஆயுதம் இவற்றைக் கையாளும்போது கவமனாக இருப்பது நல்லது. பிள்ளைகள் மூலம் மனக்கவலை ஏற்படலாம். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரலாம். கவனம் தேவை.

**விருச்சிகம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த வேகம் குறையும். தொழில் தொடர்பான புதிய முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனைப் பெறுவார்கள். சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும்

**தனுசு**: மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை. திடீர்க் கோபம் ஏற்படலாம் குறைத்துக் கொள்வது நல்லது. கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொள்வது நன்மை தரும். தொழிலில் எல்லா விதமான முன்னேற்றமும் உண்டாகும்.

**மகரம்**: எல்லாவிதமான முன்னேற்றத்தையும் தரும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்புக் கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும்.

**கும்பம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவும், மனக்குழப்பம் நீங்கித் தைரியம் உண்டாகும். தொலைதூரத் தகவல்கள் நல்ல தகவல்களாக வரும்.

**மீனம்**: மற்றவர்களின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக் கூறாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

**நாளை**

**புரட்டாதி-23 வியாழக்கிழமை | 09.10.2014**

திதி: பிரதமை பி.ப.03.31 வரை
நட்சத்திரம்: ரேவதி
மு.ப.09.21 வரை

சுபநேரம்:07.32-09.02 வரை
இராகுகாலம்:01.32-03.02 வரை

# டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணம்; இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ், கே.ஸி.ஸி.ஸி.





யாழ்ப்பாணம்,ஒக்.8
யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரிமைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துசென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இன்றைய நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் கே.முத்துக்குமார், சிறப்பு விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மத்தியகல்லூரியின் யாழ். பழைய மாணவர் சங்கத் தலைவர் என்.தமிழழகன் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவன் சிவஸ்ரீ.கமலராஜ் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

## நசேரெத் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.8
துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் நடத்திய, அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து புங்குடுதீவு நசேரெத் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதிக் கொண்டது. இதில் புங்குடுதீவு நசேரெத் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ரி- 23)

# பொலிகை பாரதி அசத்தல் வெற்றி

கரணவாய்,ஒக்.08
நாகர்கோவில் நாகதீபம் 'பி' அணியை 6:0 என வீழ்த்தி அசத்தல் வெற்றி பெற்றது பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம்.

அதேவேளை - இளந்தென்றல் விளையாட்டுக் கழகம், மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் என்பனவும் வெற்றியீட்டியுள்ளன.

தாளையடி சென் அன்ரனீஸ் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் நாகர் கோவில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும், கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின் 1:0 என கோல்கணக்கில் இளந்தென்றல்விளையாட்டுக்கழகம்வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. இந்த அணி சார்பாக மணிமாறன்கோலைப்போட்டார்.

மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் நாகர்கோவில் நாகதீபம் விளையாட்டுக் கழக 'பி' அணியும் மோதின. இதில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய பொலிகை பாரதி அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. அந்த அணி சார்பாக ரஞ்சித், மன்மதன் ஆகியோர் தலா 2 கோல்களையும், வினோ,ரகிதரன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர்.

இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் உடுத்துறைசெந்தமிழ்விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறு விறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் முதற்பாதி ஆட்டம் தொடங்கி 10 ஆவது நிமிடத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழக வீரர் அகித் தமது அணி சார்பாக முதலாவது கோலைப் பெற்றுக் கொடுக்க 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில் 15 ஆவது நிமிடத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரர் டிலக்ஷன் தமது அணி சார்பாக முதலாவது கோலைப் போட ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. இருந்தபோதும் இரு அணியினரும் மேலதிக கோல்களைப் போடாத நிலையில் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் 5:2 என்ற கோல்கள் அடிப்படையில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. (ரி-108)

# சர்வதேச மரதன் ஓட்ட நிகழ்வு வவுனியா வீரன் 7ஆம் இடம்

எல்.எஸ்.ஆர். சர்வதேச மரதன் ஓட்ட நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. 3000 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றிய மேற்படி மரதன் ஓட்டப் பந்தயத்தில் வவுனியா கோவில்குளம் இளைஞர் கழகத்தின் வீரரும், களனிப் பல்கலைக்கழகத்தின் மாணவனுமாகிய கணபதி காந்தரூபன் 7 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இந்த பந்தயத்தில் இலங்கைக்கு முதல் 10 இடங்களுக்குள் 4ஆம் மற்றும் 7ஆம் நிலைகள் மட்டுமே கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (ரி- 402)




## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.8
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவறெஸ்ட் விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

# கரவைச்சுடரை வென்றது மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ்

கரணவாய்,ஒக்.08
விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 4:2 என்ற கோல்கள் அடிப்படையில் மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

தொடரின் ஆட்டம் ஒன்றில் மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளையாடடுக் கழகமும், கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி 8 ஆவது மற்றும் 12 ஆவது நிமிடங்களில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக வீரர் ஜெயசுதன் அடுத்தடுத்துக் கோல்களைப் போட அணி வீரர்கள் உசார் அடைந்தனர். இருந்தபோதும் 18 ஆவது நிமிடத்தில் மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் அணி வீரர் ஜீவநந்தன் கோல்போட ஆட்டம் மேலும் விறுவிறுப்படைய 2:1 என்று கரவைச்சுடர் முன்னிலையில் இருக்க ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாக வீறு கொண்டெழுந்த ரெட் றேஞ்சர்ஸ் அணியின் ஜீவநந்தன் 24 ஆவது நிமிடத்திலும், பொபிநாதன் 28 ஆவது நிமிடத்திலும், துவாரகன் 38 ஆவது நிமிடத்திலும் கோல் போட 4:2 என்ற கோல்கள் அடிப்படையில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான இந்த ஆட்டம் ஆரம்பமாகி 2 ஆவது நிமிடத்திலேயே அசத்தலான கோல் ஒன்றைப் போட்டு எதிரணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் மனோகரா முன்கள வீரர் சர்மிலன். தொடர்ந்து இரு அணியினரும் தமது விளையாட்டின் போக்கை மாற்றி விரைவுபடுத்திய போதும் அவர்களால் கோல் போடமுடியவில்லை. இதனால் ஆட்டம் 1:0 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. முதற்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் தலா 4 கோல் பெறும் சந்தர்ப்பங்களை கோட்டை விட்டன.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமானதும் ஆட்டம் மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியது. இடையிடையே பந்து இரு அணியினரினதும் கோல் பிரதேசங்களை ஆக்கிரமித்த போதும் அணிகளின் கோல் காப்பாளர்கள் மற்றும் பின்கள வீரர்களின் முயற்சியால் தடுக்கப்பட்டன. இதனால் கோல் போடும் முயற்சிகள் பல வீணாக, 1:0 என்ற கோல்கணக்கில் வென்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம்.

அடுத்து இடம் பெறவிருந்த ஆட்டத்தில் பங்குபற்றவிருந்த சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழகம் வருகை தராத காரணத்தால் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ரி-108)

JSAC

## யாழ். சமூக செயற்பாட்டு மையம்
## JAFFNA SOCIAL ACTION CENTER
## பதவி வெற்றிடங்கள்

யாழ். சமூக செயற்பாட்டு மையம் (ஜெசாக்) எனும் தேசிய அரச சார்பற்ற நிறுவனமானது நலிவுற்ற மக்களின் நல்வாழ்வு மாற்றத்துக்காக கடந்த 14 வருடங்களாக செயற்பட்டு வருகின்ற ஓர் நிறுவனமாகும்.

தற்போது எமது நிறுவனமானது வேலணை மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரிவுகளில் சிறுவர் பாதுகாப்பு செயற்திட்டமொன்றினை செயற்படுத்த திட்டமிட்டுள்ளது. இத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கீழ்வரும் பதவிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

களஊக்குவிப்பாளர்கள் -(Field Animators)

திட்டப் பிரதேசம் : வேலணை மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரிவுகள்

- மேற்படி திட்டப் பிரதேசங்களில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் அணுகுமுறைகள் தொடர்பான அறிவு மற்றும் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சமுதாய மட்ட சமூகப் பணிகளில் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுபவராக இருக்க வேண்டும்.
- ஜெசாக் நிறுவனத்தின் விழுமியங்களினை புரிந்து அவற்றினை பிரதிநிதித்துவப்படுத்துபவராக இருக்க வேண்டும்.
- வயது 18-30 க்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

சம்பளமானது தகுதி மற்றும் அனுபவத்துக்கேற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலம் 16.10.2014 திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

இணைப்பாளர்
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
18/1, கைலாசபிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C16812)(10)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா பத்மநாதன்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பத்மநாதன் (07.10.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2014) புதன்கிழமை பொன்னாலை வீதி மானிப்பாயில் மு.ப 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

தகவல் :
ப.சிவாகரன்(மகன்)
0771728635

## மரண அறிவித்தல்

### டொமினிக் தனுசன் (தனு)



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டொமினிக் தனுசன் (தனு) நேற்று (07.10.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் டொமினிக் பவானி தம்பதியரின் அன்பு மகன் ஆவார்

அன்னாரின் மரணச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 27A றோட், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல் : தேவா

# சென்னையின் சொந்தக்காரன்




இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து போட்டியில் 'சென்னையின் எப்.சி' அணியின் உரிமையாளராக டோனி இணைந்துள்ளார்.
ஐ.பி.எல். போன்று இந்தியன் சூப்பர் லீக் உதைபந்து போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி முதல் டிசம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 'சென்னையின் எப்.சி.' அணி உரிமையாளர்களாக ஹிந்தி நடிகர் அபிஷேக் பச்சன், விட்டா டாரி ஆகியோர் உள்ளனர்.
இந்நிலையில் இந்த அணியின் உரிமையாளர்களில் ஒருவராக இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் டோனி இணைந்துள்ளார். இதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்ற டோனி உரிமையாளருக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த உதைபந்து தொடரில் ஏற்கனவே கொச்சி அணியின் உரிமையாளர்களில் ஒருவராக சச்சினும், கொல்கத்தா அணியின் உரிமையாளர்களில் ஒருவராக கங்குலியும், கோவா அணியின் உரிமையாளர்களில் ஒருவராக விராட் கோஹ்லியும் இருந்து வருகிறார்கள். அந்த வரிசையில் தற்போது டோனியும் இணைந்து தனது உதைபந்து ஆர்வத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.
இதுபற்றி டோனி கூறுகையில்; உதைபந்து விளையாட்டுக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். நான் பள்ளி பருவத்தில் உதைபந்து ஆட்டங்களில் பங்கேற்று இருக்கிறேன். அதன் பின்னர் தான் கிரிக்கெட்டுக்கு மாறினேன். இருப்பினும் நான் உதைபந்து ஆட்டங்களை பின்பற்றுபவன். இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து போட்டியின் மூலம் இந்திய வீரர்கள் சர்வதேச வீரர்களுடன் இணைந்து விளையாட வாய்ப்பை பெறுகிறார்கள். நான் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அணித்தலைவராக 7 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். சென்னை அணிக்காக ஆடி வருவது தான் சென்னையின் எப்.சி. அணியின் உரிமையாளர்களில் ஒருவராக சேர உந்துதலாக இருந்தது என்று கூறியுள்ளார். (ரி)

# பிளவர், பிரையரைச் சாடும் பீற்றர்சன்



இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் பயிற்சியாளர் ஆன்டி பிளவர், இலக்குக் காப்பாளர் மட் பிரையர் ஆகியோரை கடுமையாக விமர்சித்துள்ளார்.
கடைசியாக ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து 0:5 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை இழந்தது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்து அணியில் இருந்து பீற்றர்சன் நீக்கப்பட்டார். இந்நிலையில் ஆங்கில பத்திரிகை ஒன்றில் இங்கிலாந்து அணியின் அப்போதைய பயிற்சியாளர் ஆன்டி பிளவர், இலக்குக் காப்பாளர் மட் பிரையர் ஆகியோரை பீற்றர்சன் கடுமையாகத் தாக்கியுள்ளார்.
இதுபற்றி அவர் கூறுகையில்; பிரையர் அணியில் தனக்குள்ள செல்வாக்கை தவறான முறையில் பயன்படுத்தினார். பிடியெடுப்புக்களைத் தவறவிட்ட சக வீரர்களை பிரையர் கடுமையான வார்த்தையில் திட்டுவார். வீரர்கள் அறையில் மோசமான சூழ்நிலையே நிலவி வந்தது. நான் மட்டுமே அவர்களது செயற்பாடுகள் தவறானது என்று நேரடியாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தேன். இதன் காரணமாகவே என்னை அணியில் இருந்து ஓரம் கட்டினர். எவ்வளவு அதிகம் அராஜகம் செய்ய முடியுமோ அனைத்தையும் செய்து விட்டார். இதனால் அணி மோசமான தோல்விகளைச் சந்தித்தது. அந்த டெஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தபோதும் நான் அணியில் இருந்து நீக்கப்பட்டேன். அதற்கு காரணம் என்ன என்பது நான் சொல்லி தெரி வேண்டியது இல்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், இது தொடர்பாக அவர் கூறுகையில்; இலங்கை, ஆஸ்திரேலியா, இந்தியா, மேற்கிந்திய வீரர்களை கேளுங்கள் உங்களுக்கே தெரியும். இந்தியர்களிடமிருந்து எனக்கு குறுஞ்செய்தி வந்தது; சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் தொலைபேசி எண்களைத் தருகிறேன். அவர்களுக்கு தொலைபேசி செய்து கேட்டுப் பாருங்கள். உங்களுக்கு நிச்சயம் நான் கூறியிருப்பதன் உண்மை தெரியவரும் என்று கூறியுள்ளார். (ரி)

# சானியா சந்தோசத்தில்



ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது என்று இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கூறியுள்ளார்.
தென்கொரியாவில் நடந்த 17ஆவது ஆசிய விளையாட்டு போட்டியில் ரென்னிஸில் இந்தியாவுக்கு 5 பதக்கங்கள் கிடைத்தது. சானியா மிர்சா கலப்பு இரட்டையர் பிரிவில் தங்கப்பதக்கமும், தனிநபர் பிரிவில் வெண்கலப்பதக்கமும் வென்றார்.
இதுபற்றி சானியா மிர்சா அளித்த பேட்டியில், ஆசிய போட்டியில் ரென்னிஸில் 5 பதக்கங்கள் கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த தருணத்தில் எனது ரென்னிஸ் வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் நன்றாக செல்கிறது. 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி குறித்து நான் இப்போது சிந்திக்கவில்லை. அடுத்த இரண்டு வாரங்களில் தொடங்க இருக்கும் சிங்கப்பூர் ஒபன் போட்டியில் விளையாடுவதற்கு தயாராகி வருகிறேன் என்று தெரிவித்துள்ளார். (ரி)

# சச்சினுக்கு நன்றி தெரிவித்த மோடி

இந்தியாவை சுத்தப்படுத்தும் முகமாக தனது வேண்டுகோளை ஏற்று தூய்மை இந்தியா திட்டத்தில் பங்கு பற்றியமைக்காக சச்சினுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.
இந்தியாவைச் சுத்தப்படுத்தும் தூய்மை இந்தியா திட்டத்தில் பங்கு கொள்ளுமாறு, பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார். அந்த வகையில், இந்திய கிரிக்கெட் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கும் மோடி அழைப்பு விடுத்திருந்தார். அதை ஏற்றுக் கொண்ட, சச்சின் சுத்தப்படுத்தும் பணியை தனது நண்பர்களுடன் மேற்கொண்டார். அத்துடன் சுத்தமான இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.
இந்நிலையில், தூய்மை இந்தியா திட்டத்தில் பங்கேற்றமைக்காக சச்சினை டுவிட்டர் மூலம் பாராட்டி உள்ள மோடி, குறித்த திட்டம் முழு வெற்றியடைய அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். (ரி)



# உலகக் கிண்ணத்துக்கு கடினம்



விதிமுறைக்கு புறம்பாக பந்து வீசுவதாகக் கூறி சர்வதேச கிரிக்கெட் சபையினால் தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் சுழற் பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பு அணிக்குத் திரும்புவது கடினம் என்று அந்த அணியின் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகார் யர்கான் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவிக்கையில்; தனது பந்து வீச்சு முறையை சரி செய்ய அஜ்மல் கடுமையாக உழைத்து வருகிறார். அவருக்கு தேவையான உதவிகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மேற்கொண்டு வருகிறது. பந்து வீச்சில் அவரது முழு செயற்பாடுகளையும் மாற்ற வேண்டி இருக்கிறது. எனவே உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பு பாகிஸ்தான் அணியில் அவர் இடம் பிடிப்பது மிகவும் கடினமாகும் என்று தெரிவித்தார். (ரி)

# காணாமற்போன ஹொக்கி வீரர்கள்

17ஆவது ஆசிய விளையாட்டு போட்டியில் பங்கேற்பதற்காக தென் கொரியாவுக்கு சென்றிருந்த இலங்கை ஹொக்கி அணியின் வீரர்களில் நான்கு பேர் நாடு திரும்பவில்லை என்று விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
காணாமற்போன நால்வரும் படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் என்றும்- அவர்கள் அனைவரும் மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்- தெரிவிக்கப்படுகின்றது. ஹொக்கிப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து தலா 16 வீர, வீராங் கனைகள் அடங்கிய ஆண், பெண் அணிகள் இரண்டு சென்றிருந்தன. அவர்களுடன் அதிகாரிகள் நால்வரும் சென்றிருந்தனர் என்றும்- விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் பொலிஸார் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு தென்கொரியாவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.
இதேவேளை- இலங்கை இராணுவ அதிகாரிகள் மாத்தளைக்கு சென்று, காணாமற் போய் உள்ளதாகக் கூறப்படும் அந்த நான்கு வீரர்களின் உறவினர்களிடமும் அவர்கள் தொடர்பிலான தகவல்களை திரட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி)

**கடை விற்பனைக்கு**

No.27, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணத்தில் உள்ள கடை விற்பனைக்குண்டு.

(73026) (12.6) தொ.பே: 077 635 4204

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
## கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலக விவசாயக் கிளையினால் காலபோக விநியோகத்துக்காக வேதாள உண்மைவிதையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட சீரான குமிழ்கள் கொண்ட விதை வெங்காயம் 1650 Kg கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிக தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தையும் யாழ். மாவட்ட விவசாயக் கிளையில் 09.10.2014 ஆம் திகதி தொடக்கம் அலுவலக நாள்களில் மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப 02.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக் கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2[illegible].10.2014 ஆம் திகதி 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''விதை வெங்காயத்துக்கான கேள்வி கோரல்'' எனக் குறிப்பிட்டு ''தலைவர், சிறுபெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய பி.ப 03.00 மணிக்குத் திறக்கப்பட்டு ஆராயப்படும். இதன் போது விண்ணப்பதாரியொருவரோ அல்லது அவரின் பிரதிநிதியொரு வரோ சமூகமளிக்கலாம்.

**மேலதிக மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.** (சி/16811) (10)



## கண்ணீர் அஞ்சலி
### திருமதி நவரத்தினம் இராசலட்சுமி

எமது பெரியம்மாவின் திடீர் மரணச் செய்தி கேட்டு துயருற்றிருக்கிறோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

சண்டிலிப்பாய்மேற்கு
சண்டிலிப்பாய்.

பிரிவால் துயருறும்
இராசரத்தினம் செல்லம்மா குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்
### திருமதி இராசலட்சுமி நவரத்தினம்



சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி நவரத்தினம் நேற்று (07.10.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசையா நவரத்தினம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், சங்கானை சிவப்பிரகாச ம.வி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், நடராசா மற்றும் இராசா (கனடா), நவரத்தினம் (இளைப்பாறிய பணியாளர், Mascons Pvt Ltd), காலஞ்சென்றவர்களான கணேசராசா (இளைப்பாறிய அதிபர், யா/சதானந்தா வித்தியாலயம்), சிவகுருநாதன் மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, திரவியம், தவமணி (கனடா), காலஞ்சென்ற சோதிராணி மற்றும் விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற ரேணுகாதேவி மற்றும் இராசரத்தினம் (இளைப்பாறிய கணக்காளர், MPCS, மானிப்பாய்) ஆகியோரின் மைத்துனியும், மணிவண்ணன் (சிரேஸ்ட நிறைவேற்று உதவி பொறியியலாளர், சிறிலங்கா ரெலிக்கொம், திருகோணமலை), ரவிவண்ணன் (ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச ம.வி), மணிமாலா (ஆசிரியர், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), கமலவண்ணன் (N.R.K. வாணிபம்), அருள்வண்ணன் (கம்சா களஞ்சியம்) ஆகியோரின் அன்புத் தாயும், நிர்மலவதனி, இராசமலர், செல்வராசா (ஆசிரியர், சிவப்பிரகாச ம.வி), வாசுகி, கோமதி ஆகியோரின் [illegible] அன்பு மாமியும், மேகலா (வைத்தி[illegible]யா, பொது வைத்தியசாலை, திருகோணமலை), அருள்மாறன் (சிரேஷ்ட நிறைவேற்று உதவி கணக்காளர், சிறிலங்கா ரெலிக்கொம்), மைதிலி (ஆசிரியர், செல்வநாயகபுரம் இந்து ம.வி), சுகன்ஜா (மாணவி, பொறியியல் பீடம், தென்கிழக்கு பல்கலைக்கழகம்), மதனராஜ் (மாணவன், யாழ்.இந்துக்கல்லூரி), மோகன்ராஜ், லக்சலா, நிகேதன், நிகேதினி, துவாரகா, வசீகரன், சர்மினி, நிரஞ்சனா, சயானா, கம்சாளினி, தரணிகா, பிருந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2014) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் மேற்கு,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 2805 / 077 327 2501**
**071 536 0948**

(53027)(12.6)

## இதோ வந்துவிட்டது! சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரண உற்பத்தி நிலையம், சங்கானையில்



வடமாகாணத்தில் முதன்முறையாக முதன்முறையாக சிறுவர் பூங்கா சிறுவர் பள்ளிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் சங்கானையில் ஓர் உற்பத்தி நிலையத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நவீன தொழில்நுட்ப தரத்துடன், வெளிநாட்டிலிருந்து பெறப்படும் சிறுவர் விளையாட்டு உபகரணங்களுக்கு நிகராக இந்த உபகரணங்கள் தயாரிக்கப்படுகின்றன.

சிறார்களுக்கான மெரி-கோ-றவுண்ட், ஊஞ்சல் சறுக்கிஸ் போன்ற வகைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு : CHILDREN SPORTS HAPPINESS
ELECTRICAL WELDING WORK SHOP
MAIN ROAD ,CHANKANAI

மேலும், சகல விதமான வெல்டிங் வேலைகளும் தரமான முறையில் எமது WORKSHOP இல் உடனுக்குடன் செய்து தராப்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

T.P : 0779231455
0776849985

உரிமையாளர்.

## பிரதேச சபை அறிவித்தல்
### கடை வாடகை ஒப்பந்தம் புதுப்பித்துக் கொள்ளல்
### வங்களாவடிக் கடைத் தொகுதி

**கடை இல 01- 13வரை**

வேலணை பிரதேச சபைக்குச் சொந்தமான மேற்படி இலக்கங்களைக் கொண்ட 13 கடைகளுக்கான ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளதால் இந்த ஒப்பந்தங்களை புதுப்பிக்க எமது சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே பின்வரும் ஆவணங்களுடன் எதிர்வரும் 10.10.2014 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு வங்களாவடி வேலணையில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்துக்கு ஒப்பந்தகாரர்கள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சமுகமளிக்காதவிடத்து தாங்க ளாகவே விலகியதாக கருதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

சமுகமளிக்கும் போது பின்வரும் ஆவணங்களைக் கொண்டு வரவும்

**ஒப்பந்தகாரரின் தேசிய அடையாள அட்டை**

**குறித்த கடை சார்பாக செய்து கொண்ட ஒப்பந்தப் பத்திரம்**

**பிரதேச சபை,**
**வேலணை.** (C/16814)

**சி.சிவராசா,**
**தவிசாளர்**

## மரண அறிவித்தல்
### திருமதி இராசலட்சுமி தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற கனிஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்.)



காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் குறுக்கு வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி தனபாலசிங்கம் நேற்று (06.10.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருணாசலம் தனபாலசிங்கத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சிவகொழுந்து தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்க ளான அருணாச்சலம்-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சுரேஷ்குமார் (பொறியியலாளர் USA), சுகன்யா (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை) ஆகியோரின், அன்புத் தாயாரும், குகதர்சினி (USA), ரமணன் (முகாமைத்துவ உதவியாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும், ரட்ணாங்கி, சுதன் (USA) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (09.10.2014) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.

82/2, குறுக்கு வீதி, நல்லூர் (53031) தொ.பே- 0212225356, 0779071505

# அம்பாறை கரையோர மாவட்டக் கோரிக்கையை மழுங்கடிக்கச் செய்வதற்கு கட்சி துணை போகாது

## கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஜெமீல் தெரிவிப்பு

அம்பாறை, ஒக், 08

அரசாங்கம் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை தந்துவிட்டு அம்பாறை கரையோர மாவட்டக்கோரிக்கையைமழுங்கடிக்கச் செய்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும்துணைபோகாதுஎனகிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவரும் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளருமான ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரகடனத்திற்கு முன்னதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக வெளிவந்துள்ள தகவல்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், அம்பாறை கரையோர மாவட்டக் கோரிக்கையை இழுத்தடிப்புசெய்துவிட்டுகிழக்குமாகாண முதலமைச்சர் பதவியை தருவது என்பது ஏமாற்று வித்தையாகும். ஜனாதிபதித் தேர்தல் பிரகடனத்திற்கு முன்னதாக அம்பாறை கரையோர மாவட்டம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் இந்த அரசாங்கத்துடன் இணைந்திருப்பதிலும் பேசுவதிலும் எவ்வித அர்த்தமும் கிடையாது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியானது உரிய காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட வேண்டியதொன்று என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதற்கு முன்னதாக அம்பாறை கரையோர மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். கடந்த 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைப்பதற்காக எமது முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு கோரப்பட்டது. இதன் போது அந்த ஆதரவை வழங்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் பல நிபந்தனைகளை முன் வைத்திருந்தது. அவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு எமது கட்சியுடன் உடன்பாட்டைச் செய்து கொண்டதுடன் அவை அனைத்தையும் கூடிய விரைவில் நிறைவேற்றித் தருவதாக உத்தரவாதம் அளித்திருந்தது.

எனினும் இப்போது ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை தந்துவிட்டு எமது கட்சியை வளைத்துப் போடலாம் என்று அரசாங்கம் தப்புக் கணக்குப் போடுகின்றது. கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தான் எமது இலக்கு என்றால் அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு டன் இணைந்து ஆட்சியை நிறுவுவதன் ஊடாக மிக இலகுவாகப் பெற்றிருக்க முடியும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரகடனத்திற்கு முன்னதாக அம்பாறை கரையோர மாவட்டம் உருவாக் கப்பட வேண்டும் என்பதில் எவ்வித விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை. கரையோர மாவட்டம் இல்லாத நிலையில் கிழக்கின் முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித் தார்.

(ஓ-10)


**மல்லாகத்தில் விடு வாடகைக்குண்டு**

மூன்று அறை, சமையலறை, Attached Bathroom Hall தனி பாத்றூம் தங்குவதற்கும் வகுப்புக்கள் நடத்தவும் உகந்த இடம். வாடகை 4000/=, முற்பணம் 50,000/= விரும்பியவர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:077 960 4095/011 250 7686



**பழைய இரும்பு, அலுமினியம் விற்பனைக்கு**

எமது சங்கத்தில் பழைய இரும்பு, அலுமினியம் என்பன கிலோவாக நிறுத்து விற்பனை செய்யப்படவுள்ளன. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் முற்பகல் 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிட்டு தங்களது மூடிய கூறுவிலையை 23.10.2014ஆம் திகதி பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். மேலும் கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பழைய இரும்பு, அலுமினியம் கொள்வனவுக்கான கூறுவிலை எனக் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் ஏற்கனவே இதற்கான கூறுவிலை சமர்ப்பித்தவர்களும் மீளவும் தங்களது கூறுவிலையை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி16808) (12.6)

தொலைபேசி இல: 021 321 2926



**நாற்றுக்கள் விற்பனை**

கத்தரி(திருநெல்வேலி ஊதா), மிளகாய் (KA2) மற்றும் அனைத்து வகையான அலங்கார தாவரங்கள், பயன்தரு மரங்கள், தென்னை, சொட்டு நீர்ப்பாசன தொகுதிகள் பூச்சாடிகள் என்பவற்றை மலிவாகப் பெறலாம்.

பவிசாறு பூங்கனிச்சோலை
511/1 பலாலி வீதி, கோண்டாவில்
யாழ்ப்பாணம்.

தொடர்பு-
021 222 8199 /
0773976203

விதை அத்தாட்சிப்படுத்தல் சட்டத்திற்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.


## ஏமாற்றுவது மு.காவுக்கு கைவந்த கலை

முஸ்லிம்காங்கிரஸ்உறுப்பினர்களின்செல்வாக்கு மக்கள் மத்தியில் சரியும் போது வார்த்தை ஜாலங்களை அவிழ்த்துவிட்டு அப்பாவிக் கிழக்கு முஸ்லிம்களை ஏமாற்றுவது முஸ்லிம் காங்கிரஸுக்கு கைவந்த கலை என்று கூறினார் உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த அரசுடன் இணையும் போது செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்றும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் கல்முனை கரையோர மாவட்டத்தை அரசு பிரகடனப் படுத்த வேண்டும் என்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜமீல் தெரிவித் துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களின் செல்வாக்கு மக்கள் மத்தியில் சரியும் போது இவ்வாறான வார்த்தை ஜாலங்களை அவிழ்த்து விட்டு அப்பாவி கிழக்கு முஸ்லிம்களை ஏமாற்றுவது முஸ்லிம் காங்கிரஸுக்கு கைவந்த கலையாகும். இந்த அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணையும் போது அரசுடன் முஸ்லிம்களின் உரிமைகள் சம்பந்தமாக ஒப்பந்தம் செய்யப்பட்டதாக அக்கட்சி சொல்கிறதே தவிர அவ்வாறான ஒப்பந்தத்தின் நகல் பிரதி இன்று வரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. இதன் மூலம் ஒப்பந்தம் செய்துள் ளதாக முஸ்லிம் மக் களை பொய் கூறி ஏமாற்றுகிறார்கள் என் பதை கடந்த இரண்டுவருடங்களாக நாம்கூறி வருகிறோம். இதனை மறுத்து மேற்படி ஒப்பந்த பிரதியை இவர்கள் இன்னமும் வெளியிடவில்லை.

அத்துடன் கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்ட மூலம் கொண்டு வரப் பட்ட போது ஜமீல் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தமது தலைவரை தொடர்பு கொள்ளமுடியவில்லை என்ற பொய்யை கூறி தமது சுய நலத்தை வெளிப்படுத்தி முஸ்லிம் சமூகத்துக்கு துரோகமிழைத்தார்கள். அதே போன்று நாடாளுமன் றத்தில் மு. கா 18வது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்தபோது கல்முனை கரையோர மாவட்டம் பற்றி மூச்சு விட வில்லை.- என்றார்.

(ஓ-10)


**8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் லயன்

**கதிர்காமத்தம்பி நாகராசா**

B.com, M.A, J.P

(இளைப்பாறிய அதிபர்–மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை, மாவட்ட இணைப்பாளர் இந்து கலாசார சமூக சேவைகள் அமைச்சு)

தோற்றம் 28.11.1938 மறைவு 07.10.2006

திதி: பூரணை 08.10.2014

உத்தம குணங்கள் கொண்டீர் உன்னத வாழ்வு கொண்டீர்
அறிவு புகட்டும் ஆசிரியரும் அதிபருமானீர்
அன்புள்ள கணவனானீர்
இன்னல்கள் பல வந்தும் இன்முகம் காட்டினீர்கள்
மண்விட்டு மறைந்தாலும் எம் நினைவில் என்றும் நிலைத்திருப்பீர்கள்.

கே.கே.எஸ். வீதி,
8 ஆம் கட்டை, மல்லாகம்.

[சி/16806][4.3.6]

குடும்பத்தினர்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




2014ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் **190 புள்ளிகளைப்** பெற்று பாடசாலை மட்டத்தில் 2ஆம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 6ஆம் இடத்தினையும் பெற்று சித்தியடைந்த யாழ்/இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியும் திரு.திருமதி மதியழகன் சிவதர்சினி தம்பதியினரின் செல்வப் புதல்வியுமான **செல்வி.ம.கிருஷ்ணவியை** பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று உயர்க என உளமாரவாழ்த்தும்.

அன்பு மாமா சி.சுதர்சன்,
அத்தை கவிதா,
மைத்துனன் நர்த்தனன்

(52990)(5.6)



**பகிரங்க அறிவித்தல்**

**விசேட அதிகார தத்துவத்தை இரத்துச்செய்தல்**

26, Allonby-Way Aylesbury, Buckinghamshire, HP 21-7JA, England வதியும் கௌசிகா நவரத்தினம் ஆகிய நான் லண்டன் பிரசித்த நொத்தாரிசும் சத்திய ஆணையாளருமான James Richard Couzens என்பவர் முகதாவில் **2014.07.03 ஆம் திகதி நிறைவேற் றிய அதிகார தத்துவப்படி கோண்டாவில் மேற்கு கோண்டாவில் முத்தட்டுமட ஒழுங்கையில் வதியும் இளைய தம்பி தேவராஜா (தே-அ-அ.இல. 552232828V)** என்பவரை அதிகார தத்துவகாரராக நியமித்திருந்தேன் என்றும் அத்தத்துவத்தில் பல குறைபாடுகள் இருந்தமையால் அத்தத்துவத்தை யாழ்.உதவி பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் பதிவுக்கு கொடுத்த வேளையில் குறித்த குறைபாடுகளை அவதானித்த அவர்கள் அதனைப் பதிவு செய்யாது திருப்பி விட்டனர் என்றும் மீண்டும் குறித்த தத்துவத்தில் முன்பக்[illegible]க்கில் முதலாம் வரியில் நான் கையொப்பமிட்டது போல் CN என [illegible]கையொப்பமிட்டு தந்திரமாக இரு தாளில் என்னால் அனுப்பப்பட்ட அதிகார தத்துவத்தை ஒரு தாளில் படப்பிரதி செய்து யாழ் உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் புத்தகத்தில் (Vol.79/Folio No.84/1688/2014.07.18 ஆம் திகதி) பதிவு செய்துள்ளனர் என்றும் எனவே இத்தத்துவம் சட்ட விரோதமான தத்துவம் என்றும் நான் வெளிப்படுத்துவதுடன் இப் பகிரங்க அறிவித்தல் மூலம் இத்தத்துவத்தை இதனால் இரத்துச் செய்கிறேன்.

கௌசிகா நவரத்தினம்.

வரைபு
க.சிவசுப்பிரமணியம்
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்
ஊரெழு, சுன்னாகம்.

(52986)(4.6.3)



**மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்**

ஞானோதயத்தின் பிரதம ஆசிரியரும், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் ஆசிரியருமான




**செல்வநாதன் திலக்**

அவர்கள் **பிரதீபா பிரபா** நல்லாசிரியன் விருதினை 06.10. 2014 ஆம் திகதி தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற வைபவத் தில் பெற்றுக் கொண்டதனையிட்டு அவரை வாழ்த்துவதுடன் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.



அத்துடன் கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கைச் சேர்ந்த உதயசேகர்-கலாராணி தம்பதியரின் செல்வப் புதல்வி

**உ.சாருகாணி**

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் **159 புள்ளி**களைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப்பாராட்டுவதுடன் அவர் மேலும் பல சாதனைகளைப் படைத்து முன்னேற எமது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

18/4/1. சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர் :
சு.செல்வநாதன்-கருணாவதி
குடும்பத்தினர்.

## TRADE FINANCE & INVESTMENTS PLC

(Registered with the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No.78 of 1998)
(Registration No.PB 445)
KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI

பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு

| MODEL | REG.NO |
|---|---|
| SPLENDOR NXG | NP BAL - 8001 |
| MF 135D | 36SRI 0322 |
| THREE WHEELER | NPHP - 4167 |
| CB TWISTER | NPXU - 9694 |
| HARVESTER | DF.11070234.DF |
| HARVESTER | Z11B1523L |

பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களினையும் பெற்றுக் கொள்ளலாம்.
(CR Book, DELETION LETTER AND YARD RELEASE LETTER)
நிபந்தனைக்குட்பட்டது.

மேலதிக விவரங்களுக்கு
021 228 0110, 021 228 0108,
077 166 1648, 077 109 2236

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)
தரம் 6 அனுமதி -2015

2015 ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தரம் 6 இல் தமிழ்/ஆங்கில மொழி மூலங்களில் அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள லாம்.
விண்ணப்ப முடிவு திகதி : 30.10.2014

அதிபர்

## மரண அறிவித்தல்

### செல்வன் நாகராசா விமலேந்திரா
(இரசாயன ஆய்வுகூட பரிசோதகர்)



கொக்குவில் கிழக்கு, சபாபதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் நாகராசா விமலேந்திரா கடந்த (06.10.2014) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி-அன்னம்மா, மாணிக்கம்-பவளம்மா ஆகியோரின் பேரனும், திரு திருமதி நாகராசா (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) செல்வகுமாரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் நரேந்திரா (ஆசிரியர் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி), செல்வேந்திரா (நன்நடத்தை உத்தியோகத்தர், ஊர்காவற்றுறை நீதி நிர்வாகப்பிரிவு), கஜேந்திரா (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வேலணை) ஆகியோரின் அன்பு சகோதரனும், ரஜனி (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பூநகரி), மாலினி, திஷாலினி (ஆசிரியர், மு/பாரதி வித்தியாலயம்) ஆகி யோரின் அன்பு மைத்துனரும், பிருந்தாபன், பிரதீபன், பிரசாந்தினி, சதுர்த்திகன், கார்த்திகன் ஆகியோரின் சிறிய தந்தையும், காலஞ் சென்ற தெய்வேந்திரம் மற்றும் சறோஜினிதேவி, சிவகுமாரி, காலஞ் சென்ற நகுலராஜாவின் பெறாமகனும், நாகேஸ்வரியின் மருமக னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

(C/16816)(10)

## அதிஸ்டலாபச் சீட்டு குலுக்கல் குலுக்கல் முடிவுகள்

எமது பிரதேச செயலக உத்தி யோகத்தோர் நலன்புரிச் சங்கத் தினால் 01.10.2014 அன்று நடத்தப்பட்ட அதிஸ்ட இலாபச் சீட்டு குலுக்கல் வெற்றியாளர்களின் இலக்கங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளன. வெற்றியாளர்கள் தமக் குரிய சீட்டி னையும் ஆளடையாளத் தையும் எமது செயற்குழுவுடன் தொடர்பு கொண்டு உறுதி செய்து தமக்கான பரிசில்களை அலுவலக நேரத்தில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம்.

வெற்றியாளர்களுக்குரிய இலக்கங்கள வருமாறு :

1.முதலாம் பரிசு : 5622
2.இரண்டாம் பரிசு : 12210
3.மூன்றாம் பரிசு : 12792

ஆறுதல் பரிசுகள் :
(i)1625 (ii)3200
(iii)919 (iv)7637
(v)10531 (vi)2071
(vii)11563 (viii)11883
(xi)10021 (x)4548

செயற்குழு,
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.



Nation
popular travels & tours
Special Fares
Sale Starting at

கொழும்பு
0114651199
#16,1/2,E.S. Fernando Mawatta, Colombo-06
Tel: 0114 378 117
Fax: 0112 055 920

யாழ்ப்பாணம்
0214920920
#128,Brown Road, Jaffna
Tel:0214920505
Fax:0217538325

வவுனியா
0244930830
#179A,Railway Station Road Vairavapuliyankulam Vavuniya
Tel:0244930830
Fax:0244930831

Home Delivery
#27,Lower st, Andrews place Colombo-15
Tel: 0114375357

சென்னை -23400
மதுரை -20300
திருச்சி -22400
கொச்சின் -24900
கட்டார் -27200
பிரான்ஸ் -45500
டுபாய் -27000
கனடா -105700
அவுஸ்ரேலியா -58500
Return
சிங்கப்பூர் -30800
மலேசியா -32000
ஜேர்மனி -72300
மாலைத்தீவு -33000
சுவிஸ் -98000
இத்தாலி -91000

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் 2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

செல்வன் சண்முகதாசன் சாருகேசன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் உயர்ச்சிகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, அக்கா, தம்பி.

## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. இராமுப்பிள்ளை சிவகுமார் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
வசந்தரூபி இராமுப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

## பாராட்டி வாழ்த்திமகிழ்கின்றோம்

யாழ்/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபரும், புங்குடுதீவு, நயினதீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவரும் வேலணைப்பிரதேச மத்தியஸ்தர்சபை உதவித் தவிசாளருமான



நாகமுத்து நாகராசா
S.L.P.S 2-II

அவர்கள் கல்வி அமைச்சினால் சிறந்த அதிபருக்கான விருதான பிரதீபா பிரபா விருது 2014.10.06 அன்று பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி, மகிழ்ச்சியடைகின்றோம்.

யா/புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம்.

வாழ்த்தி மகிழ்வோர் :
பாடசாலைச் சமூகம்

(53023)(08)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம்
25
10
1963



விண்ணகம்
03
10
2005

### அமரர் கிட்டிணர் பரமேஸ்வரன்
சங்கீத ஆசிரியர் (OLR)

பொன்மதி வதன ஒளி பரப்பி
மண் மாந்தர் மன இருள்மாசகற்றி
பண்ணோடு பத்திமையால் பாடல் பாடி
அன்போடு அருளுரைகள் நல்கும் அருட்கவி

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய்.

ப.சாந்தினி (மனைவி)

(53029)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலயத்தில் கல்வி கற்கும்


செல்வன் இராஜேந்திரன் தனுசன் - 159


கந்தசாமி தயாபரன் (ஆசிரியர்)


செல்வி சில்வெஸ்டர் யூட் சியாளினி-159

ஆகிய மாணவர்கள் 2014 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
இம்மாணவர்களை அர்ப்பணிப்புடன் கற்பித்த ஆசிரியர் க. தயாபரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

யா/புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம்.
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம்
யா/புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம்.

53025(10)

## தொடர்ச்சிகள்

### கிழக்கில்

களில் சிங்கள மாணவர்கள் இல்லை. இதன்மூலம் தமிழர்களுக்கு இந்நாட்டில் இருக்கும் சுதந்திரம் புலனாகின்றது.

அதேபோன்று சிங்கள மாணவர்களுக்கு 63 புள்ளிகளும், தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு 159 புள்ளிகளும் வெட்டுப் புள்ளிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதேவிடயம் தலைகீழாக நடந்திருந்தால் என்ன நடந் திருக்கும்? சிங்கள மாணவர்களுக்கு வெட்டுப்புள்ளி குறைவு. தமிழ் மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி அதிகம். இது தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கூட இந்நேரம் அறிக்கை விடுத்திருப்பார்.

1972ஆம் ஆண்டில் அமிர்தலிங்கம் போன்றோர் மாணவர்களை வீதிக்கு இறக்கி இஸட் புள்ளி விவகாரத்தால் கிளர்ச்சியில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது எனவும் அமைச்சர் சம்பிக்க சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் தற்போது புதியதொரு நிலை ஏற்பட்டுள்ளது. மு.காவும் கூட்டமைப்பும் இரகசியமாகப் பேசி வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் இதன் நோக்கமாகும் - என்றார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

### ஜனாதிபதிக்காக

வடக்கு மாகாண முதலமைச்சரும் பங்கெடுத்து இணைத் தலைமையின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. ஆனால் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களும் இணைத் தலைமையின் கீழ் நடத்தப்பட வேண்டியிருந்தமையினால் இரண்டு வருட காலத்தினுள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படவில்லை.

பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படாமலேயே, பிரதேச மட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் தன்னிச்சையான அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச மட்ட அபிவிருத்திக் கூட்டங்கள் நடத்தி, கீழ் மட்ட பிரச்சினைகள் எதனையும் இனங்காணாமல் நேரடியாக வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### பழுதான

முற்பட்ட வியாபாரி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா தெரிவித்தார்.

இவ்வாறு பழுதடைந்த மீன்களைக் கொண்டு வந்து விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே சந்தையில் மக்கள் பாவனைக்கு உதவாத பழுதடைந்த மீன்களை கொண்டு வருவதை வியாபாரிகள் உடன் நிறுத்த வேண்டும். தற்போதைய சுகாதார விதிமுறைகளை மீறி வியாபாரிகள் குளிரூட்டப்பட்டு நாள் பட்ட கடலுணவுகளை விற்பனை செய்தால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கூறினார். (த-17)

### புதிதாக

அத்துடன் தொலைக்கல்வி பரீட்சை எழுதுவோரின் வசதி கருதி அதற்கான இணையத்தளம் ஒன்றையும் அமைச்சர் ஆரம்பித்து வைப்பார்.

அத்துடன் சிற்றி லிங் சி.டி. எம்.ஏ. தொலைபேசி விற்பனைக் கூடம் ஒன்றையும் அமைச்சர் தபாலகத்தில் திறந்து வைப்பார்.

அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும் சர்வதேச அஞ்சல் தின நிகழ்வில் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, பிரதி அமைச்சர் சனத் ஜெயசூரிய ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

வட மாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் என். இரட்ணசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (த-17)

### யாழ்.-கொழும்பு

கள் அதனை வழங்கவில்லை. ஏற்கனவே அனுமதிப் பத்திரம் உள்ளவர்களும், பஸ் எதுவுமே இல்லாதவர்களும் கூட விண்ணப்பித்துள்ளனர். அதனால் பஸ்களை வைத்திருக்கும் தாம் அதனைப் பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட பஸ் உரிமையாளர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

கடந்த 40 நாள்களாக 40 இற்கும் மேற்பட்ட பஸ் உரிமையாளர்கள் வழி அனுமதிப் பத்திரம் இல்லாத காரணத்தால் தமது பஸ்க ளைப் பணியில் ஈடுபடுத்த முடியாது அவதிப்படுகின்றனர். அதனால் அவர்கள் வரு'மானமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அதிகமானோர் லீசிங் அடிப்படையி லேயே பஸ்களைக் கொள்வனவு செய்திருந்தனர். இத னால் லீசிங் பணத்தைக் கூடச் செலுத்த முடியாது விரக்தியிலுள்ளனர்.

ஒவ்வொரு வழித்தட அனுமதிப்பத்திரத்துக்கும் குறைந்தது 11 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதனைச் செலுத்தி யாவது வழி அனுமதிப்பத்திரத்தை பெறமுடியாத நிலையில் உள்ளனர். அது தொடர்பிலேயே அமைச்சர்களும் சமாளிப்புக் கதைகளைக் கூறி வருகின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். (த-4)

### தொழில்நுட்ப

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் 3 மாத காலப் பயிற்சியைப் பூர்த்தி செய்த கிராம உத்தியோகத்தர்கள் 95 பேருக்கான நியமனக் கடிதமும், பயிற்சி பெற இருக்கும் 33 கிராம உத்தியோகத்தருக்கான பயிலுநர் கடிதமும் இன்று பி.ப. 2 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார். (த-5)

### இலங்கைக்கு

காணிப்புப் பணியில் ஈடுபட்ட போதே அவை மீட்கப்பட்டன. விசாரணையின் போது இலங்கைக்குக் கடத்துவதற்காகக் கடற்கரையில் பதப்படுத் தப்படாத கடல் அட்டைகள் மற் றும் பதப்படுத்தப்பட்ட கடல் குதி ரைகளை மறைத்து வைத் திருந்தமை தெரியவந்தது.

அது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது (த-4-14)

### ஜெயலலிதாவுக்கு

வையும் கர்நாடக உயர் நீதிமன்றம் நிராகரித்தது. இதையடுத்து, பிணை கோரி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் என ஜெயலலிதா தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள் ளார். நீதிபதி சந்திரசேகர் நீண்ட தீர்ப்பு வழங்கினார். அதில், ஊழல் வழக்கில் கைதுசெய்யப்பட்டவர்களை அவ்வளவு எளிதில் வெளியில் விட முடியாது என்றும் - இதற்கு முன்பு நடைபெற்ற ஊழல் வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பை முன் உதாரணமாக எடுத்துக்கொண்டு இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட எவ்வித சாத்தியக் கூறுகளும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் வழங்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்கமுடியாது எனவும் நீதிபதி தெரிவித்தார்.

ஊழல் குற்றம் மனித உரிமைகளுக்கு எதிரானது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுக்கும் என்பதாலும் இந்த வழக்கில் ஜெயலலிதா உள்ளிட்டோருக்கு பிணை வழங்க முகாந்தரம் இல்லை என நீதிபதி கூறினார்.

ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 4 பேருக்கும் நிபந்தனையுடனான பிணை வழங்க எதிர்ப்பு இல்லை என அரசு தரப்பு சட்டத்தரணி பவானி சிங் தெரிவித்திருந்தார். இதையடுத்து ஜெயலலிதாவுக்கு பிணை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஜெயலலிதா பிணை மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

**குழப்பம் ஏன்?**

இதனிடையே, தீர்ப்பு விவரம் முழுமையாக வெளிவருவதற்கு முன்பே ஊடகங்களில் 'ஜெயலலிதாவுக்கு நிபந்தனை பிணை' என தவறான செய்திகள் வெளியாகின.

சொத்துக் குவிப்பு வழக்கில், கடந்த 27 ஆம் திகதி பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹா ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூபா 100 கோடி அபராதமும் விதித்து உத்தரவிட்டார். சசிகலா, இளவரசி, சுதாகரனுக்கும் தலா 4 ஆண்டு காலம் சிறையும், ரூபா 10 கோடி அபராதம் விதித்து உத்தர விட்டார். அன்றைய தினமே ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரும் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கில், சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணை நேற்று பெங்களூரில் நடைபெற்றது. விசாரணையை முன்னிட்டு பெங்களூரின் சில முக்கியப் பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

**முதல் மனுவாக ஏற்க மறுப்பு**

முன்னதாக, ஜெயலலிதாவின் பிணை மனுவை முதல் மனுவாக விசாரிக்க கோரப்பட்டது. ஆனால், ஜெயலலிதா மனுவை முதலில் விசாரிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. ஜெயலலிதா தரப்பில் சட்டத்தரணி ராம் ஜெத்மலானி முன்னிலையானார். ஜெயலலிதா மனுவை அவசர மனுவாக கருதி முதல் மனுவாக விசாரிக்க வேண்டும் என நீதிபதியிடம் ராம் ஜெத்மலானி கோரிக்கை விடுத்தார். ஆனால், மனுவை வரிசைப்படியே விசாரிக்க முடியும் என நீதிபதி சந்திரசேகர் மறுப்பு தெரிவித்துவிட்டார்.

**ராம் ஜெத்மலானி வாதம்**

ஜெயலலிதா தரப்பில் சட்டத்தரணி ராம் ஜெத்மலானி, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கக் கோரி ராம் ஜெத்மலானி வாதிட்டார். சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனைக்கு எதிராக ஜெயலலிதா தரப்பில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நிலுவையில் உள்ள நிலையில், அவருக்கு பிணை வழங்கலாம் என உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள சில தீர்ப்புகளை ஜெத்மலானி மேற்கோள்காட்டி வாதிட்டார். கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் லாலு பிரசாத் யாதவுக்கு பிணை வழங்கப்பட்டதை சுட்டிக்காட்டி வாதாடினார்.

**பவானி சிங் வாதம்**

ஜெயலலிதாவுக்கு பிணை வழங்க எதிர்ப்பு தெரிவித்து எதிர் மனு தாக்கல் செய்த அரசு தரப்பு சட்டத்தரணி பவானி சிங், பிணை வழங்கினால் ஜெயலலிதா வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லக்கூடும் என்பதால், அவருக்கு பிணை வழங்கக்கூடாது என வாதிட்டார். ஜெயலலிதா தமிழக அரசியலில் மிகவும் செல்வாக்கு மிக்கவராக இருக்கிறார். அவரை பிணையில் விடுவித்தால் இவ் வழக்கின் போக்கை மாற்றவும், தண்டனையில் இருந்து தப்பிக்கவும் முயற்சி செய்வார். மேலும், அவர் தலைமறைவாகி விடவோ, வேறு நாடுகளுக்கு தப்பி செல்லவோ வாய்ப்பு இருக்கிறது. எனவே ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கக் கூடாது என அவர் தெரிவித்தார்.

**ஜெத்மலானி பதில்**

அதற்கு பதிலளித்த ராம் ஜெத்மலானி, ஜெயலலிதா எப்போதும் சட்டத்தை மதித்து நடப்பவர், எனவே அவர் நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்க மாட்டார் என்றார்.

**விசாரணை ஒத்திவைப்பு**

ஜெயலலிதா பிணை மனு மீது கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை பிற்பகல் 2.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. ஜெயலலிதா தரப்பில் ஆஜரான ராம் ஜெத்மலானி வாதம் ஒரு மணி நேரம் வாதிட்டார். சட்டத்தரணி பவானி சிங்கும் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கக்கூடாது என தனது வாதத்தை முன்வைத்தார்.

**மீண்டும் விசாரணை**

உணவு இடைவேளைக்காக நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் 2.30 மணிக்கு பிணை மனு மீதான வாதம் மீண்டும் தொடரும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி மீண்டும் 2.30 மணிக்கு வாதம் தொடங்கியது. சசிகலா, இளவரசி, சுதாகரன் தரப்பு சட்டத்தரணிகளும் தங்கள் வாதங்களை முன்வைத்தனர். அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி 3.35 மணியளவில் ஜெயலலிதா உள்ளிட்டோர் பிணை மனுவை நிராகரித்து உத்தரவிட்டார்.

**பிணை மனு:**

கடந்த 29 ஆம் திகதி ஜெயலலிதா உள்ளிட்ட நால்வர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை கடந்த முதலாம் திகதி விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்ற விடுமுறைக் கால நீதிபதி ரத்னகலா, இவ்வழக்கை வழக்கமான நீதிபதிக்கு மாற்றி உத்தரவிட்டார். (ற)

### போலியான

அளவிலும், வகையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாடு போர் நிறுத்தத்திலிருந்து, ஆயுத மோதலை சந்தித்தது. 2009 இல் மோதல் முடிவுக்கு வந்த பின்னர் - போருக்குப் பிந்திய காலப் பகுதியில் மிக கடுமையான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை அரசு, மாற்றுக் கருத்துள்ளோரையும், தன்னுடன் உடன்படாதவர்களையும் மௌனமாக்குவதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை உரிய நடைமுறையின்றி பயன்படுத்தி அவர்களை கைது செய்து தடுத்து வைக்கின்றது. சித்திரவதைக்கும், துன்புறுத்தலுக்கும் வழி வகுத்துள்ள இந்தச் சட்டவரைவு நீக்கவேண்டும்.

அதேவேளை ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசு, அரிசயலமைப்பில் 18 ஆவது திருத்தத்தை பயன்படுத்தி அதிகாரத்தை பலப்படுத்தியுள்ளது. நீதித்துறையினதும், மனிதஉரிமை பாதுகாப்புக்காக முக்கிய அமைப்புகளான மனித உரிமை ஆணைக்குழு போன்றவற்றின் சுதந்திரங்களையும் பறித்துள்ளது.

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும். இந்தச் சட்டவரைவு ஜனாதிபதி மீதான கட்டுப்பாடுகளை இல்லாமற்செய்துள்ளதுடன் முக்கிய கட்டமைப்புகளை பலவீனதானதாக்கி ஜனாதிபதியின் விருப்பத்திற்கேற்ப அவை செயற்படும் நிலையை உருவாக்கியுள்ளது. இலங்கையின் தடுப்பு முகாம்களில் சித்திரவதைகளும், மோசமாக நடத்தப்படுதலும் காணப்படுகின்றது. பொலிஸ், இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினரால் நடத்தப்படும் முகாம்களில் சித்திரவதைகளும் - சில வேளை பாலியல் சித்திர வதைகளும் இடம்பெறுவதாக எமக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இலங்கை அரசு சித்திரவதைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்படுவதை மறுத்துள்ளதுடன், இது குறித்து விசாரணை செய்யவோ அல்லது அதற்கு காரணமானவர்களை பொறுப்புகூறச் செய்யவோ மறுத்துள்ளது"- என்று, சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ற-5)

### பொறுப்புக்

உறுப்பினரான அன்ஜா செய்போர்ட், "பலவந்தமாகக் காணாமற்செய்யப்படுவது அங்கு தொடர்கின்றது"- என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

"இராணுவமும், பொலிஸாரும் வெள்ளை வான் கடத்தல்களில் ஈடுபடுகின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன"- என்று கூறியுள்ள செய்போர்ட், "அதற்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?"- என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்கள் மீது அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், இலங்கை தொடர்பான மீளாய்வு அமர்வுகளுக்கு முன்னதாக, தொண்டு நிறுவனங்களும், சிவில் அமைப்புகளும் தனியாக இலங்கையின் நிலைமைகள் குறித்துக் கவனம் செலுத்தியுள்ளன. இலங்கையைச் சேர்ந்த எட்டு தொண்டு நிறுவனங்கள் நேற்றைய அமர்வில் வாய்மொழி மூல அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளன.

அதேவேளை, மனித உரிமைகள் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்திருந்த, அந்தக் குழுவின் பொறுப்பாளர் சேர் நைஜல் ரொட்லீ, "மனித உரிமை ஆர்வலர்கள், பாதுகாவலர்கள் மீதான தாக்குதல்கள் போன்ற விடயங்களில் ஐ.நா. மனித உரிமைகள் சபை நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்காது"- என்று குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பாக ஆராய்வுக் கூட்டம் இன்றும் தொடரவுள்ளது. (ற)

### 'பட்ஜெட்டுக்கு'

2015 ஆம் ஆண்டுக்கு, சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான சம்பளங்கள், படிகளுக்கு மற்றும் ஏனைய மீண்டு வரும் செலவீனங்களுக்குமாக 15 ஆயிரத்து 123 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மூலதன செலவினங்களான பிரமாண அடிப்படையிலான கொடைக்கு 400 மில்லியனும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடைக்கு ஆயிரத்து 440 மில்லியனும், ஏனைய கருத்திட்ட வேலைகளுக்காக 3 ஆயிரத்து 447.8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்குரிய வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதி பெறப்பட வேண்டியிருப்பதானால் அதற்குரிய அனுமதி கோரிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர் வரும் நவம்பர் மாத இறுதியில் மாகாணசபையில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களில் எஞ்சிய நிதிகளில் மாற்றீடு செய்வதற்கான அமைச்சரவை அனுமதியும் நேற்றைய கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. (ற-5)

### அறிவிப்பின்

பொதுபல சேனா அமைப்புடன் கலந்துரையாட தயார் என ஐக்கிய தேசியக் கட்சியால் வெளியிடப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இனத்தை நோக்காக கொண்ட அரசியல் கட்சிகள் நாட்டினுள் இருப்பதன் காரணமாக, சிங்கள பௌத்த மக்களுக்காக சிங்கள கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

### உள்ளக

பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விடயப் பரப்பை, உள்ளகப் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையிலும் ஜனாதிபதி விஸ்தரித்தார்.

இவ்வாறு விடயப்பரப்பு விஸ்தரிக்கப்பட்டதையடுத்து ஆணைக்குழுவின் முதற்கட்ட அமர்வு மன்னாரிலும், இரண்டாம் கட்ட அமர்வு கிளிநொச்சியிலும் நடைபெற்றது. இந்நிலையிலேயே மூன்றாம் கட்ட அமர்வு அடுத்த மாதம் முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளது.

இந்த அமர்விலும் சர்வதேச நிபுணர்கள் பங்கேற்க மாட்டார்களென அறியமுடிகின்றது. இதற்கு என்ன காரணம் என்று அறிவிக்கப்படவில்லை. எனினும், ஒக்ரோபர் நடுப்பகுதியில் நடைபெறும் முக்கிய கூட்டத்திலேயே இரு தரப்பு செயற்பாடுகள் பற்றி முடிவெடுக்கப்படவுள்ளன.

உள்ளக விசாரணைக்குழுவின் தலைவர் மெக்வெல் பரணகமவுக்கும், சர்வதேச ஆலோசனைக்குழுவின் தலைவர் டெஸ்மன் டி சில்வாவுக்குமிடையில் கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போது சர்வதேச சட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. (ற-சி)

## கொக்குவில் பகுதியில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக்.8
கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றில், 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
கடந்த 5 ஆம் திகதி இரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இந்தக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதை ஞாயிற்றுக்கிழமை உரிமையாளர்கள் அவதானித்ததைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். அந்த முறைப்பாட்டின் பிரகாரம், யாழ்.பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ-106)

## சட்டவிரோதமாக மின்சாரம்; பேக்கரி உரிமையாளர் கைது

சட்டவிரோதமாக மின்சாரம் [illegible]ற்ற பேக்கரி உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
கடந்த சனிக்கிழமை இரவு இலங்கை மின்சார சபையின் பரிசோதனைக் குழுவினரும் பொலிஸாரும் இணைந்து வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப்பகுதியில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
அவ்வேளையில் பயன்பாட்டுக்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பேக்கரி உரிமையாளரைக் கைதுசெய்து ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.
வழக்கினை விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறி[illegible]ில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

## மட்டு. மாநகரசபை தீயணைப்பு கட்டடத்துக்கு அடிக்கல் நடல்

மட்டக்களப்பு, ஒக்.8
மட்டக்களப்பு மாநகரசபைக்கு தீயணைப்புக் கட்டட அடிக்கல் நடும் நிகழ்வும் தீயணைப்பு வாகனங்கள் கையளித்தலும் மட்டக்களப்பு மாநகர சபையில் இடம் பெற்றது.
ரூபா 10 மில்லியன் செலவில் கட்டப்படவுள்ள கட்டடத்தின் அடிக்கல்லை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா நட்டு வைத்தார். 44 மில்லியன் ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம் மற்றும் 30 மில்லியன் பெறுமதியான பிக்கப் வாகனம் என்பவற்றின் ஆவணங்களை மாநகர ஆணையாளர் எம். உதயகுமாரிடம் அமைச்சர் அதாவுல்லாஹ் கையளித்தார்.
நிகழ்வில் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மாவட்ட அரச அதிபர் சறோஜினிதேவி சாள்ஸ், ஏறாவூர் நகரசபைத் தவிசாளர் அலிஸாஹிர் மௌலானா, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ. அப்துல் மஜீத் உட்பட பலர்கலந்து கொண்டனர். (வ)

# சகல திணைக்களங்களிலும் உயர் பதவியில் தமிழர்களே

## கல்லோயா குடியேற்றத்திட்ட ஆய்வறிக்கை சான்று பகர்கிறது என்கிறார் காரைதீவு பிரதேசசபை முன்னாள் தவிசாளர்

அம்பாறை, ஒக்.8
இலங்கை சுதந்திரமடைந்து கல்லோயா குடியேற்றம் மீளமைக்கப்படும் வரையும் தமிழர்களே அனைத்து திணைக்களங்களிலும் உயர் பதவி வகித்து வந்தார்கள். இதுதான் எமது தமிழ் இனத் தின் வரலாறு என்று காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் இராசையா தெரிவித்தார்.
வறட்சியால் நீரின்றி மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கிணறுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக சுவிஸ் சூரிச் சிவனாலயத்தின் 'அன்பே சிவம்' அமைப்பினூடாக முதற்கட்டமாக அம்பாறை, நான்காம் கிராமம் மத்திய முகாம் ஒன்றில் கிணற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அன்பே சிவம் அமைப்பின் உறுப்பினர் கா.ராஜிதன் தலைமையில் நேற்று மு.ப. 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெற்றது.
இதன்போது விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே முன்னாள் தவிசாளர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,
கல்லோயாத்திட்டத்தின் முதலாவது ஆய்வறிக்கையை எடுத்துப்பார்த்தால் தமிழர்களுடைய ஆய்வறிக்கையின் அடிப்படையிலே கல்லோயா குடியேற்றத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.
அந்தவேளையில் பூர்வீக குடிகளாக இருந்த தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். கல்லோயா குடியேற்றத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் மானாவாரி நெற்செய்கையை மேற்கொண்டிருக்கும் இந்த நிலத்தில் பொன் விளையும் என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் அது இறுதி வரை நிறைவேறவில்லை.
கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் தமழர்களுக்கென்று 6 குடியேற்றத்திட்டங்கள் தான் ஒதுக்கப்பட்டிருந்தன. அதில் 150 குடும்பங்களை ஒவ்வொரு குடியேற்றத்துக்கும் முன்மொழிந்திருந்தார்கள். அங்கு மக்கள் குடியேற்றப்பட்டிருந்தும் கூட 1956, 57 இல் இந்த நாட்டிலே ஏற்பட்டிருந்த இனக்கலவரங்களால் பெரும்பான்மை சிங்களவர்களால் தமிழர்கள் அந்த இடத்தில் இருந்து அடித்துத் துரத்தப்பட்ட வரலாற்றை எண்ணிப் பார்க்க முடியாது.
அதன்பின்னர் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் நீர் வளம்வழங்கப்படாமல்தொடர்ந்து அந்த இடத்தில் எஞ்சியிருந்த தமிழர்கள் பலவந்தமாக பேரினவாதி களால் துரத்தப்பட்டு அவர்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களையும் தன்வசப்படுத்தினார்கள். இதற்கான அனைத்து சான்றுகளும் தற்போதும் எம்மிடம் இருக்கின்றன.
இந்தப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் 7 தடவைகளுக்கும் மேலாக தமது சொந்த இடத்திலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்திருக்கின்றார்கள். தற்போதும் கூட அந்த நிலமையைத்தான் பார்க்க முடிகின்றது. இதற்குக் காரணம்ஒரு காலத்தில் இந்தப்பிரதேசம் மிகவும் செல்வச்செழிப்புமிக்கஒரு பிரதேசமாக காட்சி தந்தது. ஆனால் இன்று போர் காலத்தில் இருந்ததைப் போன்றே காட்சி தருகின்றது.
அரசு மீள்குடியேற்றம் என்று கூறினாலும் அது பாதிக்கப்பட்ட மக்களை உரிய விதத்தில் சென்றடையவில்லை அதுவும் அரைகுறையாகவே மக்களை சென்றடைந்தி ருக்கின்றது.
அரசின் அடிவருடிகளாக இருப்பவர்கள் அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டி எமது மக்களை திசைதிருப்பப் பார்க்கின்றார்கள். அது மாத்திரமல்ல தமிழர்கள் என்ற அடையாளத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அவர்களால் பல திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்படுத்தியும் வருகின்றனர்.
அரசியல்வாதிகள் உங்களிடம் வாக்குக்கேட்டு வருவார் கள் நீங்கள் அவர்களை நம்ப வேண்டாம் நாம் அவ்வாறானவர்கள் அல்ல விடுதலை வீரர்கள் அவ்வாறான கட்சியில் இருந்து வந்தவர்கள் பொய் வாக்குறுதிகளை தந்து உங்களை பிழையான வழியில் இட்டுச்செல்ல நாம் விரும்பவில்லை.
புலத்திலே வாழ்கின்ற மக்கள் பல மணி நேரம் தங்களை வருத்தி அதன்மூலம் கிடைக்கும் பணத்தில்ஒரு தொகையை வடகிழக்கில் வாழும் மக்களுக்காகவேண்டி அனுப்பி வைக்கின்றார்கள் அதனை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.
இந்த அமைப்பின் செயற்பாடானது அனைத்து பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களுக்கும் சென்றடைந்து கொண்டிருக்கின்றது. இனிவரும் காலங்களிலும் அவர்களது செயற்பாடு தொடர்ந்து இருக்க வேண்டும் என்றார். (வ)

# வாள் வெட்டுத் தொடர்பில் கைதான மூவருக்கு வழக்கு

## ஏனையவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 8
கைதடியில் இடம்பெற்ற வாள் வெட்டுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு 3 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய 5 பேரும் வழக்கு இன்றி விடுதலை செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சுன்னாகம் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட புலனாய்வின்படி கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் இவர்களைக் கைது செய்தனர். சுன்னாகம் மதுபானக் கடை ஒன்றை அண் மித்து 3 மோட்டார் சைக்கிள் களுடன் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஏனையவர்கள் கைது செய் யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் சாவகச்சேரிப் பொலி ஸார் தமது பஸ்ஸில் ஏற்றிச் சென்றனர்.
அங்கு விசாரணை மேற்கொண்டு 5 பேர் சம்பவத்துடன் தொடர்புடவில்லை எனக் கண்டு விடுவிக்கப்பட்டனர். ஏனைய 3 பேருக்கும் எதிராக நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
அவர்களில் ஒருவர் சுன்னாகத்தையும் மற்றைய இருவரும் தெல்லிப்பழையையும் சேர்ந்தவர்கள். சுமார் 20 இற்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இவ்விதம் கைது செய்யப்பட்டவர்களாவர்.
கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட ஆவா குறுப்பைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டே இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவை பற்றிய விடயங்களைச் சந்தேக நபர்கள் இதுவரை பொலிஸாருக்குத் தெரிவிக்க வில்லை.
பணம் பெற்றுக் கொண்டு நடத்தும் இத்தகைய கும்பல்கள் இயங்கி வருவதாகவும், அவ்வாறு பணம் கொடுத்து உத்தரவிடுபவர்களை ஏற்கனவே கைதானவர்கள் இதுவரை காட்டிக்கொடுக்க வில்லை என்றும் கூறப்படுகிறது.
இது தொடர்பில் பொலிஸாரிடன் கேட்டபோது, அவை தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று கூறுகின்றனர். (த-4)

# உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஒக்.8
மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடிக் கடற்கரை யோர புதருக்குள் உருக்குலைந்த நிலையில் 30 வயது மதிக்கத்தக்கதாக பெண்ணின் சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி பொலிஸார் தெரி வித்தனர்.
விறகு வெட்டச் சென்றவர்கள் சடலம் ஒன்று கிடப்பதாக வழங்கிய தகவலையடுத்து குறித்த சடலத்தைக் மீட்டுள்ளதாகவும், இந்தப் பெண் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தாம் சந் தேகிப்பதாகவும் ஏறாவூர் பொலிஸார் மேலும் கூறினர். (வ)

# 10 லட்சம் ஏக்கர் அதிகரிப்பு 10 ஆண்டுக்குள் நெற்செய்கை

கொழும்பு, ஒக்.8
இலங்கையில் 10 ஆண்டுகள் காலத்துள் நெல் செய்கை மேற்கொள்ளும் வயல் நிலப்பரப்பின் தொகை 10 லட்சம் ஏக்கர்கள் வரையில் அதிகரித்துள்ளதாக பத்தலேகொட நெல் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.
2003 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் செய்கை பண்ணப்பட்டுள்ள மொத்த வயல் நிலப்பரப்பு சராசரியாக 20 லட்சம் ஏக்கர்கள் வரையில் காணப்பட்டது. இந்த ஆண்டில் அதை 30 லட்சம் ஏக்கர் வரையில் அதிகரித்துக் கொள்ள முடிந்திருப்பதாகவும் பத்தலேகொட நெல் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிக்கிறது. (வ-22)

# காளான் உற்பத்திப் பயிற்சிகள் யாழில்

அச்சுவேலி,ஒக். 8
யாழ். மாவட்டத்தில் காளான் உற்பத்தியில் ஈடுபட விரும்புபவர்களுக்குப் பயிற்சி மற்றும் வழிகாட்டல்களை விவசாயத் திணைக்களம் வழங்கி வருகின்றது.
நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்றிருப்பதோடு தன்னார்வ நிலையில் காளான் உற்பத்தியில் ஈடுபட முன்வந்துள்ளனர்.
யாழ். மாவட்டத்தின் கால நிலைக்கு ஏற்புடையதும் நல்ல விளைச்சலைத் தரக் கூடியதுமான புதிய இனமான பால் காளான்' இனமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
காளான் செய்கையில் மிகக் குறைந்த உற்பத்திச் செலவோடு கூடிய இலாபத்தை ஈட்டலாம். யாழ். மாவட்டத்தில் நல்ல சந்தை வாய்ப்பும் விலைத் தளம்பல் இல்லாத நிலையும் உள்ளது என யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஶ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.
யாழ். மாவட்ட காளான் பயிர்ச் செய்கை தொடர்பாகப் பணிப்பாளர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,
தாவர உணவான காளானுக்கு நல்ல சந்தை வாய்ப்பும் விருப்பத்தோடு பயன்படுத் துகின்ற நிலையும் யாழ். மாவட்டத்தில் உள்ளது. காளான் உற்பத்தியைப் பகுதி நேரமாக மாணவர்கள், பெண்கள் தமது வீடுகளில் மேற்கொள்ளலாம்.
காளான் செய்கை தொடர்பான பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. நூறுக்கு மேற்பட்டவர்கள் தாங்களாக விரும்பி வந்து பயிற்சி பெற்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் மட்டுமல்ல புத்தளம், மொனராகலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்தும் நூறுக்கு மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணம் வந்து பயிற்சி பெற்றுக்காளான் உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.
காளான் உற்பத்திக்கான செலவு கிலோ ஒன்றுக்கு 70 ரூபாவுக்கும் குறைவானது. ஒரு கிலோவை 300 ரூபா வரை விற்பனை செய்யலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் கிலோ 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.
காளான் உற்பத்தியை பெண்கள், மாணவர்கள் தமது வீடுகளின் பகுதி நேரத் தொழிலாக மேற்கொண்டு நல்ல வருமானத்தைப் பெறலாம். தற் பொழுது பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் பகுதி நேரத் தொழில் முயற்சியாக ஈடுபடுவதையும் நாளாந்தம் வருமானம் பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது.
யாழ். மாவட்டத்தில் இதுவரை பயன்பாட்டில் இருந்த சிப்பிக் காளானோடு தற்பொழுது புதிய இனமான பால் காளானும்' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது தசைப்பற்று உள்ளது. நல்ல விளைச்சலைத் தரக் கூடியது. தற்பொழுது ஏற்பட்டுள்ள தன்னார்வ நிலை யாழ். மாவட்டத்தில் விரைவில் தன்னிறைவை ஏற்படுத்தும் -என்றார். (த-11)

**இலங்கை வங்கியாளர் நிலையம் - IBSL**
**(New Examination Structure)**

IABF and DABF வகுப்புக்கள் ஆரம்பம்.
12.10.2014 (ஞாயிறு 9.00 AM)
@
ACCTECM BUSINESS STUDIES
No:01, 2nd Lane Power House road, Jaffna.
T.P: 021 221 7733/ 077 321 4002

## ஸ்நோடனுக்கு அமைதிக்கான நோபல் பரிசு

ஒஸ்லோ. ஒக். 8

கலை. இலக்கியம். வரலாறு. பொருளாதாரம். அறிவியல். மருத்துவம் மற்றும் அமைதி உள்ளிட்ட பலதுறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. என்றாலும் அமைதிக் கான நோபல் பரிசு பெறுதலே உலகின் மிக உயரியதாகக் கருதப்பட்டு வருகிறது.

இந்த வகையில் 2014ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல்பரிசு அமெரிக்காவின் பாதுகாப்பு ரகசியங்களையும், அது சர்வதேச அளவில் செய்யும் ஒன்லைன் தகவல் திருட்டுக்களையும் வெளியிட்டு, அந்நாட்டுக்கு மாபெரும் சவாலாக விளங்கிய மனிதநேய ஆர்வலர் எட்வேர்ட் ஸ்நோடனுக்கு வழங்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக் கான நோபல் பரிசுக்கு எட்வர்ட் ஸ்நோடன் பெயரை அறிவித்துள்ள நோபல் தேர்வுக் குழுவினர் - அவர் செய்த சிறப்பான செயல் களுக்காக ஸ்நோடன் துரோகியாகவும், குற்ற வாளியாகவும் சித்தரிக்கப்படுகிறார். (த)

**"DEUTSCH" வகுப்புக்கள்**

ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான "Deutsch" மொழி வகுப் புக்கள் மிகவும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் Mr. R. Mayooran அவர்களால் தூதரகத்தால் கோரப்படும் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு இலகு [illegible]யில் கற்பிக்கப்படுகிறது.

ஆரம்பம்: 11.10.2014 (Saturday)

★தமிழ் மொழி மூல விளக்கங்களுடன் கற்பிக்க[illegible] பரீட்சைக்கான ஆயத்தங்கள் செய்து தரப்படும்.

Facilities Available, Free Tute Issue, A/C Class Room

மேலதிக விரங்களுக்கு:

ACCTECM BUSINESS STUDEIS
இல.01, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையத்துக்கு அருகில்)
T.P: 021 221 7733
(62988) (10)

**உடனடி வேலை வாய்ப்பு**

LAC

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு புதிய நீதி மன்றம் யாழ்ப்பாணம்**


**தகமைகள்**
★ க.பொ.த உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
★ கணனி அறிவில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
★ ஆங்கில அறிவு/(மும்மொழித்திறன்) இருத்தல் வேண்டும்.
★ முச்சக்கரவண்டி செலுத்ததெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

**கடமைகள்**
★ அலுவலகத்தை பராமரித்தல்.(சுத்திகரிப்புடன், பாதுகாப்பு)
★ செய்திகளை வெளியிடங்களுக்குச் சென்று கொடுத்தல்.
★ மேலதிகாரியின் பணிப்புரைகளைச் செய்தல்.
★ அலுவலகத்தின் முச்சக்கரவண்டியினைச் செலுத்துதல்.


**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்**
**விண்ணப்ப முடிவுத்திகதி : 15.10.2014**


**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி**
programme support unit-Legal Aid Commission
211, Trffic Court Complex, Hulftsdrop Street,
Colombo-12
Contect : 0711195422
Email : helani.lac.psu@gmail.com


# லக்ஷ்மி எஞ்சினியரிங்



இல 105, இராஜ வீதியில் அமைந்திருக்கும் லக்ஷ்மி எஞ்சினியரிங், வாடிக்கையாளர்களது சௌகரியங்களுக்காக இன்றிலிருந்து (08-10-2014) இல 253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திற்கு (புதிய ரயில் கடவைக்கு அருகில்) இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளதனை மகிழ்ச்சியுடன் தெரியப் படுத்துகின்றோம்.







லேத் வேலைகள் - வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் மாற்றியமைத்தல்
அச்சு இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள் மாற்றியமைத்தல்

ஒட்டு வேலைகள் - கிரில், கேட், ரஸ், செப்பு ஒட்டு வேலை

றீ-வைன்டிங் - மோட்டார், ரிரான்ஸ்போமர்

அச்சு இயத்திரம் - திருத்துதல், சேர்வீஸ் செய்தல்,
அச்சு இயந்திரத்திற்கான
பேப்பர் கட்டிங் பிளேட் தீட்டுதல்

Lukshmee Engineering இல. 253 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: 021 567 0256

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன் | 08 ஒக்ரோபர் 2014 | புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு


வாழ்க்கையில் சிறந்த செயல் எது தெரியுமா? தொலைவில் மங்கலாகத் தெரிவதைத் தொலைப்பட்டுப் பார்க்க முயற்சிப்பதன்று. கையிலிருப்பதை உடனடியாகச் செய்து முடிப்பதுதான்.
- கார்லைல்

# உடல் நலத்துக்கு ஏற்ற உணவுகளை தேர்ந்தெடுப்போம்


■ ராஜராஜன்




இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் சிறு தானியங்களை உற்பத்தி செய்விப்பதில் அரசு அதிக அக்கறை கொண்டு செயற்படுவதாக அறிய முடிகின்றது.

**சிறு தானியங்களின் உற்பத்தி**

சிறுதானியங்கள் என்னும்போது தினை, சாமை, குரக்கன், சோளம், கம்பு, குதிரைவால் எனப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இறுதியாகவுள்ள இரண்டைத் தவிர ஏனைய நான்கும் எமக்குப் பரிச்சயமானவை. ஆனால் இப்போதுள்ள இளம் சந்ததியினர் இவற்றைப் பற்றி அறியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

**சிறுதானியங்களின் பயன்பாடு முக்கிய இடத்தில்**

கடந்த 60 அல்லது 70 வருடங்களுக்கு முன்பு கூட சிறுதானியங்களின் பயன்பாடு எமது நாட்டில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. அரிசிக்கு மாற்றீடாகவே இத்தகைய சிறுதானியங்கள் பயன்படுத்தப்பட்டன. மேற்கத்திய நாடுகள் கோதுமையைப் பிரதான உணவாகப் பயன்படுத்தும் நிலையில் ஆசிய நாடுகளில் அரிசியே முதலிடத்தை வகிக்கின்றது. ஆசியாவில் வாழும் மக்களில் ஒரு சிறு தொகையினர் கோதுமையைத் தமது பிரதான உணவாக உட்கொள்வது வேறு விடயம்.

**தொற்றா நோய்களின் பெருக்கம்**

இன்று தொற்றா நோய்களில் ஒன்றான நீரிழிவு, பலரையும் பாதித்து வருகின்றது. இதற்கு வயது வேறுபாடும் கிடையாது. இதற்கான பிரதான காரணமாக உணவுப் பயன்பாடே காணப்படுகின்றது. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அரிசி மற்றும் கோதுமையின் பயன்பாட்டை வெகுவாகக் குறைக்குமாறு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கி வருகின்றனர். இது இங்கு வாழும் ஏழை மக்களுக்கு உகந்ததொரு ஆலோசனையாக இருக்கப் போவதில்லை. ஏனென்றால் மூன்று வேளையும் அரிசி உணவுகளையே இவர்கள் தமது உணவாகக் கொள்கின்றனர். ஆனால் இந்தப் பழக்கத்தை இவர்கள் கட்டாயமாக மாற்ற வேண்டியதொரு நிலை இப்போது உருவாகியுள்ளது. இதன் காரணமாகவே தமிழ்நாட்டில் சிறுதானியங்களின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது.



**ஆங்காங்கு குரக்கன் உற்பத்தி**

எம்மைப் பொறுத்தவரையில் ஆங்காங்கு சிறு அளவில் குரக்கன் உற்பத்தி இடம்பெறுவதைக் காண முடிகின்றது. ஆனால் இதன் விலை சாமானியர்கள் எட்ட முடியாத உயரத்தில் காணப்படுகின்றது. குரக்கனின் உற்பத்தி பெருமளவில் இடம்பெற்று அதிகளவில் விற்பனைக்கு வரும்போது இதன் விலையிலும் இறக்கம் ஏற்படும்.

எம்மில் சிலர் நீரிழிவு நோயின் ஆரம்ப கட்டத்தில் சகலவிதமான கட்டுப்பாடுகளையும் மருத்துவர் கூறியது போன்று கடைப்பிடிப்பார்கள். இவர்கள் அரிசியை முறைத்துப் பார்ப்பார்கள். சீனியினால் தயாரிக்கப்படும் உணவுகளை எட்டி உதைப்பார்கள். குரக்கன் உள்ளடங்கலாக சிறுதானியங்களையே உணவாகக் கொள்வார்கள். ஆனால் நாளடைவில் தமக்கு ஒவ்வாத உணவுகளை உண்டு விட்டு இன்று வழக்கத்தைக் காட்டிலும் ஒரு மருந்துக்குளிகையை எடுத்தால் எல்லாமே சரியாகிவிடுமெனத் தமக்குத் தாமே சமாதானம் கூறிக்கொள்வார்கள்.

**குளிர்பானங்கள் மீதான மோகம்**

இன்றைய இளம் சமுதாயத்தினரின் குளிர்பானங்கள் மீதான அதீத மோகமும் அவர்கள் நோய்களுக்கு ஆளாகுவதற்கான பிரதான காரணமாக அமைந்து விடுகின்றது. உணவகங்களில் உணவை உண்ணும்போது இடது கரத்தில் ஏதோவொரு குளிர்பானத்தை ஏந்தியவாறே இவர்கள் காட்சி தருகின் றனர். இதையொரு மேம்பட்ட நாகரிகச் செயலெனவும் இவர்கள் கருதுகின்றனர். ஆனால் இந்தக் குளிர்பானங்களில் அடங்கியிருக்கும் **அதிகரித்த சீனியின் அளவு தீங்கு விளைவிக்குமென்பதை இவர்கள்** அறிந்திருப்பதில்லை.

**பழக்க வழக்கங்களில் மாற்றங்கள்**

ஒருவரின் பழக்க வழக்கங்களைத் திடீரென மாற்றிக் கொள்வதென்பது இலகுவான காரியமல்ல. ஆனால் தீங்கு ஏற்படுமென உணர்ந்தால் மாற்ற வேண்டியதுதான். இதில் தயக்கத்துக்கு இடமேயில்லை. அரிசிச் சோற்றின் ருசியை சுவைத்த எமது நாக்கு குரக்கன் உணவுகளை ஏற்றுக் கொள்வதற்கு சிறிது காலம் எடுக்கத்தான் செய்யும். ஆனால் அவற்றைப் புறக்கணிப்பது என்பது எம்மை நாமே நோய்களுக்கு இட்டுச் செல்வதாக அமைந்துவிடும்.

**அளவுக்கு அதிகமான உணவு நுகர்வு**

எம்மவர்களிடம் ஒரு பழக்கம் காணப்படுகின்றது. தமது தேவைக்கு அதிகமாக உணவுகளை உட்கொள்வதுதான் அது. சோற்றை உண்ணும்போது கறி வகைகள் சுவையாக இருந்துவிட்டால் ஒரு பிடி பிடித்து விடுவார்கள். அதுமட்டுமல்ல இன்னமும் சிறிது சாப்பிடலாம். ஆனால் வயிற்றினுள் இடமில்லையே என வருத்தமும் அடைவார்கள். வேறு சில உணவு சுவையாக இருக்கின்றதோ இல்லையோ அதனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது அளவுக்கு மிஞ்சிய வகையில் உண்பார்கள். இத்தகைய சுபாவமுடையவர்கள் நோய்களை இலகுவாகத் தம்வசம் ஈர்த்துக் கொண்டு அவதிப்படுவார்கள்.

எமது முன்னோர்கள் விஞ்ஞான மருத்துவ அறிவுகள் இல்லாத நிலையிலும் தமது உடலுக்கு நன்மை பயக்கக் கூடியதும். தீமை விளைவிக்காததுமான உணவுகளையே உட்கொண்டனர். அவர்களது உணவில் சிறு தானியங்கள் முக்கிய இடத்தை வகித்தன. அநேகமாக எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட எண்ணெய், இலுப்பெண்ணெய் ஆகியவற்றையே இவர்கள் பயன்படுத்தினர். அப்போதெல்லாம் தேங்காய் எண்ணெய் விளக்குகளை எரிப்பதற்காகவே அநேகமாகப் பயன்படுத்தப்பட்டது. அன்னியரின் வருகைக்கு முன்பதாக இந்த நிலையே இங்கு காணப்பட்டது. கோதுமை மாவும் அந்நியரால் இங்கு எடுத்து வரப்பட்டதால் அதன் பாவனை பழக்கத்துக்கு வந்தது. எமது முன்னோர்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படாதிருந்தால் தற்போதைய அவலநிலை ஏற்பட்டிருக்கவே மாட்டாது.

நடந்து முடிந்ததை நினைத்துக் கவலைப்படுவதை விடுத்து இனிமேல் நடக்கப் போவது தொடர்பாகச் சிந்திப்பதே பயன்தரும். இந்த நிலையில் எமது உணவுப் பழக்க வழக்கங்களில் உடனடியாக மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலமாக உடலைப் பாதிக்கும் தொற்றா நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். சிறு தானியங்களை நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அவற்றை உற்பத்தி செய்வோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கவே செய்யும். இதனால் சிறுதானியங்களை வேண்டிய அளவுக்குச் சந்தைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

**உடல் நலத்துக்கு ஏற்ற உணவுகள்**

எனவே இனியாவது நாவுக்கு ருசியான உணவுகளைத் தேடுவதை விடுத்து எமது உடல் நலத்துக்கு ஏற்ற உணவுகளை உண்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோம்.



# தும்மல் வருவது ஏன்?

மழைகாலம் தொடங்கி விட்டால் தடிமன், தும்மல், மூக்கடைப்பு, மூக்கு ஒழுகுதல் என்று பல தொல்லைகள் வரிசையில் வந்து நிற்கும்.

இவற்றில் தும்மல் என்பது சாதாரண உடலியல் விடயம்தான். காற்றைத் தவிர வேறு எந்த அந்நியப் பொருள் மூக்கில் நுழைந்தாலும, மூக்கு அதை அனுமதிக்க மறுக்கிறது.

அதற்கான அனிச்சைச் செயல் தான் தும்மல். நமது நாசித் துவாரத்தில் சிறிய முடியிழைகள் நிறைய இருக்கின்றன. நாம் உள்ளிழுக்கும் காற்றில் கண்ணுக்குத் தெரியாத தூசு, துகள் இருந்தால் அவற்றை வடிகட்டி அனுப்புவது தான் இவற்றின் வேலை.

இங்கு ஒரு மென்மையான சவ்வுப் படலம் உள்ளது. இது நிறமற்ற திரவத்தைச் சுரக்கிறது.

அளவுக்கு அதிகமாகத் தூசியோ, துகளோ மூக்கில் நுழைந்து விட்டால், இந்தச் சவ்வுப் படலம் தூண்டப்படுகிறது. உடனே அவற்றை வெளித் தள்ளும் முயற்சியில் சவ்வுப் படலம் அதிக அளவில் நீரைச் சுரக்கிறது. இதன் தூண்டுதலால், நுரையீரல், தொண்டை வாய் மற்றும் வயிற்றுத் தசைகள் ஒன்று சேர்ந்து சுவாசப் பாதையில் உள்ள காற்றை அழுத்தமாகவும் வேகமாகவும் மூக்கு வழியாக வெளித் தள்ளுகின்றன இதுதான் தும்மல்.

ஒவ்வாமைதான் இதற்கு அடிப்படைக் காரணம். குறிப்பாக வீட்டுத் தூசு, ஒட்டடை, உமி போன்றவற்றின் தூசு மூக்கில் பட்டதும் தும்மல் தொடங்கி விடும்.

# அடிக்கடி தலைவலி வருகிறதா?

பெரும்பாலானவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் விடயங்களில் ஒன்று தலைவலி.

நாம் செய்யும் செயல்களால் தான் தலைவலி வருகிறது. இதற்காக நாம் நிறைய மாத்திரைகள், வீட்டு மருந்துகள் என்று பல வலி நிவாரணிகளை எடுத்துக் கொண்டு தான் இருக்கின்றோம்.

இவ்வாறு அடிக்கடி எடுத்துக் கொள்ளும் மாத்திரைகளும், உடலில் கெடுதலை ஏற்படுத்தி விடுகின்றன.

நாம் செய்யும் எந்தச் செயலகளால், இந்தத் தலைவலி ஏற்படுகின்றது என்ற காரணத்தைத் தெரிந்து கொண்டு, அவற்றைச் சரிசெய்தாலே போதும்.

**ஈரமான கூந்தல்**

காலையில் தலைக்குக் குளித்ததும், சரியாகக் காய விடாமல், அப்படியே தலையை சீவிக் கொண்டு செல்வார்கள். இதனால் தலையில் நீர் அப்படியே தங்கி, தலைவலியை உண்டாக்கும்.

**அளவுக்கு அதிகமான வெப்பம்**

வேலையாக வெளியே செல்லும் போது, தலைக்குத் தொப்பியை அணிந்து செல்வது நல்லது. ஏனெனில் அளவுக்கு அதிகமான வெப்பம் தலையில் படும்போது, தலைவலி உண்டாகும்.

மேலும் சரியாக உண்ணாமல் வெயிலில் சென்றாலும், சூரியக் கதிர்கள் உடலில் உள்ள சக்தியை ஈர்த்து, பெரும் வலியை உண்டாக்கும்.

**வாசனைத் திரவியங்கள்**

சிலர் அளவுக்கு அதிகமாக வாசனை திரவியங்களை உடலில் பூசிக் கொண்டு செல்கின்றனர். இதனால் அந்த நறுமணப் பூச்சின் வாசனை, அதிக தலைவலியை உண்டாக்கும்.

**கணினி மற்றும் தொலைக்காட்சி**

கணினியைப் போன்று தான், தொடர்ச்சியாகத் தொலைக்காட்சியைப் பார்க்கும் போதும் கண்களுக்குப் பெரும் எரிச்சல் ஏற்படுகிறது. மேலும் சிலர் தொலைக் காட்சிக்கு அருகில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பர்.

தொலைக்காட்சி மிகவும் பிரகாசமாக இருந்தால், அவற்றைக் கண்களுக்கு இதத்தை தரும் வகையில் சரியாக வைத்துப் பார்க்க வேண்டும்.

ஏனெனில் கண்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால், அவை தலையையும் நிச்சயம் பாதிக்கும்.

**அதிக குளிர்ச்சி**

அனைவருக்கும் அளவுக்கு அதிகமாகக் குளிர்ச்சி உள்ள பானங்களை குடித்தாலோ அல்லது ஐஸ்கட்டிகளைச் சாப்பிட்டாலோ, தலை சற்று வலிப்பது போல் இருக்கும்.

ஏனெனில் அவை மூளையை உறைய வைத்துவிடுகிறது.

ஆகவே அதிக குளிர்ச்சியுடன் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

**சரியான தூக்கம்**

தூக்கம் குறைவாக இருந்தாலும், அதிகமான தலை வலி உண்டாகும். ஆகவே ஒருவருக்குக் குறைந்தது 6 தொடக்கம் 7 மணி நேர உறக்கம் மிகவும் இன்றியமை யாதது. இதனால் மூளை மற்றும் உடல் நன்கு புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

நாம் செய்யும் செயல்களால் தான் தலை வலி வருகிறது. இதற்காக நாம் நிறைய மாத்திரைகள், வீட்டு மருந்துகள் எடுத்துக் கொண்டு தான் இருக்கின்றோம்.



# உற்சாகம் தரும் உலர்பழங்கள்



உலர் பழங்கள் உடலுக்கு ஆரோக்கியம் தருபவை. பழங்களில் உள்ள நீர்ச்சத்தை வற்றச் செய்து உலர் பழங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இதன் மூலம் பழங்கள் நீண்ட நாள்கள் கெடாமல் இருக்கும். உலர்த்துவதன் மூலம் ஒரு பருவ காலத்தின் பழங்களை மற்றொரு பருவ காலத்தில் உண்ண முடிகிறது. உலர் பழங்களின் சுவையும், மணமும் வெகு நாள்களுக்கு இருக்கும்.

உலர் பழங்களுக்கு கலோரிகள் அதிகம். மேலும் உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி தர விற்றமின்கள் இவற்றில் நிறைய உள்ளன. உலர் பழங்கள் வெகு எளிதில் செரிமானமாகக் கூடியவை. இரத்தத்தைச் சுத் தப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. பலவீனமானவர்கள் உலர் பழங்கள் உண்டால் விரைவில் இயல்பான ஆரோக்கியத்தை அடையலாம். உலர் பழங்களில் உள்ள இனிப்பு தனித்துவமான சுவை கொண்டது.

நாவுக்கு மட்டுமின்றி உடல் ஆரோக்கியத்துக்கும் உகந்தது. உலர் பழங்களை உண்பதைப் பழக்கமாகக் கொண்டால் உடல் சக்தி அதிகரிக்கும். மலச்சிக்கலைப் போக்கவல்லவை. அதுமட்டுமல்ல நினைவாற்றலையும் பெருக்கும். இதயத்துக்கும் நல்லது. உலர்ந்த திராட்சை புரதச் சத்தும் நிறைந்தது. வேர்க்கடலையில் நார்ச்சத்தும் பேரீச்சம்பழத்தில் தாதுச் சத்தும் நிறைந்துள்ளன. இவ்வளவு சத்துள்ள உலர் பழங்களை அன்றாடம் உண்டு ஆரோக்கியம் பெறுவோம்.

# நீரிழிவையும் வெல்ல முடியும்



உணவுக் கட்டுப்பாடு, மருத்துவம், உடற்பயிற்சி ஆகிய மூன்றும் சேர்ந்துதான் நீரிழிவு நோயின் தாக்கத்தை அதிகப்படுத்தாமல் தடுக்கின்றன. நீரிழிவு நோய் தோன்றலாம் என்ற ஐயம் அல்லது தோன்றிவிடும் என்ற பயம் உள்ள காலத்தில் மிகக் குறைவான தாக்கத்தையே நோய் ஏற்படுத்தி இருக்கும்.

அந்த ஆரம்பக் கட்டத்தில் உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியுமே போதும் என்பது மருத்துவர்களின் கருத்து. அதன் பின்னர் நீரிழிவு நோய் கட்டுப்பாடு சற்று அதிகம் தேவைப்பட்டால், மாத்திரை உட்கொண்டு அக்கறையோடு உணவுக் கட்டுப்பாட்டையும் உடற்பயிற்சியையும் மேற்கொள்ளலாம். சில சமயம் இந்த நிலையிலும் சர்க்கரை அளவுக் கட்டுப்பாட்டுக்குள் வராது அதிகரித்து வந்தால் அல்லது உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சியை நோயாளி சரியாகப் பின்பற்ற இயலாதவராக இருந்தால் இன்சுலின் ஊசி எடுத்துக் கொள்வது அவசியம். ஏனென்றால், இரத்தச் சர்க்கரை கட்டுப்பாட்டில் இல்லாவிட்டால் கால்கள், சிறுநீரகம், அதைச் சார்ந்த உறுப்புகளையும், இதயம், கண், மூளை, நரம்பு போன்ற உடலுறுப்புகளையும் பாதித்து மோசமான பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். இரத்த ஓட்டம் பெருமளவில் பாதிக்கப்படும். உணவைக் கட்டுப்படுத்துவது என்பது அளவைக் கட்டுப் படுத்துவது மட்டுமல்ல.

அதன் தரத்தை, வகையைக் கட்டுப்படுத்துவதே ஆகும். பொதுவாக எல்லோருக்கும் சமச்சீரான உணவு தேவை என்பது நமக்குத் தெரிந்த ஒன்று தான். இதைப் போலவே நீரிழிவு நோயாளிகளுக்கும் எனத் தனியாகச் சமச் சீரான உணவு உண்டு. அதில் சிறிய அளவு மாற்றமே இருக்கும். மாவுச் சத்து மிகுந்த காபோவைதரேற்றின் அளவு பாதியாகக் குறைக்கப் பட்டு, அதை ஈடுகட்டும் விதத்தில் புரதச்சத்தும் நார்ச்சத்தும் மிகுந்த காய்கறிகளும் இனிப்புக் குறைவான பழங்களும் உள்ளடங்கும். அரிசி போன்ற தானியங்களைக்குறைத்துப் பருப்பு வகைகளை அதிகம் சேர்த்துக்கொள்ளலாம்.

கிழங்குகள் (நிலத்தின் அடியில் விளையும் இஞ்சி, மஞ்சள், வெங்காயம், பூண்டு, முள்ளங்கி தவிர), உறையும் தன்மையுள்ள எண்ணெய் வகைகள், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி, சர்க்கரை, வெல்லம், தேன், முந்திரி, பாதாம், பிஸ்தா, வேர்க் கடலை போன்ற கொட்டை வகைகள், தேங்காய், இளநீர், குளிர்பானங்கள், சத்துமாவு, பானங்கள், உலர்ந்த பழ வகைகள், மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள், சப்போட்டா, திராட்சை போன்ற இனிப்பு மிகுந்த பழங்கள், ஐஸ் கிரீம், பீட்ஸா போன்ற பேக்கரி தயாரிப்புகள், இனிப்பு சேர்த்த பிஸ்கட், ஜாம், ஜெல்லி, மது வகைகள், சிகரெட், இனிப்புச் சேர்த்த பானங்கள் போன்ற பானங்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.



# மதுப்பழக்கத்துக்கு அடிமையானோரை மீட்க மாத்திரை

மதுவுக்கு அடிமையான நோயாளிகளுக்கு அரச மருத்துவத்துறை இந்த மாத்தி ரையை வழங்குகின்றது. இதனை, ஐக்கிய இராச்சியத்தின் ஏனைய பிராந்தியங்களான இங்கிலாந்திலும் வேல்ஸிலும் உள்ள நோயாளிகளுக்கும் வழங்க வேண்டும் என்று நைஸ் என்கின்ற தேசிய சுகாதார பராமரிப்புக்கான நிறுவனம் அரசிடம் பரிந்துரை செய் துள்ளது. ஒவ்வொன்றும் 3 பிரிட்டன் பவுண்டுகளுக்கும் அதிக விலைகொண்ட இந்த மாத்தி ரையை சுமார் 6 லட்சம் நோயாளிகளுக்கு வழங்க வேண்டிவரும் என்று நைஸ் கணித்துள்ளது.

நல்மாஃபீன் அல்லது செலின்க்ரோ என்ற பெயர்களில் அழைக்கப்படும் இந்த மாத்திரையை ஒரு நாளைக்கு ஒன்று வீதம் எடுத்துக் கொண்டால் மது குடிக்கத் தூண்டுகின்ற உணர்வைக் குறைத்துக் கொள்ளமுடியும். உளநல ஆற்றுப் படுத்தலோடு சேர்த்து இந்த மருந்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும். உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி, ஆண் ஒருவர் நாள் ஒன்றுக்கு 7.5 அலகுகளும் (5 % அற்கஹோல் கொண்ட பியரில் 3 பைண்டுகள்) பெண் ஒருவர் 5 யுனிட்டுகளும் (5 % அற்கஹோல் கொண்ட பியரில் 2 பைண்டுகள்) மது அருந்த முடியும். அதற்கு மேல் அருந்துவதே அள வுக்கு அதிகமான குடிப்பழக்கம் என்று கணிக்கப் பட்டுள்ளது. இப் படியான பெருங் குடிகாரர் களுக்கே நல்மாஃ பீன் மாத்திரையைக் கொடுத்து திருத்தி விடலாம் என்று நைஸ் அமைப்பு நம்புகின்றது.

**ஆண்டுக்கு 21 பில்லியன் பவுண்டுகள் செலவு**

மதுவால் ஏற்படுகின்ற நோய்களால் என்எச்எஸ் என்ற அரச சுகாதாரத் துறைக் காகவும் மதுவோடு தொடர்புடைய சமூகப் பிரச்சினைகள், குற்றச் செயல்கள், பொருளாதார பாதிப்புகள் போன்ற காரணங்களுக்காகவும் பிரிட்டன்அரசுஆண்டுக்கு 21 பில்லியன் பவுண்டுகளைச் செலவு செய்கின்றது. இந்த மாத்திரை மூலம், நோயாளிகள் தமது மது அடிமைத் தனத்திலிருந்து ஆறு மாத காலத்தில் 61 வீதமளவுக்கு மீண்டு வந்துள்ளதாக இதுவரை நடத்தப்பட்டுள்ள பரீட்சார்த்த சிகிச்சைகளின் மூலம்தெரிய வந்துள்ளதாக மாத்திரையை தயாரிக்கும் நிறுவனம் கூறுகின் றது.

ஆனால், அளவோடு குடிக்கும் பழக்கம் உள்ளவர்களும் குடிப் பழக்கம் இல்லாதவர்களும் இந்த மாத்திரைத் திட்டத்தை நியாய மற்றது என்று வாதிடுகின்றனர். குடிப்பழக்கத்தை போக்க மாத்திரையா? அதுவும் பொறுப்பற்ற குடிகாரர்களின் பிரச்சினைக்கு பொது மக்களின் வரிப்பணமா?- போன்ற கேள்விகளும் இதனோடுஎழுப் பப்பட்டுள்ளன.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு"

மண் மகிழ
26.03.1947

கண் நெகிழ
08.09.2014

### திருமதி லீலாவதி திருநாவுக்கரசு

**புளியங்கூடல் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர்.**

திக்கற்ற பறவைகளானோம் - நாம்
திசை தெரியாமல் தவிக்கின்றோம்

அன்பு மொழி பேசி ஆசையுடன் அரவணைத்து
பல்சுவை பண்டங்கள் பரிமாறி
பாசமுடன் ஆதரித்த அன்னையே!
நேசக்கரம் நீட்டியே - உன்
நினைவலைகளை சுமக்க வைத்தாய்!

திரும்பும் இடமெங்கும் உன் திருமுகம் தெரியுதம்மா!
வாழ்நாளில் ஓய்வெடுக்கும் வேளையதனில்
வேறுலகம் சென்றதுதானேனோ? இல்ல
விருட்சத்தின் வேராகி நீராகி
நிழல் பரப்பி காத்து நின்ற தாயே!
வழி மேல் விழி வைத்தே
காத்திருக்கிறோம் வாராயோ மீண்டும்???



(52991)(10.6)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர் மறைவையொட்டி நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், நேரில் நின்று உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் மனமுவ ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.**

**கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**







சுவிற்சர்லாந்து நாட்டில் வாழும் மல்லாகத்தைச் சேர்ந்த மகாலிங்கம் தம்பதியினரின் மகளாகிய செல்வி பவதாவின் நாட்டிய அரங்கேற்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. சுவிற்சர்லாந்தின் சலங்கை நர்த்தனாலயத்தின் அதிபரான திருமதி மங்களநாய்கி வசந்தகுமாரனின் மாணவியான அவர் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக பரதத்தைக் கற்று தனது தாய் மண்ணில் அரங்கேற்றத்தை நடத்தியுள்ளார்.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஓய்வு பெற்ற நடன ஆசிரிய ஆலோசகர் கலாபூசணம் திருமதி பத்மினி செல்வேந்திர குமாரும், சிறப்பு விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் நுண்கலைப்பீடத்தலைவர் பேராசிரியர் எஸ்.மௌனகுருவும் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக கலாபூசணம் நாட்டிய வாரிதி ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வ ராசா, கலாகீர்த்தி, திருமதி சாந்தினி சிவநேசன், கலாநிதி திருமதி கிருசாந்தி ரவீந்திரா, நாட்டிய கலாவித்தகர் திருமதி நந்தினி சிவ ராஜன், முதுகல்விமாணி திருமதி புவனேஸ் வர் வேல்நிதி ஆகியோர் கலந்து கொண்டு ஆசிர்வாதங்களை வழங்கினர். (வ-86)






## மிருதங்க அரங்கேற்றம்

யாழ். பல்கலைக்கழக நடனத்துறை மிருதங்க விரிவுரையாளர் முதுகலைமாணி கணபதிப்பிள்ளை கஜனின் மாணவர் அ.சண்முகப்பிரியனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று பிற்பகல் 2 மணிக்கு இணுவில் இளந்தொண்டர் சபைக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரி யர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்த அரங்கேற்றத்தின் இசைக் கலைஞர்களாக த.றொபேட் (பாட்டு) அ.ஜெயராமன் (வயலின்) நா.மாதவன் (கடம்) நா.சிவசுந்தரசர்மா (கஞ்சிரா) சி.செந்தூரன் (முகர்சிங்) க.ரஜீவன் (தம்புரா) ஆகியோர் அணி செய்கின்றனர். இசைத்துறை விரிவுரையாளர் நுண்கலைமாணி க.கண்ணதாஸ் மதிப்பீட்டுரையை நிகழ்த்தவுள்ளார்.





கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற முதியோர் தின நிகழ்வின் போது இடம்பெற்ற கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவிகளின் நடன நிகழ்வும், கைதடி முன்பள்ளி சிறார்களின் அபிநய நிகழ்வுகளும். (வ-86)

## செட்டிகுளம் நகருக்குட்பட்ட சிறுவர் நாடகப் போட்டி முடிவு

செட்டிகுளம் நகருக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான சிறுவர் நாடகப்போட்டிகள் செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன. அவற்றின் முடிவுகள் வெளிவந்துள்ளன. போட்டிகளில் செட்டிகுளம் கோட்டத்துக்கு உட்பட்ட 7 பாடசாலைகள் கலந்து கொண்டன. இதில் முதலாம் இடத்தை முதலியார்குளம் பாடசாலையும் இரண்டாம் இடத்தை அல்காமியா பாடசாலை மற்றும் அல்இக்பால் பாடசாலை ஆகியவையும் பெற்றன(இரண்டாம் இடத்தை இருபாடசாலைகள் பெற்றன) இந்த மூன்று பாடசாலைகளும் வலயமட்ட சிறுவர் நாடகப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (வ-402)

## கலையரங்கு அமைக்க பிரதேச செயலாளர் உதவி



மண்முனை தென் எருவில் பிரதேசத்துக்கு உட்பட்ட செட்டிபாளையம் சிவன் ஆலயத்தில் கலையரங்கு அமைப்பதற்காக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் தமது சொந்த நிதியிலிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அண்மையில் வழங்கியுள்ளார்.
செட்டிபாளையம் சிவன் கிட் ஹோம் நடத்திய சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் வைத்து சிவன் ஆலய பரிபாலன சபையினரிடம் மேற்படி பிரதேச செயலாளர் நிதியை வழங்கியுள்ளதாக செட்டிபாளையம் சிவன் ஆலய பரிபாலனசபைத் தலைவர் சி.நாகலிங்கம் கூறினார்.
பிரதேச செயலாளர் தமது ஆலயத் திற்கு வழங்கியுள்ள உதவிக்கு தமது ஆலய நிர்வாகத்தினர் சார்பிலும், கிராம மக்கள் சார்பிலும், உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக செட்டிபாளையம், சிவன் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.



## அனிஞ்சியன்குளம் கிராம மூல வளத்திரட்டு நூல் வெளியீடு

ஒரு கிராமத்தின் சகல விபரங்களையும் அறியக்கூடியவகையில் அனிஞ்சியன்குளம் கிராம மூலவளத்திரட்டு நூல் அமைந்துள்ளது என்று துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார். அனிஞ்சியன்குளம் கிராம மூலவளத்திரட்டு நூல் வெளியீடு துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.
அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வராசா சொரூபனால் தொகுக்கப்பட்ட இந்நூல் பிரதேச செயலர் சி.குணபாலனால் வெளியிட்டு வைக்கப்பட்ட பின்னர் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்நூல் வெளியீடானது அனைத்து பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் ஓர் முன்னுதாரணமாக அமைவது மட்டுமன்றி, ஒவ்வொரு கிராமங்களுடைய தரவுகளையும் ஒரு நூலாக எதிர்காலத்தில் வெளியிடுவதன் மூலம் கிராமங்களின் புள்ளிவிவரங்களை அறியக்கூடியதாகவிருக்கும்.
துணுக்காயை பொறுத்தவரையில் மிகவும் நெருக்கடிகள் மிகுந்த கிராமங்களின் விபரங்கள் நூலாக வெளிவருவதன் மூலம் எல்லோரும் தகவல்களை அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாகும். அந்த வகையில் அனிஞ்சியன்குளம் கிராம மூல வளத்திரட்டு நூல் ஒரு பாராட்டுக்குரிய படைப்பு என்றும் பிரதேச செயலா சி.குணபாலன் தெரிவித்தார். (வ-18)

## 'வள்ளுவன்' குறும்படமும் மழை பாடலும் வெளியீடு

ஸ்ரார் மீடியா கலையகத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவையையொட்டி வள்ளுவன் குறும்படமும் மழை பாடலும் வவுனியாவில் வெளியிடப்பட்டன.
இந்த நிகழ்வு வவுனியா தவசிக்குளத்தில் ஸ்ரார்மீடியா கலையகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
ஸ்ரார் மீடியா கலையகத்தின் தலைவர் எஸ்.பிரியந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு வட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக திரைப்பட குறும்பட இயக்குநர் சு.வரதகுமார், வவுனியா மாவட்டகலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், முன்னாள் நகரபிதா சந்திரகுலசிங்கம், வரி இறுப்பாளர் சங்கத் தலைவர் கண்ணன் உட்படப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.
இந்த நிகழ்வில் சு.வரதகுமாரின் தயாரிப்பில் உருவான வள்ளுவன் குறும் படம் வெளியிடப்பட்டது. இதனைப் பிரியந்தன் இப்க்கியுள்ளார். பிரியந்தன் இயக்கத்தில் உருவான மழை என்னும் பாடல் வெளியிடப்பட்டது.
நிகழ்வின் இறுதியில் 2015 ஆம் ஆண்டுக்கான கலண்டர்களை ஸ்ரார் மீடியா கலையகத்தின் தலைவர் பிரியந்தன் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கினார். (வ-402)

## முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச சபை இலக்கிய விழா





முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசசபை இலக்கிய விழா மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் இ.குருபரன் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி இவ்விழா இடம் பெற்றது. நிகழ்வின்போது ஒட்டுசுட்டான் சந்தியில் இருந்து பாரம்பரிய கலை இலக்கிய அணி வகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.
இதில் வற்றாப்பளை கண்ணகி அம்மனைக் குறிக்கும் கோவலன் கூத்தும், கற்சிலைமடுவைக் குறிக்கும் பண்டாரவன்னியன் வரலாற்று நாட்கமும், பாரம்பரிய பண்பாட்டுக் கலைகளும் இடம்பெற்றன.
முத்தொழில் என்ற வரலாற்று நூலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் க.பிரதாபன் வெளியிட்டு வைக்க அதன் முதல் பிரதியை வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி உஷா சுப்லிங்கம் பெற்றுக் கொண்டார்.
நூலின் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரன் நிகழ்த்தினார்.
பிரதம விருந்தினர்களாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் பாறூக், மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச.கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ-435)

# குற்றத்துக்கு தண்டனை

யாரங்கே?
ஆம்! பிரபு இதோ! வந்துவிட்டேன் என்றான் வாயிற்காவலன் - நரசிம்மன்.
அழைக்கப்பட்ட யாவரும் வந்துவிட்டார்களா என்றான் ஒப்பிலாமணி ஆம்! பிரபு எல்லோரும் வந்து விட்டார்கள்.
திரிலோக சாம்ராஜ்ய அதிபதியும், தேவாதிதேவ பிரதான நிறைவேற்று அதிகாரியுமான ஒப்பிலாமணி பதினொரு குற்றவாளிகளின் பட்டியல் ஒன்றை உரத்து வாசித்தார். அந்தப் பதினொரு பேரும் நிலைகுலைந்து எழுந்து நின்றனர்.
பற்பொடி பைரவன் வரலாம். உனது பெயரென்ன?
பட்டாக்கத்தி பைரவன். என்ன வேலை செய்தாய்? பற்பொடி செய்து மக்களின் பற்களை வெண்ணிறமாக்கினேன்; சுகமாக்கினேன். பட்டாக் கத்தி என்று ஏன் உன்னை அழைக்கின்றார்கள்? வேள்விக்கு நான் தான் வாள் செய்து கொடுக்கிறபடியால் காரணப் பெயர் பிரபு பைரவா! ஒரு நாட்டினுடைய மக்களின் பிரதானமான வாயையும் பற்களையும் உனது பற்பொடி விநியோகத்தால் நோய்வாய்ப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் ஆலயங்களில் மிக மிகக் கொடூரமாக ஆடுகளையும், கோழிகளையும் பலிகொடுக்கவும், வெட்டிச் சரிக்கவும் நீ தான் கத்தியையும், பென்னாம் பெரிய வாளையும் செய்து வேள்விக்கு முக்கிய காரணமாக இருப்பதனால், நீ ஆட்டுக்கடாவாகப் பிறக்கக் கடவாய் அது மட்டுமல்ல; அதற்கடுத்த பிறப்பாக நீ சாப்பிடவே முடியாதபடி பற் சூத்தையோடு இளமையிலே பல்லும் சொல்லும் போகக் கூடியதான வேதனையடைந்து, முதுமையடைந்து மீண்டும் இங்கு என்னிடம் வருவாயாக. அப்போதும் நீ திருந்தா விட்டால், நரக லோகத்தில் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கக் கடவாய். பைரவா! இப்பொழுது நீ ஆட்டுக்கடாக் குட்டியாகப் பிறக்கின்றாய் இதோ! பூமிக்குச் செல்கின்றாய். சொன்னதுதான் தாமதம் இலங்கையின் வடபால் அமைந்த வலி.வடக்கில், அழகான ஆட்டுக்குட்டி பிறக்கிறது. வேள்விக்காக அந்தக் குட்டி நேர்த்தி வைக்கப்படுகிறது.
யாரங்கே?
கல்யாணராமன் பீதாம்பரம் வரலாம்
வணக்கம் ஐயா!
நீ என்ன வேலை செய்து இங்கு வந்துள்ளாய்; நான் ஊருக்கு பெரியவர். பீதாம்பரம் உன்னைப்பற்றி பல முறைப்பாடுகள் வந்துள்ளது. மட்டுமல்ல குவிந்து கிடக்கின்றன.
முதலாவது குற்றச்சாட்டு: யாவற்றிலும் பலவீனமான நீ பல லட்சங்களை மிகவும் தந்திரமாகச் சூறையாடி இருக்கின்றாய். அவையாவும் பொதுப் பணமே. அன்பளிப்பு என்று சொல்லி உனது பெயரிலே உனக்காக வரவு வைத்திருக்கின்றாய்.
அவருக்கு உவருக்கு எவருக்குமே பணத்தை அள்ளிக் கொடுப்பதற்கு உனது வருமானம் போதாமலிருக்கும் போது, யார்தந்த பணத்திலிருந்து உபகரிக்கிறாய்? வாய் திறந்தால் பொய். மேலதிக உனது வருமானம் ஒரு மாதம் இரண்டு லட்சத்துக்கு மேல் வரும் நிலையில் அது பற்றி மௌனம் காத்திருக்கிறாய் எப்படி? அதுவுமல்லாமல் வால் பிடித்து பந்தம் பிடித்து, விழுந்து கும்பிட்டு, பசுத் தோல் போர்த்த புலி போல சிலரை வதம் செய் துள்ளாய். உன்னைக் கேள்வி கேட்பவர்களை யாருமே கண்டு பிடிக்காத விதத்தில் கொலை செய்து நல்ல மனுசன் போல ஊருக்குப் பெரியவராக, உபதேசம் வேறை. அதுமட்டுமா, ஒருவரின் மனைவியை பல தடவை நீ கவர்ந்தது மட்டுமல்ல, அவளின் கண வனின் மரணத்துக்கும் காரணமாயிருந்திருக்கின்றாய். நீதிமன்றத்துக்குப் போகாமலே ஆண்டவன் தந்த தண்டனையை இன்னுமே உணர முடியாத உனக்கு ஏற்ற தண்டனை இதோ!
பெட்டை நாயாகப் பிறப்பாயாக; கடிவாங்கி, அடிவாங்கி குட்டிகள் ஈன்று உழல்வாயாக!
யாரங்கே!
அலுப்பர் எல்லிப்போலை வரலாம் அலுப்பர் வந்து
ஒப்பிலாமணியின் கால்தொட்டு வணங்குகின்றார்.
அடே அலுப்பா! எழுந்திரு இவ்வுலகில் யாரையுமே விழுந்து கும்பிடாதே. ஏனென்றால் நீ ஒரு சுத்த ஏமாத்துக் காரனாகக் கணிக்கப்படுவாய். பூமியில் இதை நீ செய்து பல களவுகளில் இருந்து தப்பித்து இருக்கிறாய். பட்டம் பதவிக்காக, பலரின் தலையின் மேல் நடந்து அவர்களின் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அரசியல் பின் கதவால் கதிரை பிடித்து குதிரை பிடித்து, ஏறி இறங்கி கடமையைத் துஷ்பிரயோகம் செய்தது மட்டுமல்ல, அது, இது, உது என்று சொல்லி பணமோசடியில் வலுபக்குவமாக உத்தமராக ஏமாற்றியிருக்கின்றாய். மற்றும் அரசு சொத்துக்களை வகைதொகையின்றி விற்றுக் காசாக்கிச் சொகுசு வாழ்வு வாழ்ந்திருக்கின்றாய்.
ஆம்! உனக்கு அதியுயர்ந்த தண்டனையாகத் தவளையாகப் பிறந்து பாம்பின் வாயகப்பட்டு மீண்டும் இங்கு வருவாயாக நிற்காதே போ!
யாரங்கே?
பஞ்சரத்தினம் பொன்னாபரணம் மற்றும் முத்துப்பிள்ளை தவிடுபொடி ஆகிய இருவரும் கசிப்பு, சாராயம், சிகரெட், பீடா விற்று சமூகத்தைக் குட்டிச் சுவராக்கியமைக்காகவும், பலரது மரணங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியதற்காகவும், மண்ணிலே புழுக்களாகப் பிறந்து அழுந்துவீர்களாக.
யாரங்கே?
திருமதி பன்னீர்ச்செல்வம், பட்டுச்சோலை தென்னவன் குண்டுமணி, செல்வி சிங்காரவேலன்
மல்லிகைப்பூ மூவரும் வரலாம். மூவரும் விடுதியொன்றை நடத்தி பலரை தகாத நடத்தையில் ஈடுபடுத்தியமைக்காக மூவரும் அலிகளாகப் பிறக்கக் கடவீர்களாக! ஆணுமற்று பெண்ணுமற்ற பிறப்புக்களால் வதைக்கப்பட்டு ஒதுக்கப்படுவீர்களாக.
யாரங்கே!
கறுப்பண்ணா -மம்பட்டியான்,
கருப்பட்டி- பனாங்கட்டி,
பேதுருமலை- பூவரசு
மலையரசு- ஆவலாதி, நால்வரும்
சிறுவர், சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தமையால் நால்வருக்கும் முதலைக்குளம் தயாராக இருக்கிறது. அதனுள் விழக்கடவீர்களாக இத்துடன் இந்த மன்று கலைகிறது. மிகுதி நாளை விசாரணைக்கு எடுக்கப்படும்.

(யாவும் கற்பனை)

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

## குரு சிஷ்யன்



முன்னொரு காலத்தில் புகழ்பெற்ற குரு ஒருவர் இருந்தார். அவரிடம் இளைஞன் ஒருவன் சீடனாக இருந்தான். தன்னுடைய சுற்றுப்புறத்தைப் பற்றியோ, தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களைப் பற்றியோ யோசிக்க மாட்டான்.
குருகுலத்திற்கு வந்து போகிறவர்கள் அவனைப் பார்த்துவிட்டு, இவன் பூமிக்குப் பாரம், சோற்றுக்குத் தெண்டம் என்று ஏளனம் பேசினர். அவனைப் பற்றி சுவாமிகளிடம் குறை கூறினர்.
சுவாமிகளின் பார்வையோ வேறுவிதமாய் இருந்தது. அவருடைய கண்ணுக்கு அந்த இளைஞன் ஞானானுபவத்தில் திளைப்பவனாகவே தெரிந்தான். அவனுடைய அறிவு தீட்சண்யத்தை அவர் சரிவரப் புரிந்து கொண்டிருந்தார். எனவே, தம்முடைய வாரிசாக அவனைக் கருதி வந்தார்.
அன்று நள்ளிரவு நேரம். குருநாதர், தம்முடைய மாணவர்கள் தங்கியிருந்த இடத்துக்கு வந்தார். அங்கே அந்த இளைஞனைத் தவிர மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில், அவர்கள் படித்த புத்தகங்கள் கிடந்தன. அவனைத் தேடிக்கொண்டு வெளியே வந்தார் குருநாதர். அவன், கொடும்பனியில் நட்டநடு வழியில் படுத்திருந்தான். அவனருகே, ஒரு சுவடி நூல் இருந்தது. அதில் ஆங்காங்கே, அவன் எழுதிய விளக்கக் குறிப்புகளும் காணப்பட்டன. அவற்றை மேலோட்டமாய்ப் பார்த்த குருநாதர் வியப்புற்றார். தூங்கிக் கொண்டிருந்த சீடனை தொந்தரவு செய்ய விரும்பாமல், தன்னுடைய மேலாடையை எடுத்து அந்தச் சீடனுக்கு போர்த்தினார். சுவடிக் கட்டுடன் உள்ளே சென்றார். இரவு நெடுநேரம் வரை சீடனின் குறிப்புரைகளை அவர் அக்கறையோடு படித்தார். தமக்குள் பாராட்டிக் கொண்டார்.
பொழுது விடிந்தது. கண்விழித்தான் இளைஞன். பக்கத்தில் சுவடிகளைக் காணவில்லை. குருவின் மேலாடையை யாரோ அவன் மீது போர்த்தியிருந்தனர். மாணவர்களில் யாரேனும் அந்தக் குறும்புச் செயலைக் செய்திருக்க வேண்டும் என்று பட்டது. ஆனாலும், குருவின் மேலாடையை இரவு முழுதும் தான் போர்த்திக் கொண்டிருந்தோம் என்பதே அவனுக்கு நடுக்கத்தைக் கொடுத்தது. குருவிடம் மன்னிப்பு கேட்பதற்காக அவருடைய அறைக்குச் சென்றான் இளைஞன். குருநாதர் அவனை வரவேற்று, நீதான் இதையெல்லாம் எழுதியதா? என்று அன்புடன் கேட்டார்.
ஐயனே! நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் என்னை மன்னிக்க வேண்டும்!
என்று கூறியபடி, குருவின் பாதங்களில் விழுந்து வணங்கினான்.
தனது சீடன் மற்றவர்கள் நினைக்கிற மாதிரி ஒன்றும் மந்தபுத்திக்காரன் அல்ல; அவன் ஞானவான்! என்று எல்லோரிடமும் பெருமையாய் சொன்னார் சுவாமிகள். அன்று முதல் அந்த இளைஞனை தம்முடைய முதன்மைச் சீடராக அறிவித்தார் குரு.
அந்தச் சீடர்தான் பிற்காலத்தில் ஸ்ரீ ராகவேந்திரர் என்று உலகோரால் வணங்கிப் போற்றப்படுபவர். தம்முடைய சீடர்களின் திறமையையும், திறமையின்மையையும் குருநாதர் சரிவரப் புரிந்து கொண்டிருப்பார்.



## றோசாப்பூ

சின்னச் சின்ன றோசாப்பூ
சிவந்த நிறத்தில் றோசாப்பூ
பசிய நிறத்தில் றோசாப்பூ
இதழ் இதழாய் றோசாப்பூ
இதமான றோசாப்பூ
எந்த நிறத்தில் வேண்டுமா
அந்த நிறத்தில் றோசாப்பூ
பெண் பிள்ளையள் தலையிலும்
மாப்பிள்ளையின் சட்டைப்பையிலும்
மெதுவாக ஏறிக்கொள்ளும்
மென்மையான றோசாப்பூ
தெய்வ சந்நிதானத்தில்
தேவையான றோசாப்பூ
வாசம் வீசும் றோசாப்பூ
வாருங்கள் சேர்ந்து வாசம் நுகர்வோம்

கி.முகுந்தனா, தரம்-1
புற்றளை மகா வித்தியாலயம்.

## மனித உடல் பற்றிய தகவல்கள்

- மிக நீண்ட எலும்பு- தொடை எலும்பு
- உடலில் காணப்படும் மின்சாரத்தின் அளவு 25 வாற்ஸ்
- உடலின் மென்மையான உறுப்பு மூளை
- அமிலம் சுரக்கும் ஒரே இடம் இரைப்பை

## உலகில் சிறியவை

- தேசிய கீதம் -ஜப்பான்
- உயிரினம் - ரீங்காரப் பறவை
- தாவரம்- உல்பியா
- நாடு - நௌரூ
- சுதந்திரநாடு - வத்திக்கான்

ர.ஜோகினி, தரம்-9பி,
யா/வேம்படி ம.உ.பா.

# இது வேம்பின் கதை

மகாதேவா பகீரதன்



விதுரன் தன் வீட்டின் முன்றிலிலுள்ள வேப்பமரத்தின் நிழலின்கீழ் பந்து விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது தன்னை யாரோ கூப்பிடும் சத்தம் விதுரனுக்குக் கேட்டது. சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. அப்போது அந்த வேப்பமரத்திலிருந்துதான் சத்தம் வருவது தெரியவந்தது. என்ன ஆச்சரியம் ! அந்த வேம்புதான் அவனைக் கூப்பிட்டது. அந்த வேம்பு அவனுடன் உரையாடத் தொடங்கியது.

தம்பி நீ இந்த நிழலின்கீழ் விளையாடுவது இன்றுதான் கடைசிநாள். நாளை நான் இவ்விடத்தில் இருக்கமாட்டேன். என்னை வெட்டப் போகின்றார்கள். உனது தந்தை என்னை விலைபேசி ஒரு மர வியாபாரிக்கு விற்றுவிட்டார். அவர்கள் நாளைக்கு என்னை வெட்டி விடுவார்கள். நீ விளையாடும் இந்த இடம் நிழல் இல்லாமல் போய்விடும். இந்த இடம் குளிர்மை இல்லாத வெயில் சுட்டெரிக்கும் வெட்ட வெளியாக ஆகப் போகின்றது.

உனது தாத்தா தனது பள்ளிப்பருவத்தில் என்னை சிறு கன்றாக இங்கு நட்டு வளர்த்து விட்டார். என் நிழலில் தான் உனது தந்தையும் சிறு பிள்ளையாக இருக்கும்போது விளையாடுவார். இப்போது நீயும் விளையாடுகிறாய். ஆனால் இந்த நிழல், குளிர்மை எல்லாம் இன்றுடன் இல்லாமல் போகப் போகின்றது. பணத்துக்காக உனது தந்தை என்னை விலைபேசி விட்டார். நாங்கள் சூழலுக்கு செய்யும் நன்மைக்கு கோடி பணம் கொடுத்தாலும் ஈடாகாது. என்ன செய்வது? மனிதர்கள் ஏனோ தங்களின் இருப்புக்கு எங்களின் இருப்பு எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்து கொள்ளவே மாட்டார்களாம். எங்களை அழிப்பதன் மூலம் தாங்களாகவே தங்கள் இனத்துக்கு புதை குழி வெட்டுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள் இல்லை. இந்த வருடம் இவ்வளவு வறட்சி ஏற்பட்டதற்கு மனிதர்கள் எங்கள் இனங்களை வகை தொகை இன்றி அழித்தமையே மூல காரணமாகும். இனியும் அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ளவில்லையென்றால் அவர்களை இனி யாராலும் காப்பாற்ற முடியாது.

நீ சிறுவனாக இருக்கின்றமையால் எனது பயன் குறித்து அறிந்திருக்கமாட்டாய். எனவே எங்கள் இனத்தின் பயன் குறித்து உனக்குக் கூறுகின்றேன்.

உனது தாத்தா தனது காலத்தில் ஒன்றுவிட்டு ஒருநாள் காலையில் எனது குருத்து இலை (வேப்பம் தளிர்) இரண்டைத் தனது வாயில் போட்டு மென்று விழுங்குவார். இதை அவர் தனது இறுதிக்காலம் வரை கடைப்பிடித்து வந்தார். இதனால் அவருக்கு நீரிழிவு நோய் என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை. ஆனால் உனது தந்தை இப்போது என்னை மறந்தமையினால் நீரிழிவு நோயாளியாக மாறி மாத்திரையும் கையுமாக உள்ளார். ஆனால் உனது தாத்தாவின் காலத்தில் தற்போதைய நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் மெற்போமின், இன்சுலின் போன்ற மருந்துகளை அவர்கள் கண்ணால் கண்டது கூடக் கிடையாது. நான் பூத்துக் குலுங்கும் காலத்தில் உனது பாட்டி நான் சொரியும் பூக்களைச் சேகரித்து வைத்து வேப்பம்பூ வடகம் தயாரிப்பார். அந்த வடகத்தைப் பொரித்து உணவுடன் சேர்த்து உண்பார்கள். இதனால் அவர்களுக்கு குடற்புண் (அல்சர்) வருத்தம் வந்ததே இல்லை. அத்துடன் ஏதும் காய்ச்சல் வந்தால் எனது பட்டையை சிறிது உரித்து அதை நீரில் இட்டு அவித்து அந்த நீரை மூன்று வேளையும் பருகுவார்கள். மறுநாளே காய்ச்சல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

அது மட்டுமன்றி எனது விதைகளைப் பொறுக்கிச் சேகரித்து வைப்பார்கள். மாரி காலங்களில் நுளம்புகளை விரட்டுவதற்கு அந்த விதைகளைப் பயன்படுத்துவார்கள். சேகரித்து வைத்த விதைகளை இடித்து தூளாக்கி தணலில் போட்டுப் புகை உண்டாக்குவார்கள். அந்தப் புகைக்கு ஒரு நுளம்பு கூட வீட்டை அணுகாது. ஆனால் இப்போது இரசாயன நுளம்புவிரட்டிகளை (சுருள், ஆவி, திரவம்) பயன்படுத்துகின்றார்கள். இதனால் ஆஸ்துமா போன்ற சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால் எனது விதைகளைக் கொண்டு உருவாக்கும் புகை மூலம் எந்த சுவாச நோயும் நெருங்குவதில்லை. உனது தாத்தாவும் பாட்டியும் எனது கிளையிலிருந்து ஒடித்தெடுக்கும் சிறு குச்சியினால் தான் தான் பல் துலக்குவார்கள். இப்போது உள்ளதைப் போல பற்களின் வெண்மைக்கு ஒன்று, பற்சூத்தைக்கு ஒன்று, கூர் உணர்ச்சிக்கு ஒன்று, வாய் துர்நாற்றத்துக்கு ஒன்று என வித விதமான பற்பசைகள் அந்தக் காலத்தில் இருந்ததில்லை. எல்லாப் பிரச்சினைக்கும் எனது குச்சிதான் மருந்து.

நான் ஒரு வீட்டு வாசலில் நின்றேன் என்றால் அந்த வீடு எப்போதும் குளிர்மை நிறைந்ததாகவே இருக்கும். எனது இலை உதிர்காலமான சித்திரை, வைகாசி மாதங்களில் மட்டுமே அந்த வீடு ஓரளவு வெயிலின் தாக்கத்துக்கு உட்படும். மற்றைய காலமெல்லாம் குளிர்மைதான். இந்தக் காலத்து குளிரூட்டிகள் எல்லாம் எனது குளிர்மைக்கு ஈடாகமாட்டாது. இதை அனுபவித்துப் பார்த்தால்தான் என்னால் கிட்டும் குளிர்மையின் அருமை புரியும். நான் எனது இனத்தைப் பற்றித்தான் உன்னிடம் இவ்வளவு நேரமும் கதைத்தேன். ஆனால் மற்றைய இனத் தாவரங்கள் ஒவ்வொன்றும் எவ்வளவோ பயனை மனிதர்களுக்கு நல்குகின்றன. ஆனால் தற்கால மனிதர்கள் தான் இதைப் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை.

முன்னைய கால மனிதர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. தற்கால மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையில் பெரியதொரு இடைவெளி வந்துவிட்டது. அவர்களுக்கு இனி என்ன சொல்லியும் புரியப் போவதில்லை. கெடு குடி சொல் கேளாது. இப்போது உள்ளவர்களைத் திருத்தமுடியாது. இனிமேல் உங்கள் இளம் தலைமுறை என்றாலும் மரங்களை அழிக்காமல் இயற்கையுடன் இணைந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். உனது பாடசாலை நண்பர்களிடம் இவற்றை எல்லாம் சொல்லி அவர்களையும் மரங்களை நாட்டி வளர்க்கச் செய்வதுடன் நீயும் மரங்களை நட்டு வளர்த்தல் வேண்டும். மாணவர் சக்தி மாபெரும் சக்தி. நீங்கள் நினைத்தால் பசுமைப் புரட்சியை உருவாக்கலாம். நீங்கள் எல்லோரும் மரக்கன்றுகளை நட்டு வளர்த்து வந்தால் இயற்கை எழில் கொஞ்சும் பசுமை நிறைந்த ஒரு பிரதேசமாக இந்தப் பிரதேசத்தை மாற்றலாம். இதுவே எனது இறுதி ஆசையுமாகும்.

வேம்பின் கதையைக் கேட்ட விதுரனுக்கு மனதில் புது உத்வேகம் பிறந்தது. நான் நாளையே பாடசாலை சென்று எனது நண்பர்களிடம் இவற்றை எல்லாம் கூறி நாங்கள் எல்லோரும் மரங்களை நட்டு வளர்ப்போம். எமது பிரதேசத்தை மரங்கள் நிறைந்த பசுமையான பிரதேசமாக மாற்றுவோம். அத்துடன் உன்னை தறிக்க வேண்டாம் என்று எனது தந்தையிடம் நான் சொன்னால் அவர் அதை கேட்கப் போவதில்லை. எனவே நீ வெட்டிச் சாய்க்கப்பட்ட பிறகு நீ இருந்த இதே இடத்தில் இரண்டு மரக்கன்றுகளை வைத்து வளர்ப்பேன் என விதுரன் வேம்பிடம் உறுதி அளித்தான்.

மரங்களை வளர்க்க, பாதுகாக்க ஒரு புதிய தலைமுறை உருவாகப் போகின்றது என்ற மன நிறைவுடன் வேம்பு தனது நாளைய மரணத்தை மகிழ்வுடன் எதிர்கொள்ளத் தயாராகிவிட்டது.

# மரத்தால் உருவங்களை சிற்பமாக வடித்த உரு சிந்தனைச் சிற்பி ஏ.வி.ஆனந்தன்

கலைஞன் என்பவன் தானாகவே பிறக்கின்றானா? அல்லது உருவாக்கப்படுகின்றானா? என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு இடையில் சிற்பத்துக்காகப் பிறப்பிக்கப்பட்டவர் என்பதை யாழ்ப்பாணத்தில் மல்லாகம் என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.வி.ஆனந்தன் தனது மர சிற்பங்களின் ஊடாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

அமரர் ஏ.வி.ஆனந்தனால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் கொண்ட கண்காட்சி 13.09.2014 அன்று திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலாமுற்றத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சி எதிர்வரும் 13.11.2014 வரை நடைபெறவுள்ளது.

ஈழத் தமிழர்களின் மரச் சிற்பக்கலை என்பது கோயில்களோடும், பயன்பாடு கருதியும் அமைக்கப்படும் பொருள்களோடு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றிலிருந்து விடுபட்டு கலைக்குரிய நோக்கோடு மரச் சிற்பங்களை அமைக்க முற்பட்டதை ஏ.வி.ஆனந்தனின் சிற்பங்கள் புலப்படுத்துகின்றன.

இவர் ஓர் இறைபக்தி நிறைந்த தொண்டன். தொழில் முதல்வன், நடிகன், பாடகன், இசைக் கருவி மீட்போன்,கவிதைகள் யாப்போன், வர்த்தகத்துறையில் வித்தகர், பல தொழில்களை துறைபோகக் கற்றவர். நாடகத்துறையில் பிரமாண்டமான கண்கவர் நாடக மேடைகளை அழகுற நிர்மாணிப்பவர். காட்சியமைப்பாளர், பட வரைஞர், மரத்தால் உருவங்களைச் சிற்பமாகச் சமைக்கும் அற்புதச் சிற்பி. இவரால் உருவாக்கப்பட்ட சிற்பமொன்று ரோமாபுரி வத்திக்கான் கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பது எமக்கு பெருமை தருவதாகும் என ஏ.வி. ஆனந்தன் பற்றி "பேராசிரியர் மரியசேவியர் அடிகள்" குறிப்பிட்டதில் இருந்து ஏ.வி.ஆனந்தனிடம் சிற்பம் வடிவமைப்பது தொடக்கம் பல்வகைத் திறமைகள் காணப்பட்டன என்பது புலனாகிறது.

ஏ.வி.ஆனந்தனின் சிற்பங்கள் சமூக ஊடாட்டத்தின் வெளிப்பாட்டைக் காட்டி நிற்கின்றன. நாதஸ்வரக் கூட்டம், சுனாமி போன்றவற்றை இதற்குச் சிறப்பான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும்.

மேலைத்தேய நவீன ஓவியரான பிக்காசோ ஒரு தடவை ஸ்பானிய உள்நாட்டுப் போரின்போது குவர்ணிக்கா என்ற நகரத்தின் மீது ஜேர்மனிய குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலின் விளைவுகளை நேரில் கண்ணுற்றார். இதனால் அவரது மனதில் ஏற்பட்ட உள்ளக் குமுறலை வெளிப்படுத்த குவர்ணிக்கா உலகப் புகழ் பெற்ற ஓவியத்தைப் படைத்தார். இதைப் போலவே இலங்கையில் குறிப்பாக வடபுலத்தில் சுனாமி ஏற்படுத்திய விளைவுகளை நேரில் பார்த்ததன் விளைவாக ஏற்பட்ட உளத்தாக்கத்தை 'சுனாமி' என்ற பிரமாண்டமான மரச்சிற்பத்தினூடாக வெளிப்படுத்தியிருந்தார் ஏ.வி.ஆனந்தன்.





திருமறைக் கலாமன்றத்தின் முக்கிய அங்கத்தவராக விளங்கிய ஆனந்தன் இலங்கையில் மட்டுமன்றி ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிச்ஸர்லாந்து, லண்டன், இத்தாலி போன்ற நாடுகளிலும் தனது சிற்பக் கண்காட்சிகளை நடத்தியுள்ளார். ஜேர்மனியில் 'சிந்தனைச் சிற்பி' என்ற விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

இறைவனின் சிருஷ்டிப்பில் உருவான கலைஞன் இறைவனையே சிற்பமாக, ஓவியமாக சிருஷ்டிக்கிறான். அவனது உடல் அழிந்தாலும் அவனது படைப்புக்களூடாக என்றும் வாழ்ந்து கொண்டிருப்பான்.

து.துசியந்தன்,
ஆசிரிய ஆலோசகர்(சித்திரம்),
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.



# வியர்ப்பதைத் தடுக்க அறுவை சிகிச்சையா?

எமது உடலில் ஏற்படும் வியர்வையை முற்றிலுமாக தடுக்க தற்போது ஒரு புதிய மருத்துவ வசதி கிட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. மனித உடலின் வெப்பத்தைக் குறைப்பதற்காகவும், சமநிலை செய்யவுமே எமது உடலில் இருந்து வியர்வை வெளியேறுகிறது.

ஆனால் வியர்வையும் அதன்மூலம் ஏற்படும் நாற்றத்தையும் விரும்பாத சிலர் தங்கள் உடலில் வியர்வையை தடுக்க பல உத்திகளைப் பயன்படுத்துகின்றனர்.

அதாவது எந்நேரமும் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருப்பது, டியோடரண்ட் பயன்படுத்துவது போன்ற சில செயல்கள் மூலம் தமது உடலில் சுரக்கும் வியர்வையைத் தற்காலிகமாக தடுத்து நிறுத்துகின்றனர். மேலும், மனித உடலில் அனைவருக்கும் அக்குளில் வியர்வைச் சுரப்பிகள் அதிகம் இருப்பதால் அங்கு வியர்வை சுரப்பதும் அதிகமாக இருக்கிறது.

இந்த நிலையில் வியர்வையை அறவே விரட்ட தற்போது இரண்டு வகையான மருத்துவ சிகிச்சைகள் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

**பொடாக்ஸ் ஊசி**

அதில் ஒன்று, பொடாக்ஸ் என்ற விலை மதிப்புள்ள ஊசியை அக்குளுக்கு கீழே போட்டுக் கொள்வது. அதாவது அக்குளுக்கு சற்றுக் கீழே இருக்கும் வியர்வை நாளங்களைக் கண்டுபிடித்து, 12 முதல் 15 இடங்களில் இந்த பொடாக்ஸ் மருந்தைச் சிறிது சிறிதாக ஊசி மூலம் செலுத்தவேண்டும். இவ்வாறு அந்த மருந்தைச் செலுத்திய சிறிது நேரத்துக்குள்ளேயே எமது உடலில் உரிய வித்தியாசம் தெரியும்.

மேலும், இந்த சிகிச்சையை மேற்கொள்ளும் 95 சதவீத மக்களுக்கு 48 மணி நேரத்துக்குள் வியர்வை முழுவதுமாக நின்றுவிடுகிறது. பின்னர் ஒரு வார காலத்தில் உடலில் வியர்வையும், நாற்றமும் ஏற்படுவது முற்றிலுமாக நின்றுவிடும்.

இந்த ஊசியை ஒரு முறை போட்டுக்கொண்டால் ஒரு வருடத்துக்குப் பயன் தரும் என்றும் மேலும் தேவையெனில் மீண்டும் ஊசி போட்டுக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் மருத்துவர்கள் பலர் இந்த மருந்தால் உடலில் ஏகப்பட்ட பக்க விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த எச்சரிக்கை எதையும் காதில் வாங்காமல் இந்த சிகிச்சைக்காக மருத்துவமனையில் காத்திருப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

**வியர்வை நாளங்களை செயலிழத்தல்**

இது ஒருவகை சிகிச்சையெனில் மற்றொரு சிகிச்சைமுறை ஒன்று உள்ளது. அந்தச் சிகிச்சையில் உடலில் உள்ள வியர்வை நாளங்களைக் கண்டுபிடித்து அறுவைச் சிகிச்சை மூலம் அவற்றைச் செயலிழக்கச் செய்து விடுகின்றனர்.


25 முதல் 45 ஆயிரம் ரூபா வரை செலவாகும் இந்த அறுவைச் சிகிச்சை முடிந்த பின்னர் எமது உடலில் வியர்வை வரவே வராது.

மருத்துவர்கள் இது குறித்துக் கூறுகையில், எமது உடலின் வெப்பத்தைக் குறைப்பதற்காக இயற்கையால் உருவாக்கப்பட்டது தான் வியர்வை. அதனை இவ்வாறு செயலிழக்கச் செய்வதால் எமது உடலில் ஏற்படும் சாதாரண எரிச்சல், வெப்பம் போன்ற உணர்வுகளைத் தாங்கிக் கொள்வது மிகக் கடினமாகிவிடும்.

அதேசமயம் வீக்கம், தலைவலி, கழுத்து வலி போன்ற பக்க விளைவுகளால் வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிட வேண்டிய நிலை ஏற்படும்.

மேலும், இயற்கை தேவையில்லாமல் உடலில் எதையும் உருவாக்கவில்லை என்றும் வியர்வை உடல் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

# தூக்கத்திலும் விழிப்புடன் செயற்படுகிறது மனிதமூளை




மனிதர்கள் தூங்கும்போதும் அவர்களது மூளை தொடர்ந்து விழிப்புடன் இயங்குகிறது என்று தெரிவித்திருக்கும் விஞ்ஞானிகள், வார்த்தைகளின் பொருள் புரிந்து அதற்கேற்ற செயல்களை செய்விக்கும் அளவுக்கு மனித மூளை, மனிதர்கள் தூங்கும்போதும் விழிப்புடன் செயற்படுகிறது என்று நிரூபித்திருக்கிறார்கள்.

கேம்பிரிட்ஜ் மற்றும் பரிஸைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஒரு ஆய்வை மேற்கொண்டனர். அதில் பங்கேற்பாளர்கள் விழித்திருக்கும்போது ஒரு வார்த்தைக் கட்டளையைப் பிறப்பித்து, அந்தக் கட்டளையை ஏற்று அந்த பங்கேற்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யும்படி பணிக்கப்பட்டார்கள். இந்தச் சோதனையின்போது பங்கேற்பாளர்கள் விழித் திருக்கும்போது செய்யப்பழகிய செயல்களை தூங்கும்போதும் அதே மாதிரி கட்டளை பிறப்பிக்கப்பட்டதும் தொடர்ந்து செய்தார்கள்.

இதன் முடிவில் மனிதர்கள் தூங்கும்போதும், அவர்களின் மூளை சிக்கலான அதேசமயம் தன்னிச்சையாக செய்யக்கூடிய செயல்களை செய்யும் என்பதை இந்த ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இந்த ஆய்வின் முடிவுகள் கரெண்ட் பயோலொஜி என்கிற விஞ்ஞான சஞ்சிகையில் வெளியாகியுள்ளது.

இந்த ஆய்வில் பங்கேற்றவர்களிடம் சில சொற்கள் பேசப்பட்டன. அந்த சொற்கள் குறிப்பிடுபவை விலங்குகளா அல்லது பொருள்களா என்று பங்கேற்பாளர்கள் பிரித்தறியவேண்டும். குறிப்பிட்ட சொல் விலங்குகளைக் குறிக்கும் சொல்லாக இருந்தால் அவர்கள் தங்களின் வலது பக்கத்தில் இருக்கும் பொத்தானை வலது கையால் அழுத்த வேண்டும். மாறாக சொல்லப்படும் சொற்கள் பொருள்களைக் குறிப்பனவாக இருந்தால் பங்கேற்பாளர்கள் இடது பக்கத்தில் இருக்கும் பொத்தானை இடது கையால் அழுத்தவேண்டும். இது தான் சோதனை.

இந்தப் பரிசோதனையை அவர்கள் விழித்திருக்கும் போது ஆரம்பித்த ஆய்வாளர்கள், அவர்கள் இருளான அறைக்குள் உறங்கும்போதும் அந்தச் சோதனைகளைத் தொடர்ந்தனர். பங்கேற்பாளர்கள் ஆழ்ந்த உறக்க நிலைக்குச் சென்ற பின்னரும் கூட, அவர்களிடம் இந்த வார்த்தை விளையாட்டு தொடர்ந்து நடத்தப்பட்டது. உறங்கிய நிலையில் இருந்த பங்கேற்பாளர்களும் தாங்கள் கேட்ட வார்த்தைகளுக்கு ஏற்ப வலது மற்றும் இடது கைகளில் இருக்கும் பொத்தான்களை மாற்றி மாற்றி அழுத்தியபடியே இருந்தனர். இந்த ஒட்டுமொத்த பரிசோதனையும், ஈஈஜி என்று ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் electroencepha logramn பயன்படுத்தி மூளையின் ஒட்டுமொத்த செயற்பாடும் பதிவு செய்யப்பட்டது.



இந்தப் பரிசோதனையின்போது பங்கேற்பாளர்கள் தூங்கிய பிறகு அவர்களிடம் புதிய சொற்களைப் பயன்படுத்தியும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் புதிய சொற்களை வகைப்படுத்த மூளை கூடுதலாக வேலை செய்யும் வகையிலான சொற்களாக அவற்றை விஞ்ஞானிகள் தெரிவு செய்திருந்தனர். அப்படியிருந்தும் தூக்கத்தில் இருந்தவர்களின் மூளை இந்த புதிய சொற்களையும் சரியாகத் தரம்பிரித்து அதற்கேற்ற சரியான பொத்தான்களை அழுத்தச் செய்தது. ஒரேயொரு வித்தியாசம் இந்தப் புதிய சொற்களைத் தரம்பிரிப்பதற்கு மூளைக்கு கூடுதல் நேரம் தேவைப்பட்டது.

இந்த ஆய்வை மேற்கொண்டவர்களில் ஒருவரான பரிஸைச் சேர்ந்த சித் கவ்தெர், இதுவரை தாங்கள் நம்பியிருந்ததைவிட தூங்கும்போதும் மனிதர்களின் மூளை கூடுதல் விழிப்புடன் இருப்பதை இந்த ஆய்வுகள் நிரூபித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

**பெயரைச் சொல்லி அழைத்தால் விழிப்பு வருவது ஏன்?**

ஒருவர் தூங்கும்போதும் கூட அவரது பெயரைச் சொல்லி அழைக்கும் போது அவர் விழிப்படைவதும், கடிகாரத்தின் குறிப்பிட்ட அலார ஒலிக்கு ஒருவர் எழுந்துகொள்வதும் கூட இதே காரணத்தின் அடிப்படையில் நடக்கும் மூளையின் செயற்பாடுகளே என்றும் அவர் விளக்குகிறார்.



ஒருவர் தானாகச் செய்யக்கூடிய எந்த ஒரு செயலையும் அவர் உறங்கும் போது நிலையில் கூட அவரது மூளை செய்ய வல்லது என்பதை தங்களின் ஆய்வுகள் உறுதி செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுவாக மனிதர்கள் தூங்கினாலும் அவர்களின் மனச்சாட்சி தூங்காது என்பார்கள். சமூக வியலாளர்கள். அறிவியலாளர்களின் இந்த ஆய்வின் முடிவுகளோ மனிதர்கள் தூங்கினாலும் அவர்களின் மூளைகள் விழிப்புற்றே இருக்கின்றன என்பதைக் காட்டியிருக்கின்றன.

# அதிவேகம் தேவையா?



வீதிகளில் சரியான வழியில் காரில் செல்பவர்கள் பிரயாணம் சுகமாக இருக்கவேண்டும் என்று நினைப்பதில்லை. அடுத்தவர் முந்திச் சென்றால் நாமும் மிக வேகமாக பறக்கிறோம். அடுத்தவர் நேரம் நல்லதாக இருக்கும். அவர் போய்க் கொண்டேயிருப்பார். நாம் ஒரு ஓரத்தில் குப்புற அடிக்க விழுந்து கிடப்போம். தேவையான இடத்தில் வேகத்தைக் கூட்டி, அவசியமான இடங்களில் வேகத்தைக் குறைத்து, ஏன் சிறிது நிறுத்திக்கூடச் சென்று, காரோட்டும் ஒவ்வொரு கணத்தையும் அனுபவித்து மகிழ்ந்து, பஸ்களை சரியான அளவிலே ஓவர்டேக் செய்து, வீதியோரக் கடைகளில் தேநீர், வடை சாப்பிட்டு நமது பிரயாணத்தை மட்டும் கவனித்துப் போய்க்கொண்டே இருப்போமானால் பிரயாணம் சிறப்பாக அமையும். தற்போதைய காலகட்டத் தில் மன அழுத்தம் பற்றிப் பரபரப்பாகப் பேசுவதென்பதே ஒரு நாகரிகமாகிவிட்டது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நாளிதழ்களிலும், இதர அச்சு ஊடகங்களிலும், சுவர் விளம்பரங்களிலும், மற்றும் தொலைக்காட்சிகளிலும் மன அழுத்தப் பிரச்சினைகளுக்கான காரணங்களும், தீர்ப்பதற்கான வழிவகைகளும் சொல்லப்படுகின்றன.

இந்த லௌகீக வாழ்க்கையில் பொருள் சார்ந்த விடயங்களும், வசதிகளும் அதிகரித்து விட்டன. ஆனால் மனம் சார்ந்த விடயங்கள் அமுக்கப்பட்டு விட்டன. அதன் விளைவே இந்த மன அழுத்தப் பிரச்சினைகளும், புற்றீசல் போலக் கிளம்பிவரும் கவுன்சிலிங் சென்டர்களும் எமக்கு எப்போதுமே தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்த கதை தான். நியூட்டனின் மூன்றாம் விதிப்படி, ஒவ்வொரு செயலுக்கும் வினைக்கும், சரிசமமான எதிர்வினை உண்டு. இதைப் பெரும்பாலானோர் உணர்வதில்லை.

மிக முக்கியமாக, கல்வி கற்றவர்கள்தான் இப்பேர்ப்பட்ட மன நிலையை அடைகின்றனர் என்பது அதிர்ச்சியில் ஆழ்த்தும் செய்தி. கல்லாதோர்க்கு இருப்பதே வாழ்வு; இல்லாவிட்டாலும் நிறைவு என்ற மனப்பான்மை உள்ளது. இதனால் அவர்கள் அதிகமாகப் பாதிப்புக்குள்ளாவதில்லை. வாழ்க்கையின் அனைத்து புறத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்குண்டான வசதிகள் உழைப்பவர்களுக்கு கை நிறைய உண்டு.

எங்கெங்கிலும் உடனே தொடர்பு கொண்டு தகவலைத் தெரியப்படுத்த செல்போன், ஓரிடத்துக்கு உடனே போய்ச் சேர பேருந்து வசதிகள்; இருசக்கர வாகனம், காலை இரவு சாப்பாட்டுக்கு இட்லி தோசைக்கு, மாவுக்கடை பக்கத்திலேயே. இணையத்தில் கிடைக்காத தகவல்களே இல்லை, கேளிக்கைக்கு தொலைக்காட்சி, இன்னும் என்னென்னவோ....ஒரு அடிப்படை விடயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிவதை விட, புரிந்து கொள்ள வேண்டும். புரிவதையும் தாண்டி, மனதில் பசுமரத்தாணி போல இருத்த வேண்டும். இந்நிலவுலக வாழ்வுக்குத் தேவை ஆரோக்கியமான உணவு, உடுத்த உடை, இருக்க உறைவிடம். இதைத் தாண்டிய அத்தனை விடயங்களுமே மேலதிகம்தான். இந்த மேலதிகங்களில் ஏற்படும் மேடு பள்ளங்கள் தாம் நம் மன ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கின்றன. கவனித்துப் போய்க்கொண்டே இருப்போமானால் பயணம் சுகிக்கும். வாழ்வும் தித்திக்கும்.



எம்மை முந்திக் கொண்டு செல்பவர்களை எமது போட்டியாளர்களாக நாம் ஏன் பாவிக்க வேண்டும். நமது பணி எதுவோ அதைச் செய்து, போக வேண்டிய இடம் எதுவோ அதைப் போய்ச் சேர வேண்டியது தானே! முந்திச் செல்பவர்கள் மட்டுமல்ல.. எதிரில் நம்மை நோக்கி வருபவர் களையும் கவனித்து, அவர்கள் வேகத்தையும் கணித்து, அதற்கேற்றாற்போல நாமும் வேகத்தை சரி செய்துகொண்டு இனிமையாய், மனநிறைவாய் குடும்பத்தோடு வைபவங்களுக்குச் சென்று கொண்டாடி மகிழ்வதென்பது; எம்மால் முடியும். எல்லாமே நாம் உருவாக்கிக் கொள்வதுதானே! எடுப்பதும் சரி, தொடுப்பதும் சரி, விடுப்பதும் சரி. வினையாற்றுபவன் தன் வினையைத் தானே களைய வேண்டும்.

மன அழுத்தத்துக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணங்கள் இருக்கின்றன. எல்லாக் காரணங்களையும் பட்டியலிட்டு அதற்குத் தீர்வெழுதுவதென்பது இயலாதது; தேவையில்லாததும்கூட.

என்ன.. பயணத்துக்குத் தயாரா? மேலதிகங்களில் ஏற்படும் மேடு பள்ளங்களில் லாவகமாக வண்டியோட்டி ரசனையாய் நகர்த்துவோம், வண்டியை மட்டுமல்ல, வாழ்க்கையையும் நடத்துவோம்.

**எம்மால் முடியும். எல்லாமே நாம் உருவாக்கிக் கொள்வது தானே! எடுப்பதும் சரி. தொடுப்பதும் சரி. விடுப்பதும் சரி. வினையாற்றுபவன் தன் வினையைத் தானே களைய வேண்டும்.**

## வலையமைப்புத் தொழில்நுட்பம்

எந்த ஓர் அறிவியல் கண்டுபிடிப்பும், மனித சமூகத்தில் தாக்கம் ஏற்படுத்த, பல பரிணாம வளர்ச்சிகளை அடைவது உண்மை. வலையமைப்புத் தொழில்நுட்பமானது 1945 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பல பரிமாண வளர்ச்சிகளைக் கண்டு, இக்காலத்தினருக்கும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் ஏற்ற ஒரு கண்டுபிடிப்பாகத் திகழ்கின்றது

1945 ஆம் ஆண்டில் வானிவர் புஷ் என்பவர் புவி we may think என்ற கட்டுரையை அட்லாண்டிக் மாத இதழில் வெளியிட்டார். அத்தோடு கனிப்பொறி மயமாக்கப்பட்ட நூலகத்தைப் பற்றியும் எழுதினார். 1948 ஆம்ஆண்டு நோர்பட் வியூனர் என்பவர் சைபரனடிக்ஸ் என்ற கொள்கையை கண்டறிந்தார். ஜனாதிபதி டிவிட் டீ எஸ். என்னோவர் ARPA என்ற ஏஜென்சியை அமைத்தார்.1965 ஆம் ஆண்டு டெட் நெல்சன் என்பவர் லிடரரி மெசின்ஸ் என்ற கட்டுரையின் மூலம் வோர்ட் வேல்ட் வைட் வெப் உருவாக அடித்தளமிட்டார். மேலும் இதே ஆண்டில்தான் தோமஸ் மேரில் மற்றும் லோரன்ஸ் ஜீராபர்ட்ஸ் போன்றோர் மசாசுசேட்ஸில் உள்ள (TX 2) கணினியை கலிபோர்னியாவில்உள்ள Q-32 என்ற கணினியோடு தொலைபேசி இணைப்பின் மூலம் இணைத்ததனாலேயே Wide Area Network WAN உருவானது மேலும் 1968 ஆம் ஆண்டில் டங்கிளாஸ் என்கின் பேர்ட் என்பவரே முதல் முதலில் ஹைபர் டெக்ஸ்ட் சிஸ்டத்தை உருவாக்கினார்.



1960 ஆம் ஆண்டு Arpanet என்ற வலையமைப்பு உதயமானது. பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவை தகவலைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் வகையில் இது வடிவமைக்கப்பட்டது.1969 ஆம் ஆண்டு நான்கு நொட் அல்லது ஹொஸ்ட் கணினிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1983ம் ஆண்டு அர்ப்பாநெட் புரொட்டோகோலைப் பயன்படுத்த ஆரம்பித்தது. இது நாளுக்கு நாள் வளர்ந்து உலகமெல்லாம் பரவியது.

அத்துடன் நின்றுவிடாமல் 1970 ஆம் ஆண்டு வலையமைப்பு குழுவால் நெட்வேர்க் கொண்ட்ரோல் புரொட்டோகோல் உருவாக்கப்பட்டது. இது அர்ப்பாநெட்டில் பயன்படுத்தப்படுகின்ற Host to Host புரொட்டோகோலைச் சார்ந்தது ஆகும். இதனைத் தொடர்ந்து 1972 இல் ஈமெயில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1978 ஆம் ஆண்டில் TCP ஆனது TCP / IP ஆக மாறியது. மேலும் வின்ட்செரீப், ஜோன் போஸ்டல் மற்றும் டானிகோகென் போன்றோரால் இன்டர்நெட் புரொட்டோவில் உருவானது. செய்திகளை டேட்டா கிராம்களாக மாற்றி இந்த புரொட்டோ கோலால் அனுப்புகின்றது. 1975 இல் டெட்நெட் உருவாக்கப்பட்டது. முதன்முதலில் உருவான பக்கெட் கொமர்சியல் சுவீட்சிங் நெட்வேர்க்காக டெல்நெட் அமைந்துள்ளது. வேறுபட்ட நகர மக்களை இணைக்கின்ற தொழில்நுட்பமாக டெல்நெட் அமைந்துள்ளது.

யுனைட்டெட் ஸ்டேட்ஸ் நெஷனல் சயன்ஸ் பவுண்டேஷன் NSFNET-ஐ உருவாக்கின. இதுவே இணையத்தின் உதயமாக இருந்தது. இது பிரின்ஸ்டன் பல்கலைக்கழக கணினி மையங்களையும், பிட்ஸ்பர்க் மற்றும் பென்சில்வேனியா கணினி மையங்களையும் மற்றும் பல பல்கலைக்கழகங்களையும் இணைத்தது. 1990 ஆம்ஆண்டில் NSFNET ஆனது SNET மற்றும் EVNET என்ற பிற நெட்வேர்க்களோடு இணைக்கப்பட்டது. WORLD WIDE WEB ஆனது 1990 இல் உதயமானது. இதே ஆண்டில்தான் டிம் பெர்னர்ஸ்லி என்பவர் Hypet Text Markup Language ஐ உருவாக்கினார். HTML மற்றும் LQa மற்றும் ENNஜி போன்றவை இன்டர்நெட்டை WORLD WIDE WEB ஆக மாற்றியது. தான் இன்டர்நெட் புரவ்சர் மற்றும் HTML டிம்பேனர்னாஸால் உருவாக்கப்பட்டது.